88

பொன்னி

15-12-52..PONNI..4.அணா

32
ஊ211, N47PN
N52-6-20
208417

பொங்கல் வாழ்த்து

பலவித நிறங்களில் அழகாக
அச்சிடப்பட்ட கவர்ச்சிகரமான
பொங்கல் வாழ்த்துக்கள்
விற்பனைக்குத் தயாராக
இருக்கின்றன.

மொத்தத் தேவைக்கு வியாபாரிகள்
உடனே எழுதக் கோருகிறோம்.

மாதிரி வேண்டுவோர் 8 அணு தபால் தலைகள் அனுப்புக

பொன்னி லிமிடெட்

த. பெ. எண். 1165 :: சென்னை—21

அடுத்த இதழில்

தாம்பத்தியம்
(சிறுகதைத் தொடர்ச்சித்திரம்)
வேம்பு

★

அழகி
(கவிதை)
சக்திச்சுடர்

★

மக்கள் மன்றம்

★

பேச்சு வழக்குகள்
(ஆராய்ச்சிக் கட்டுரை)
பி. எல். சாமி

★

ஆனந்ததீர்த்தன்
'ராஜ்யா'
இரா. கந்தசாமி
பிலோ இருதயநாத்
இரா. இளஞ்சேரன்
சம்பந்தன்

ஆகியவர்கள் எழுதுகிறார்கள்

9 JAN

கலைமகள் பொருளடக்கம்

மலர் 6 || டிசம்பர் 15, 1952 || இதழ் 20

திருவள்ளுவர் ஆண்டு 1983
மார்கழித் திங்கள் 1-ம் நாள்

அடுத்த இதழில் ... 1
யானையைக் கட்டித் தீனிபோட்டால்...! ... 2
தஞ்சை தில்வாரப்–
பாதுகாப்பு மசோதா ... 3
உலகக் கண்ணோட்டம் ... 6
கி. வா. ஜகந்நாதன் ... 9
பொழுது போக்கு ... 15
விருந்து ... 16
ஒற்றை ரோஜா (தொடர்கதை) ... 17
தங்கை ... 28
தோழியின் வேலை ... 32
ஒரே ரத்தம் ... 33
தாபம் ... 38
காகிதப் படகு (சிறுவர் தொடர் கதை) ... 41
தாம்பத்தியம் ... 48
எச். ஜி. வெல்ஸ் ... 56
முனி வீடு ... 58

208417

★

'முனி வீடு' சிறுகதைக்கு உரியது இவ்விதழ் அட்டைப்படம்.

யானையைக் கட்டித் தீனி போட்டால்............



சட்டசபையில், ஒரு அங்கத்தினருக்குப் பதிலளிக்கையில் 'சமயம் வரும்பொழுது, மதுவிலக்கை அகற்றி விடுவேன்' என்று ராஜாஜி கூறினர்.

808412

தஞ்சை நிலவாரப் பாதுகாப்பு மசோதா.

தஞ்சை நிலவாரக்காரர், பண்ணையாட்கள் பாதுகாப்பு மசோதா சென்ற மாதம் கூட்டுத் தேர்வுக் குழுவின் பரிசீலனைக்கு விடப்பட்டது. அக் குழு செய்த சில முக்கியமான திருத்தங்களுடன் அது சென்னை அரசியல் மன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மாநிலமெங்கும் பரந்து நிலவும் உணவு முடை, பஞ்ச நிலவரம் ஆகியவற்றை இந்த மசோதா தீர்த்து வைத்துவிடும் என்று யாரும் எண்ணமுடியாது. எண்ணவும் இல்லை. ஏனென்றால் இம் மசோதா தஞ்சை மாவட்டம் ஒன்றிலுள்ள அவசர நெருக்கடி நிலைமையைச் சமாளிக்கவே கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆயினும் தஞ்சை மாவட்டமே தென் இந்தியாவின் முக்கியமான உணவுத்தோட்டமாதலாலும், அங்கே நிலவாரக்காரர், நிலக்கிழாரிடையே மோதலும் நெருக்கடியும் ஏற்பட்டிருப்பதாலும் இந்த மசோதா அந்த அவசர நிலைமையைச் சமாளிக்கப் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. மாநிலத்தின் பரந்த உணவு நிலவரத்தைத் தீர்த்து வைக்கும் வகையில் அது ஒரு முதற்படியாகவும் நல்ல வழிகாட்டியாகவும் அமையக் கூடும். எனவே இது சட்டமாவதை நாம் பெரிதும் வரவேற்கிறோம்.

மசோதாவின் அவசியத்தை அரசியலார் நன்கு உணர்ந்துள்ளார்கள். ஒரு சில பெருநிலக்கிழார் தவிர, எல்லாக் கட்சியினரும் அதன் அவசியத்தையும் அடிப்படை நோக்கங்களையும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். மசோதாவுக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்புக்கள் பெரும்பாலும் மசோதா தேவையில்லை என்பதனால் அன்று; அது போதாது என்பதனாலேயே. அரசியலார் கொண்டு வந்த மூல வடிவத்தில் கூட்டுக் குழு செய்த திருத்தங்களும், கூட்டுக்குழுவில் எதிர்தரப்புக் குறிப்பு வரைந்தவர்களும் அதனை விவாதத்தில் எதிர்ப்பவர்களும் யாவரும் ஒரே திசையில்—நிலவாரக்கார், பண்ணையாட்கள் உரிமை நோக்கித்தான் பெரும்பாலும் சென்றிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மசோதாவுக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்புக்களை நாம் மூன்று கூறுகளாகப் பிரிக்கலாம். முதலாவது மசோதா, அவசர அவசரமாகக் கொண்டுவரப்பட்டுள்ளது; ஆர அமர இருந்து உருவாக்

கப்படவில்லை என்ற முறையீடு. இது பெரும்பாலும் பெருநிலக்கிழார் சார்பிலிருந்தே வரக்கூடியது என்னலாம். இரண்டாவது குறை சிறு நிலக்கிழார் சார்பானது. திரு. ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார் இக்குறை எழுப்பியுள்ளார். 'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கரிசிகூட மிஞ்சாது' என்ற தமிழ்ப் பழமொழியின் உண்மையை அவர் புள்ளி விவரங்களோடு எடுத்துக்காட்டி, நிலக்கிழாருக்கும் குடிவாரக்காரருக்கும் எதுவும் மிஞ்சாது என்று கருதுகிறார். ஆனால் மிகப் பெரும்பான்மையான எதிர்ப்பு குடிவாரக்காரர், பண்ணையாட்கள் உரிமைகளைப் பாதுகாக்க இம் மசோதா போதாது என்று கூறுபவர்களிடத்திலிருந்தே வருகிறது. இவர்கள் இம்மசோதா தஞ்சை மாவட்டத்துக்கு மட்டும் உரியதன்று, எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்றும் வற்புறுத்துகின்றனர்.

கூட்டுக் குழுவின் பரிசீலனைக்கு முன்பே வருமான அமைச்சர் திரு. மாணிக்கவேலர் மசோதாவின் குறுகிய தற்காலிகச் செயல் எல்லையைச் சுட்டிக்காட்டி அது இத்துறையில் ஒரு தொடக்க முயற்சியே என்பதையும் நினைவூட்டியுள்ளார். "இம்மசோதா சுப்பிரமணியம் ஆய்வுக் குழுவினர் ஆலோசனையின் மீது மொத்தக் குடிவாரப் பிரச்சினையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ற தவறான எண்ணம் பலருக்கு இருந்து வருகிறது. இந்த மசோதா இப்போது கவனிப்பதெல்லாம் நிலவாரப்பிரச்சினையைத் தீர்த்து வைத்துவிடும் முயற்சியல்ல; அதனைத் தீர்க்கும் முயற்சியைத் தொடங்கிவைப்பதே" என்று அவர் விளக்கம் கூறியுள்ளார்.

அரசாங்கத்தாரின் தொடக்கத் திட்டம் கடந்து, கூட்டுத் தேர்வுக்குழு குடிவாரத்தார் உரிமைகளைப் பாதுகாக்கப் பல மாற்றங்களைச் செய்துள்ளது. இடைக்காலப் பயறு சாகுபடியில் குடிவாரத்தாருக்கு ஐந்தில் மூன்று பங்கை ஐந்தில் நான்கு பங்காக ஆக்க முன்வந்துள்ளது. எருவிடும் செயற்கை உரங்கள் வகையில் வாரத்தார் முழுச் செலவும் தாங்குவதற்குப் பதில் நிலக்கிழார் 60 சதமானம் செலவிட வேண்டும் என்று கூட்டுக்குழு வகுத்துள்ளது. வெளியேற்றப்பட்ட வாரத்தினரைத் திரும்ப ஏற்றுக்கொள்ளும் வகையில் பழம் பாக்கி முழுவதும் தீர்ப்பதற்குப் பதிலாக ஓர் ஆண்டுப் பாக்கி தீர்க்க வேண்டும் என்று திருத்தியுள்ளது. தவிர, குடிவாரமற்ற பண்ணையாட்களுக்கும் நெல் விளைவு தவிர மற்ற விளைச்சல்களில் 24-ல் ஒரு பங்கு தரப்படுகிறது.

இருதரப்பாரிடையே சமரசம் செய்யும் எந்த முறையும் இரு தரப்பாருக்கும் முற்றிலும் திருப்திகரமாக இருக்க முடியாது. நில உடைமைக்காரர், வாரத்தார், பண்ணையாட்கள் என்ற முத்திற வேற்றுமை இருக்கும்வரையும் உழைப்பவர்களுக்கு உழைப்பின் பலன் முழுதும் உரியது என்ற நிலை ஏற்பட முடி-

யாது. உழைப்பவர் அதனை முழுதும் போராட்டத்தினால் மட்டும் பெற்றுவிடவும் முடியாது. அவர்கள் தங்கள் வாழ்க்கைத் தகுதிகளையும் சூழல்களையும் அந்நிலை ஏற்படுவதற்குரிய வரையில் மாற்றியமைக்கும்படி அந்தத் திட்டங்களில் முனைய வேண்டும்.

மறுபுறம் நில உடைமைக்காரரும் காலத்தின் போக்கை அறிந்து அதற்கேற்றபடி தம்மை மாற்றிக்கொள்ள வேண்டுமேயன்றி, காலக் கடிகாரத்தின் முள்ளை நிறுத்திவைத்து விடலாம் என்றோ, அல்லது பின்னோக்கித் தள்ளி வைக்கலாமென்றோ கனவு காணக்கூடாது. தற்போதைய மசோதாவில் அரசியலாரும் கூட்டுக் குழுவினரும் குடிவாரக்காரருக்கும் பண்ணையாட்களுக்கும் நெருக்கடி நிலைக்கேற்பச் சில செய்திகளில் விட்டுக் கொடுத்தாலும், வேறு பல செய்திகளில் நில உடைமைக்காரர் உரிமைகளை வலியுறுத்தியும் உள்ளனர். ஒரு வேலி நிலத்துக்கு உட்பட்ட நிலக்காரர்களை மசோதா பாதிக்கவில்லை. நெற்பயிர் வகையில் சுப்பிரமணியம் ஆய்வுக் குழு தந்த முடிவுப்படி நிலப்பாகுபாடு செய்யப்படவில்லை. நிலக்கிழார் இத்தற்காலிகத் திட்டத்தை ஏற்று நிலத்தில் உழைக்கும் தம் நாட்டு மக்களுடன் ஒத்துழைக்க வேண்டும்.

மசோதாவின் பெருங்குறை சமரச வழக்கு மன்றம் பற்றியதாகும். சமரச அதிகாரியின் தீர்ப்புக்குப் பின் மேல் வழக்குரிமை வருமானத்துறை வழக்கு மன்றத்துக்கு விடப்பட்டுள்ளது. பொது வழக்கு மன்றத்தின் மேலுரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. நிலக்கிழார், குடியானவர் ஆகிய இருதரப்பினரிடையிலுமே சட்ட வாசகங்களின் விளக்க வேறுபாடுகள் வருமிடங்களிலும், அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் இடங்களிலும் அரசியற் பணியரங்கத்தின் முடிவு பாதிக்கப்பட்ட தனிமனிதன் உரிமைகளுக்கும், சட்ட நுட்பங்களுக்கும் போதிய அளவு நீதி வழங்க முடியாது. அத்துடன் குடிவாரத்தார் ஏழைகளாதலால் அவர்கள் வழக்குகளை வழக்கறிஞர் வந்துதான் வாதாட வேண்டும் என்ற கட்டுப்பாடு பொருந்தாது. அவர்கள் சார்பில் பேராட்கள் வந்து வாதாடும் உரிமை இருக்கவேண்டும்.

தஞ்சை மசோதா தஞ்சையளவில் வரவேற்கத்தக்க ஒரு முயற்சி ஆகும். அதனை அயல் மாவட்டங்களுக்கும் அரசியல் மன்ற ஒத்துழைப்புடன் விரிவு படுத்த அதில் இடம் தரப்பட்டிருக்கிறது. ஆனால் வருமான மந்திரி குறிப்பிட்டபடி உண்மையிலேயே எல்லா மாவட்டங்களின் நிலப் பிரச்சினையையும் ஒரே அடிப்படையில் தீர்க்கும் திட்டங்களுக்கு அது பீடிகையாயிருக்க வேண்டும். படிப்படியாகவேனும் பெருநிலக்கிழமை, அறநிலக் கிழமை ஆகியவற்றை உழைப்பாளர் கிழமையாக்கும் மக்கள் தேசியத்துக்கு எல்லா முற்போக்குக் கட்சிகளும், எல்லாக் கட்சிகளின் முற்போக்காளர்களும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறோம். ★

உலகக் கண்ணோட்டம்

'வில்லன்'

அமெரிக்காவின் விபரீதப் போக்குகள்

அமெரிக்கா உலக சுதந்தரத்திற்காகவும் சமாதானத்திற்காகவும் உழைத்து வருவதாகச் சொல்லுகிறது. ஆனால், அது செய்துவரும் காரியங்களில் பல விபரீதப்போக்குடையனவாகவே உள்ளன. ஒரு நொடியில் லட்சக்கணக்கான மக்களைக் கொன்று குவிக்கவும் உலக நாகரிகத்தையே நாசமாக்கவும் வல்ல அணுகுண்டின் பிரயோகத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென உலக அறிஞர் அனைவரும் கூறிவருகையில், யுத்தத்தின்போது பிரயோகிக்கப்பட்ட முதல் அணுகுண்டைவிட 25 முதல் 50 மடங்கு வரையில் அதிக நாச சக்தி வாய்ந்த ஜலவாயு அணுகுண்டைக் கண்டுபிடித்துப் பல வெற்றிகரமான பரிசோதனைகள் அமெரிக்கா நடத்தி வருகின்றது. ருஷியாவை மிஞ்சிவிடவேண்டும் என்ற ஒரே எண்ணந்தான் அதற்கு. கம்யூனிஸ்ட் சீனாவின்மீது ஆயிரம் தப்புக்கள் கண்டுபிடிக்கலாம். ஆனால், நீண்டகாலமாக நடந்து வரும் கொரியா யுத்த நிறுத்தப் பேச்சுக்கள் முற்றுப்பெறாமலிருப்பதற்குக் கம்யூனிஸ்ட் சீனாவை மட்டந்தட்ட வேண்டும் என்ற அமெரிக்கக் கருத்தே காரணம். சில ஆயிரம் சீனக் கைதிகளைச் சீனாவுக்கே அனுப்பிவிட்டால் குடி முழுகியா போய்விடும்? இச் சிறு விஷயத்தில் தடை போட்டுக்கொண்டு லட்சக் கணக்கான கொரிய மக்களை யுத்தத்தின் பயங்கரங்களைத் தொடர்ந்தாற்போல் அனுபவிக்கும்படி செய்ய அமெரிக்காவுக்கு என்ன உரிமையுண்டு என்றுதான் கேட்கத் தோன்றுகின்றது. யுத்தக் கைதிகள் விஷயத்தை நடுநிலைமை தாங்கும் சர்வதேசக் கமிஷன் ஒன்றுக்கு விட்டுவிடலாமே என்று இந்தியா கூறும் யோசனையை ஏற்க அமெரிக்கா மறுப்பது விபரீதமான போக்கில்லாமல் வேறென்ன? 'அமெரிக்காவே! சோவியத்தைக் கவிழ்க்கச் சோவியத்துடன் நேராகப் போர் தொடு. கம்யூனிஸ்ட் சீனாவை மடக்க, சீனாவுடன் நேர்மையாகப் போர் செய். கம்யூனிஸத்தை ஒழிக்க கொரிய மக்களைப் பலியிட வேண்டாம். கொரியாவை விட்டு வெளியேறு. கொரிய மக்கள் தங்கள் தகராறுகளை எப்போதோ தாங்களாகவே தீர்த்துக்கொண்டிருப்பரே'—என்றுதான் சொல்லத் தோன்றுகின்றது.

அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் தலையிட்டு வருவது அதன் விபரீதப் போக்குகளில் ஒன்று. தனக்குக் கடன்பட்ட நாடுகளின் உதவி கொண்டு ஐக்கிய நாடுகள் சங்கத்தில் அமெரிக்கா தன் விருப்பப்படியே உலக விவகாரங்களை நடத்தி வருகிறது என்பது வெளிப்படை. ஐக்கிய நாடுகள் காரியாலய அமைப்பிலுமா அது தலையிடவேண்டும்? அமெரிக்கரில் சிலர் காரியாலய சிப்பந்திகளாக இருப்பதால் அமெரிக்கா காரியாலய சிப்பந்திகள் விஷயத்தில் அக்கிரமமாகத் தலையிட்டு வருகின்றது. இதன் காரணமாக,

சிப்பந்திகளில் முக்கியமான ஒருவர் தற்கொலை புரிந்துகொண்டார். காரியாலயப் பொதுக் காரியதரிசியான டிரிக்வி லீ ராஜிநாமா செய்துவிட்டார். அமெரிக்கா பல நாடுகளில் ஒன்றாக அடக்கமாக நடந்துகொள்ள வேண்டும். இல்லையேல், ஐக்கிய நாடுகள் சங்கத்தில் சேர்ந்த சுயமரியாதையுடைய நாடுகள் விலகிக் கொள்ள வேண்டும். சங்கக் காரியாலயத்தை அமெரிக்காவிலிருந்து எடுத்துவிட வேண்டும். உலக ஸ்தாபனம் அமெரிக்காவின் கைப்பாவையாக விடலாகாது.

இம்மட்டோ? அமெரிக்கா வாய் வேதாந்தம் பேசிக்கொண்டே நடுநிலைமை வகிக்கும் இந்தியாவின் தலையிலும் கை வைக்கப் பார்க்கிறது. இந்தியா அமெரிக்காவுக்கு ராணுவத் தளங்கள் அளிக்க மறுக்கிறது. அமெரிக்கா பாகிஸ்தான் ராணுவத்தைச் சீர்திருத்திப் பலப்படுத்தப் போகிறதாம். அதற்குப் பதிலாக ராணுவத் தளங்கள் பெறப் போகிறதாம். இது இந்தியாவுக்கு அமெரிக்கா செய்யும் துரோகமென்றே நாம் கருதுவோம்.

பிரிட்டனின் விபரீதப் போக்குகள்

பிரிட்டன் மத்திய கிழக்கில் தன் செல்வாக்கை அடியோடு இழந்து விட்டது. ஈரான் பிரிட்டனுடன் தன் ராஜீய உறவை அறுத்துக் கொண்டு விட்டது. சூடான் சுய ஆட்சி உரிமையைப் பெறப்போகிறது. எகிப்து சூடானுடன் ஒப்பந்தமொன்று செய்துகொண்டு விட்டது. எகிப்து சிறிது வலுவடைந்ததும், சூயஸ் கால்வாயிலிருந்தும் பிரிட்டனை விரட்டத்தான் போகிறது. கிழக்கே தோற்ற பிரிட்டிஷ் கிழச் சிங்கம் ஆப்பிரிக்காவில் ஜபர்தஸ்து காட்டி வருவதுதான் விந்தையாயிருக்கிறது. கெனியா விழிப்படைந்துவிட்டது. ஆப்பிரிக்க மக்கள் பிரிட்டிஷாரை விரட்டியடிக்கச் கங்கணங்கட்டிவிட்டனர். மோவ் மோவ் ரகசியச் சங்கம் நாடெங்கும் பரவி, பயங்கர வேலைசெய்து வருகின்றது. சுதேசிகள் வெள்ளையரின் இனஇறுமாப்பைப் பொறுக்காமல் துடிக்கின்றனர். தம் சொந்த நாட்டில் வாழ்க்கைக்கு இன்றியமையாத குறைந்த கூலியும் பெறுமல் உள்ளம் பொங்குகின்றனர். குடியிருக்க வீடின்றித் தவிக்கின்றனர். ஒரு சில வெள்ளையர் நாட்டைச் சுரண்டிச் சுதேசிகளை மிருகங்கள் போல வேட்டையாடுகின்றனர். மோவ்மோவ் இயக்கம் கெனியா மக்களின் கொதிப்பின் சின்னம். பிரிட்டிஷ் அரசாங்கம் ஆப்பிரிக்கரைக் கண்டபடியெல்லாம் பிடித்துச் சிறையில் தள்ளுகின்றது. பயங்கர அடக்குமுறை எங்குமே வென்றதில்லை. பிரிட்டிஷாரும் இதன் உண்மையை விரைவில் அறிவர்.

தமிழ் இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புஸ்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசையில்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும், பேசவும், கடிதங்கள் எழுதவும் கற்றுக் கொள்ளலாம்.

ஒரு பெரிய பைண்டு புஸ்தகம்.

விலை ரூபாய் 5—0—0

தையல் கட்டிங் & மானுவல்!

இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானாலும், எவர் உதவியைக் கொண்டும் தையல் வேலையை சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம்.

விலை ரூபாய் 2—8—0

பீதாம்பர ஜாலத்திரட்டு

(MAGIC BOOK)

பலவிதமான பலகாரங்கள் அழைப்பிக்கும் ஜாலம், ஒரு அறைக்குள் அழகிய ஸ்திரீகளைக் காண்பிக்கும் ஜாலம், வசிய அஞ்சனம், முதலிய 1500 ஜாலங்கள் அடங்கியிருக்கின்றன.

விலை ரூபாய் 2—4—0

VANI BOOK DEPOT (P)

No. 260 Esplanade, G.T. Madras

தென்னுப்பிரிக்கா பற்றி எரிகின்றது. நிலைமை கட்டுக் கடங்காமல் போனுல் ஆப்பிரிக்கா வெங்கும் ஐரோப்பியர் மீது கடும்பகை மூண்டு காட்டுத்தீபோல் பரவுமே என்று அஞ்சுகிறோம். பிரிட்டனுக்குப் புத்தி வருமா? தென்னுப்பிரிக்கா விஷயத்தில் அதன் போக்கு நம்பிக்கையளிப்பதாயில்லை. உலகம் யாவுமே, பிரிட்டனின் கூட்டாளியான அமெரிக்கா உள்பட மலானின் தென்னுப்பிரிக்க இனக் கொள்கையை எதிர்த்து ஐக்கிய நாடுகள் சங்கம் தலையிட வேண்டுமெனக் கோருகிறது. ஆனுல் மலானின் தயவை விரும்பும் பிரிட்டன் தென்னுப்பிரிக்க விவகாரம் தென்னுப்பிரிக்க அரசாங்கத்தின் தனிப்பட்ட விவகாரமென்றும் உலக ஸ்தாபனம் தலையிடுவதற்கில்லை என்றும் கூறுகிறது. சர் கிளாட்வின்ஜப் என்னும் பிற்போக்காளன் பிரிட்டன் சார்பாக இதைத் தெளிவாகக் கூறிவிட்டார்!

பிரிட்டனின் விபரீதங்கள் இவ்வளவோடு நின்றுவிடவில்லை. அமெரிக்காவுடன் சேர்ந்து இந்திரவுக்கு விரோதமாகக் காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தானைத் தட்டிக்கொடுக்கிறது. பாகிஸ்தான் இந்தியாமீது படையெடுத்து அநீதியாகக் காஷ்மீரின் ஒரு பகுதியைப் பிடித்தது. சர்வ தேசச் சட்டத்திற்கு விரோதமாக நடந்த பாகிஸ்தானுக்குச் சம அந்தஸ்து வேண்டுமெனப் பிரிட்டன் கூறுகிறது. இந்த துரோகத்தை இந்திய மக்கள் மறக்கவே மாட்டார்கள்.

பாரதத்தின் பிரச்சினைகள்

இரண்டு ஜாதியினரும் அமைதியாக வாழவேண்டுமென்றே பாரதம் பிரிக்கப்பட்டது. ஆனுல் நோக்கம் நிறைவேறவில்லை. பாகிஸ்தான் காஷ்மீரைத் துராக்கிரகத்தினுல் வெல்ல விரும்புகின்றது. இதன் பொருட்டு நாட்டைப் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் அடிமைபபடுத்தவும் அது தயங்கவில்லை. அமெரிக்கரின் உதவி கொண்டு தன் ராணுவத்தைப் பலப்படுத்தவும், அமெரிக்கருக்குப் பிரதியுபகாரமாக ராணுவத் தளங்கள் வழங்கவும் சதிசெய்து வருகின்றது. பாகிஸ்தானை முழு இஸ்லாமிய நாடாக்க சிறுபான்மையரான இந்துக்களை அடியோடு விரட்டியடிக்க விரும்புகிறது. சிறுபான்மையோரைக் காப்பதே தன் நோக்கம் என்று பறை சாற்றினுலும், மறைவில் முஸ்லீம் வெறியர்களுக்கு ஆதரவளித்து வங்காள இந்துக்களை அச்சுறுத்தி விரட்டியடித்து வருகின்றது. லட்சக்கணக்கான இந்துக்கள் கிழக்கு வங்காளத்தில் இன்னல் பொறுக்கமாட்டாமல் மேற்கு வங்காளத்திற்கு வருகின்றனர். பெருவாரியாக வரும் மக்களை எப்படி ஏற்று ஒழுங்காக நம் மண்ணில் அமையச்செய்வது? இது நம் நேரு அரசாங்கத்துக்குப் பெரிய தலைவேதனையாக இருந்து வருகின்றது. 'போர் தொடுங்கள்' என்று வங்காள முகர்ஜி கோஷ்டியினர் கர்ச்சிக்கின்றனர். அண்டை அரசாங்கத்தின்மீது போர்தொடுப்பது அவ்வளவு எளிதா?

வடகிழக்கே கம்யூனிஸ்டுகள் ஊடுருவுகின்றனர். சீனக் கம்யூனிஸ்ட்டுகள் வடகிழக்குப் பிரதேசத்தில் பாய்ந்து இந்தியாவைத் தாக்கலாம். நம் நேரு இவ் அபாயத்தை உணர்ந்து வடகிழக்கே பிரயாணம் செய்து நாகர் போன்ற பூர்வீகக் குடிகளை நம்பக்கமாகத் திருப்ப முயன்றுள்ளார். நம் அரசாங்கம் சென்ற மூன்று ஆண்டுகளாக இந்திய மக்கள் சேனையைத் திரட்டிவருகின்றது. ஒவ்வொரு இந்தியப் பிரஜைக்கும் இப்பயிற்சி அவசியம் என்பதை மக்கள் உணர்ந்து அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும்.

★

கி. வா. ஜகந்நாதன்

பேட்டிக் கட்டுரை:

பூவை எஸ். ஆறுமுகம்

"தமிழுக்கு அரசாங்கம் என்ன செய்துள்ளது? என்ன செய்கிறது? என்ன செய்யலாம்?"

"தமிழுக்கு ஆஸ்தான கவியை அரசாங்கம் நியமித்தது நல்ல செயல். தமிழ் நூல்களில் சிறந்தவற்றுக்குப் பரிசு அளிப்பது மற்றுமொரு சிறப்புச் செயலாகும். நாளடைவில் பள்ளிகளில் தமிழை முதற்பாடமாக்கச் செய்து வரும் அரசாங்கத்தின் முயற்சியும் போற்றற்குரியது.

ஆனால் இவை போதாது.

தமிழில் வந்த புத்தகங்கட்குப் பரிசு கொடுப்பது மட்டும் போதாது. புதிய புத்தகங்கள் அச்சில் வர ஆவன செய்தல் மிக அவசியம். ஆஸ்தானகவியை நியமிப்பதுபோல், புது எழுத்தாளர்களிலே சிறந்தவர்களையும் பாராட்ட ஏற்பாடாக வேண்டும். சிறந்த எழுத்தாளர்கட்கும் போதுமான அளவில் பண உதவி புரிவது இன்றைத் துரைத்தனத்தார் செய்ய வேண்டிய முக்கிய கடமையாகும். வாழும் பொழுது சொந்த முயற்சியுடன் முன்னேறி, யாரிடமும் இரக்காது, சிறக்க வாழ்ந்த எழுத்தாளர் பலர் இறந்த பின், அவர்களது உரிமை வாரிசுகள் பிச்சைக்காரர்களாகி நிற்கின்றனர். இது எழுத்தாளர்களுக்குள்ள பெருங் குறை. புதுமைப்பித்தன், கு. ப. ரா. வசந்தன் முதலியவர்கள் மாண்டபின், திண்டாடிய அவர்களது மனைவி மக்கள் இரந்து வாழும் நிலைக்குத் தான் கொண்டுவரப்பட்டனர். நிதி சேர்த்து உதவும் பொறுப்பு மக்களை விட்டு, அரசாங்கத்துக்கு இன்றியமையாத கடமையாக மாற்றப்பட வேண்டும். இலக்கியத் தொடர்புடையாரின் குடும்ப நிலைக்கு ஏற்றவாறு அரசாங்கம் செய்யும் கடமை, எழுத்தாளர்கட்குச் செய்யும் கௌரவம் ஆகும்."

பொன்னி எழுத்தாளர் பேட்டி வரிசையில் இம்முறை 'கலைமகள்' ஆசிரியர் திரு கி. வா. ஜகந்நாதன் அவர்கள் இடம் பெறுகிறார். வழக்கம்போல ஆசிரியரவர்களுடன், துணையாசிரியர் என்ற முறையில் நானும், சென்ற நவம்பர் மாதம் 15-ம் தேதி மாலையில் கலைமகள் அலுவலகத்தில் கி. வா. ஜ. வைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தோம். கி. வா. ஜ. தன் துணையாசிரியர்களான திருவாளர்கள் மோ. ஸ்ரீ. செல்லம், ஆர்வி. ச. கு. கணபதி ஐயர்,



கி. வா. ஜகந்நாதன்

கா. ஸ்ரீ. ஸ்ரீ., த. நா. சேனபதி, கி. தாமோதரன் ஆகியவர்களை எங்கட்குத் தனித் தனியே அறிமுகம் செய்வித்தார்கள். நல்லதொரு பயனுள்ள பொழுதாகச் சில கணங்கள் சென்றபின், பேட்டிக்கென நாங்கள் மூவர் மட்டும் தனி அறையொன்றை அடைந்தோம்.

அப்பொழுது நாங்கள் கேட்ட முதல் கேள்விக்கு கி. வா. ஜ. அளித்த பதில்தான் தொடக்கத்தில் கூறப்பட்டிருப்பதாகும். பேட்டி தொடங்கியது.

தமிழும் பிற மொழிகளும்

"தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தொண்டு பற்றி அறிய ஆசைப் படுகிறோம்."

"'கலைக்களஞ்சிய'த்தைத் தயாரித்துக்கொண்டிருப்பது நல்ல காரியம்; நல்ல முறை; போற்றத் தக்க முயற்சி. கலைக்களஞ்சியம் நாட்டுக்கு மிக இன்றியமையாதது. அடுத்ததாகத் 'தமிழ் விழா' கொண்டாடுவது தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சிறந்த தொண்டாகும்."

"தமிழ் உயர்தனிச் செம்மொழிகளில் ஒன்று என்று தமிழர் சிலர் கூறுவது பொருத்தமானதா?"

"ஆம். பொருத்தமானதே! உயர் தனிச் செம்மொழிகள் என்று வகுக்கப்பட்ட மற்ற மொழிகள் எல்லாம் வழக்கிறந்த மொழிகளாயிருப்பதனால், வழக்கிலுள்ள தமிழ் உயர்தனிச் செம்மொழி என்பதை வெளிநாட்டார் கவனிக்கவில்லை. அது உயர் தனிச் செம்மொழிதான். அந்நிலையை அது பல்கலைக் கழகங்களில் பெறத் தமிழர் பாடுபடவேண்டும். இவ்வகையில் அண்ணமலை, சென்னைப் பல்கலைக்கழகங்கள் பொறுப்பு மிகுதி.

மற்ற உயர் தனிச் செம்மொழிகளைப்பற்றி என்னல் கூறமுடியாது. வடமொழியுடன் ஒப்பாக அதற்கடுத்த இடம் பெறத்தக்க இந்தியாவின் உயர்தனிச் செம்மொழி தமிழ் என்பதே என் கருத்து."

"இந்தியாவுக்குப் பொதுமொழி ஒன்று தேவையா? ஆங்கிலமே பொதுமொழியாக இருக்கலாமா? இவ்வகையில் ஹிந்தியின் சாதக பாதகங்கள் யாவை?"

"இந்தியாவுக்குப் பொதுமொழி ஒன்று இன்றியமையாததுதான், நாடு விரிவான நாடாக இருக்கின்ற அடிப்படைக் காரணத்தால்.

ஆங்கிலம் பொதுமொழியாக இருக்க வேண்டுமென்பது நமக்கு மற்றவர்களிடம் உள்ள அடிமைப் புத்தியையே குறிக்கின்றது.

முதற் பகுதி அடிமையாயிருந்து, பிற்பகுதியில் சுதந்திரம் பெற்றது நம் நாடு. ஆகையால் ஆங்கிலப் பழக்க வழக்க முடையவர் நம் நாட்டிடையே பலர் இருக்கலாம். ஆனல் ஆங்கில மொழியின் இலக்கியச் சிறப்பை மெச்சுபவர் நூற்றுக்கு ஒருவர் கூட இல்லை. ஆங்கிலம் பொது மொழியாக இருக்க வேண்டுமென்பதில்லை; ஆங்கிலம் இல்லாமலேயே நாடு நலம் பெறும்.

இன்றைய அரசாங்கம் ஒருமை அரசாங்கம். அரசாங்கச் செயல்களைப் பரப்புகிற சட்டசபைகளுக்கும், மத்திய அரசாங்கத்தின் பொது நிர்வாக அமைப்பிற்கும் நிச்சயமாகப் பொதுமொழி ஒன்று தேவைதான். அது, எளிதில் கைகூடுவது எது என்பதைப் பொறுத்ததாகும். இந்திதான் பெரும்பகுதிகளிலும் பலராலும் பேசப்படுகிறது. தமிழை ஏற்றுக் கொள்ளத் தமிழன் என்ற முறையில் நாமெல்லாம் பெருமிதம் கொள்ளுவோம். ஆனல், நாடு முழுவதற்கும் பொது மொழியாக இருப்பதற்கு அது பல மக்களால் பேசப்படும் மொழியாக இருக்க வேண்டும். அந்த நிலை இந்திக்குத்தான் இருக்கிறது."

"மொழி நூல் ஆராய்ச்சி தமிழுக்கு எவ்வாறு உதவிசெய்யும்? தற்போதைய சிறந்த ஆராய்ச்சியாளர் யாவர்?"

"கட்டாயம் உதவும். அது காலத்துக்கேற்ற புதியஇலக்கணம் அமைய வழிகாட்டும். அறிஞர் கால்டுவெல் திராவிட மொழிகளுக்கும் தமிழுக்கும் செய்த மொழித்தொண்டு பெரிது. அதன் பிறகு புது முயற்சி எதுவும் ஏற்படவில்லை. அதன் வழி நின்று பலர் எழுதியுள்ளனர். சில, பொதுமக்களிடம் நல்லறிவைக் கொண்டு வருகின்றன. கால்டுவெல்லுக்குக் கிடைக்காத சங்கநூல்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவற்றைக்கொண்டு மிக விரிந்த முறையில் மொழிநூல் எழுத வேண்டும்"

"தமிழ் உரை நடையில் சிறந்த எழுத்தாளர் யார்?"

"தங்கள் அமைப்புக்கு ஏற்றபடி தமிழ் உரைநடையில் வெற்றி பெற்றவர்களில் சிறுகதைக்கு புதுமைப்பித்தன், கு. ப. ரா. குறிப்பிடத் தக்கவர்கள். பாரதியாரின் நடை நேர்மொழியாக அமைந்ததாகும். இன்று உரை நடையை மக்கள் விரும்பிப் படிக்கும்படி செய்தவர் 'கல்கி' ஆகும். தமிழ் நாட்டினர் இன்று மிகுதியாகப் பத்திரிகைகளைப் படித்து மகிழ்கிறார்கள். எதையும் சுவைபட எழுதலாம் என்று முதலிலே காட்டிய பெருமை 'கல்கி'க்கு உரியது."

இலக்கிய உலகம்

"தமிழ்ப் பத்திரிகைகள்பற்றிய தங்கள் எண்ணம் யாது?"

"தமிழ்ப் பத்திரிகைகள் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகும். மக்களைப் படிக்க வைக்கும் வகையில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் அமைய வேண்டும். இழிந்த உணர்ச்சியை வளர்க்கும் பத்திரிகைகளுக்கு அரசாங்கம் தடை விதிக்கவேண்டும். இலக்கியப் பண்பாடுகளை விளக்கும் கதை, கட்டுரைகளைத் தவறாது பிரசுரம் செய்து மக்கள் வாழ்வை வளப்படுத்துதல் பத்திரிகைகளின் தலையான கடமையாகக் கொள்ள வேண்டும்."

"இலக்கியத்தில் முன்னேற்றம் எது?"

"பழமையை வேராகக் கொண்டு, புதுமையை மலராகக் கொண்டு மலர்ந்து வருவதுதான் இலக்கியத்தில் முன்னேற்றமாகும். மிக அற்புதமான பழைய இலக்கியம் நமக்குக் கிடைத்திருக்கின்றது; அதைப் புறக்கணிக்காமல் பேணி வளர்ப்பது நம் கடமையாகும்".

"இன்றைய தமிழ்ச் சிறுகதை, நாவல் இவற்றின் வளர்ச்சி எப்படி?"

"சிறுகதைகளே மிகுதியாக வளர்ச்சி பெற்றுள்ளன. நாவலைக் காட்டிலும் உலகத்திலேயே சிறந்த சிறுகதைகளாக அமையும் விதத்தில் நம் தமிழ்ச் சிறுகதைகள் சிறந்து விளங்குகின்றன. சிறுகதைக்குள்ள இடம் நாவலுக்கு இல்லை. நாவல் எழுதுவதில் சிறப்புடையவர்களாக, கல்கி, சங்கராம், பி. எம் கண்ணன் ஆகியவர்களைக் குறிப்பிடலாம். சிறுகதைகளை முன்பு எழுதியவர்கள் ஆசையோடு எழுதினார்கள். இப்போது பத்திரிகையை நிரப்புவதற்காக நாவல்களை எழுதுகிறார்கள். அதனால்தான் நாவல் அத்தனை சிறப்பை அடையவில்லை".

"மொழிபெயர்ப்பு விரும்பத் தக்கதா?"

"விரும்பத்தக்கதல்ல.

மொழிபெயர்ப்புகள் முன்னை விட இப்போது குறைவுதான். இருந்தாலும், கலைத்துறையில், எந்த நூலானாலும், எந்த மொழியிலிருந்தாலும் அதை மொழிபெயர்க்க வேண்டுவது அவசியமே. காமம், கொலை, கொள்ளை ஆகிய கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டும் வகையிலுள்ள நூல்

களைத் தமிழாக்கி வெளியிடுவதைத் தடுக்கவேண்டும். மொழிபெயர்ப்பு, மொழியை வளர்க்கக்கூடியதாக அமைந்தால் மட்டுமே ஓரளவு வரவேற்க முடியும்."

சங்க காலம்

"சங்க இலக்கியம் பற்றி அறிய விருப்பம்."

"சங்க இலக்கியம் ஒரு பெருங்கடல். அதன் கரையில் மணலில் நான் கொஞ்சம் விளையாடினேன், பொறுமையுடன். பழங்கால இலக்கியங்கள் பால் ஆசை பலருக்கு இருந்தும், ஆற்றல் இல்லாது போயிற்று.

நம் மக்களுக்குத் தகுந்தவாறு அவற்றைப்பற்றித் தெளிவாக எழுதுதல் மிக அவசியம். சங்க நூல்களிலே கண்ட செய்திகளைத் தொகுத்தும் வகுத்தும் ஆராய்ச்சி செய்து பல நூல்களை எழுதலாம்.

துரைத்தனத்தார் இதற்கும் ஆக்கம் செலுத்தவேண்டுவது அவசியம். நூல் நிலையங்களிலும், பல்கலைக் கழகங்களிலும் இவை இடம் பெற வேண்டும். அவ்வாறு இருந்தால் தான், தமிழர் பண்பு, முறை, அரசியல் நிர்வாகம் ஆகியவற்றை அனைவரும் அறிய வாய்ப்புக் கிட்டும்."

சங்க நூல்களைத் தொகுத்து ஆராய்ச்சிசெய்ய அரசாங்கம் முயற்சி எடுக்கவேண்டும். இதில் தமிழறிஞர் மட்டுமல்லாமல் மனித இன ஆராய்ச்சியாளர் செடி கொடி இனவாராய்ச்சியாளர், இடம் பெற்றால் பயனுண்டு. எடுத்துக்காட்டாக சங்க இலக்கியங்களின் தழையாடை முற்கால மனித இன ஆராய்ச்சியாளர் மூலம் விளக்கம் அடையும்."

"தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இலக்கணங்களில் எது, எவ்வகையில் சிறந்தது? தற்காலத்துக்கு எது பயனுடையது?"

"தொல்காப்பியம் தமிழரின் மிகப் பழமையான இலக்கணம். பண்டைத் தமிழரின் வாழ்க்கை வகையை உணர்த்தும் அரிய நூல். சிறப்பாக அதன் பொருளிலக்கணம் தமிழர் வாழ்வை அறியப் பயன்படுகிறது. ஆனால், தொல்காப்பியத்துக்கு முற்பட்ட இலக்கியம் நமக்குக் கிட்டவில்லை. அந்த நூலில் சொல்லப் பெற்ற சில இலக்கணங்களுக்கு இலக்கியமே கிடைக்கவில்லை.

இரண்டாயிரம் ஆண்டுக்குப் பின் எழுந்த இலக்கணம் நன்னூல். பிற்காலத்தில் வந்த வழக்குகளுக்கும் அது இலக்கணம் அமைக்கிறது. இன்று நன்னூலுக்கும் பிற்பட இலக்கியம் விரிவுபட்டுள்ளது. இன்றைய நிலைக்கேற்ப இலக்கணம் அமைதல் அவசியமே."

பொது

"மொழிவாரி மாகாணம் ஏற்படுவதைப் பல காங்கிரஸ் மேலிடத்தவர் விரும்பாதிருப்பது உண்மையா? ஏன்? அது சரியா?"

"உடனடியாகச் செய்வதா, வேண்டாமா என்பதையே அவர்கள் ஆராய்ந்து வருவதாக நான் ஊகிக்கிறேன். மொழிவாரி மாகாணந் தான் காங்கிரஸ் அடிப்படைக் கொள்கை. ஆனால் உடனடியாக மொழிவாரி மாகாணம் வேண்டாம் என்பது காங்கிரஸ் மேலிடத்தின் கொள்கை என்னலாம்".

"தமிழக எல்லை யாது?"

"தமிழக எல்லை, சென்னை உட்படத் திருவேங்கடம் வரை இருந்து தான் ஆகவேண்டும். திருவாங்கூர் தமிழ்ப் பகுதியும் இத்துடன் சேரும்".

"தமிழக அரசியலுக்கு ராஜாஜி செய்த, செய்யும் நலன் என்ன?"

"காங்கிரஸின் கொள்கைகளை வற்புறுத்தாமல், வேற்றுமைகளைக் குறைத்து வருவது குறிப்பிடத் தக்க செயலாகும்".

"தனித் தமிழ் இயக்கம் வகுப்பு வாதச் சார்புடையதா? அல்லது வேறு பொதுக் கோட்பாட்டுத் தத்துவம் உண்டா? உண்டானுல் அது யாது?"

"தனித்தமிழ் இயக்கம் வகுப்புவாத அடிப்படையில் தான் தோன்றிற்று என்று நினைக்கிறேன். வகுப்புவாத அடிப்படையில்தான் நடைபெறுகிறது. எந்த அயல் மொழியையும்—சிறப்பாக வடமொழியை — அதை விலக்கவேண்டிய தேவை இல்லை என்றுதான் நினைக்கிறேன். ஆனல் தமிழுக்குத் தனிப்பண்பு உண்டு. தனித் தமிழ் அதைப் பேண உதவும்"

"இலங்கைத் தமிழர்பற்றித் தாங்கள் எண்ணும் கருத்து என்ன?"

"இலங்கைத் தமிழரின் தமிழ்ப்பற்று தமிழ் நாட்டவரை விட மிகுதி என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல் இலங்கைத் தமிழர் தெய்வப்பற்று மிக்கவர்கள் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்".

"தமிழகத்துக்கும் பிற தென்னுட்டு மொழிகளுக்கும் பொதுவான பண்புகள், இயக்கங்கள் எவை? இந்தியாவுக்குப் பொதுவான இயக்கங்கள் எவை?"

"தென்னுட்டுத் தமிழ்ப் பண்பு அமைதி. வடநாட்டில் அமைதி இல்லை. சரித்திர நிகழ்ச்சிகளே அதற்குக் காரணம். தென்னுட்டில் கலைப் பண்பு மிகுதி. தெய்வங்களைத் தென்னுட்டில கோயிலெடுத்துக் கலைப்பண்புடன் வழிபடுகிருர்கள். வடநாட்டில் தீர்தத்துக்குத் தான் மதிப்பு.

ஆனுலும் பாரதநாடு முழுவதும் ஒரே பண்பாடுடையது. உரையினல் ஒற்றுமையுடையவர்கள் ஒருமொழி பேசும் மக்கள். உள்ளத்தால் ஒற்றுமையுடையவர்கள் பாரதநாட்டு மக்கள். இந்த உள்ளப் பண்பின் ஒற்றுமையை எல்லா மொழி நூல்களிலும காணலாம்.

* *
*

'கலைமகள்' அன்றும் சரி, இன்றும் சரி, தனித் தமிழ்த்தொண்டாற்றி வருவதென்பது தமிழறிந்த அனைவருக்கும் தெரிந்த செய்தி. கலைமகளை அறியும் அனைவரும் அதன் ஆசிரியர் திரு கி. வா. ஜ.வையும் நன்கு அறிவார்கள்; கலைமகள் வளர்ச்சிக்குக் காரணமானவர் கி. வா. ஜ. என்பதையும் அறிவார்கள்; அறியக் கடமைப்பட்டவர்கள்.

கி. வா. ஜ.வின் தனித் தமிழ்ப் பற்று போற்றற்பாலது; கடந்த இருபது ஆண்டுகளாக அவர் தமிழுக்குச் செய்துவரும் சீரிய தொண்டுக்குத் தமிழின்பால் பற்றுக் கொண்டுள்ள அனைவரும் கடப்பாடுடையவர்கள். 'சங்க நூற்காட்சிகள்' வரிசையில் அவர் தொடர்ந்து எழுதி வெளியிட்டு வரும் ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு சேமநிதி.

புறநானூற்றுப் பாடல்களைக் கதைகளாக்கி மூன்று நூல்களும், திருமுருகாற்றுப்படையின் சாரத்தை விளக்கும், 'வழிகாட்டி' என்ற நூலும், தொல்காப்பியத்தில் எழுத்ததிகாரத்தைச்சொல்ல 'பயப்படாதீர்கள்!' என்ற புத்தகமும், சொல்லதிகாரத்தை விவரிக்க 'வாழும் தமிழ்' என்ற ஆராய்ச்சி ஏடும் ஆசிரியரின் குறிப்பிடத்தக்க ஆராய்ச்சி விளக்க நூல்களாகும். தொல்காப்பியத்தில் பொருள் அதிகாரத்தின் விளக்கவுரை ஆசிரியரது நடைமுறைப் பணியில் அங்கம் வகித்துள்ளது.

காலஞ் சென்ற டாக்டர் மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதய்யர் அவர்களது முதல்வழிச் சீடர் கி. வா. ஜ. அவர்கள். "தெரிந்ததைப் பிறருக்குச் சொல் என்பது என் குருவின் புத்திமதி. அதற்கேற்ப எனக்குத் தெரிந்

விருந்து வரிசையில்
12
உலக இலக்கியங்கள்

இந்துலேகா
மலையாள நாவல்

மாமனூர் வீடு
ஆங்கில நாடகம்

துன்பக்கேணி
ஜப்பானியக் கதை

நூர்ஜஹான்
வங்காளி நாடகம்

கைக்கடிகாரம்
ரஷ்யக் கதைகள்

முத்துமாலை
சீனக் கதைகளும் நாடகமும்

தாயகத்தின் அழைப்பு
ஆங்கில நாவல்

அறக்கோட்டம்
இந்தி நாவல்

மாலதி — மாதவன்
சமஸ்கிருத நாடகம்

கடல்மறவர்
பிரஞ்சு நாவல்

கல்மனிதன்
ஸ்வீடிஷ் கதைகள்

ஆண்டிமடம்
ஆங்கில இசை நாடகம்

மேற்குறித்த 12 புத்தகங்களும் ரூ. 6/— அனுப்பினால் தபாற் செலவின்றி அனுப்பப் படும். தனித்தனியே பெறுவதற்கு பிரதி ஒன்று 8 அணா — தபாற் செலவு 1 அணா.

பொன்னி லிமிடெட்
த. பெ. எண். 1165, சென்னை—21

தைதைப் பிறருக்குப் பாடம் சொல்லித் தருவதையும், எழுது வதையும் கடைப்பிடித்து வரு கிறேன்'' என்றார் கலைமகள் ஆசிரியர்.

"சங்க இலக்கியப் பெருங் கடலின் சிறு மணல் திடலில் சிறிது பொழுது விளையாடி னேன். அதுவரையில் பொறு மையாக இருந்ததே ஓர் பணி".

கி. வா. ஜ. வின் இலக்கியப் பணியைப் பற்றிக் கேட்டதற்கு, உணர்ச்சியின் வசமாகிய ஆசிரி யர் மேற்கண்ட சொற்களைக் கூறினார். மிகுந்த அவையடக் கம் அவரின் பேச்சில் அடி நாதமிட்டது. அவரது இலக் கியப் பணி பெரிது; பெருமை வாய்ந்தது; தமிழ் கற்றவர்கள், தமிழ்ப்பற்றுடையவர்கள் அனை வரும் பெருமைப்பட வேண்டி யதுமாகும்.

நாடோடிப் பாடல்களைத் தொகுத்து நான்கு புத்தகமாக வடித்திருக்கிறார். இலக்கியம், சமயம் சம்பந்தப்பட்ட ஆராய்ச் சிச் சொற்பொழிவுகளைத் தின மும் பல்வேறு பகுதி மக்கள் கேட்கும் வாய்ப்பும் இருந்து வருகிறது. அண்மையில் இலங்கை இவரை வரவேற்றுப் பெருமைப் படுத்தியது.

ஆசிரியர் சிறுகதைகளும் நிறைய எழுதியுள்ளார். 'கலைச் செல்வி', 'கலைஞன் தியாகம்', 'அறுந்த தந்தி', 'பவள மல்லிகை', 'நீலமணி' ஆகிய இவரது சிறந்த சிறுகதைத் தொகுப்புகள் இன்றையத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்கு ஓர் அளவுகோல்; எடுத்துக் காட்டு. 'அறுந்த தந்தி' சென்ற ஆண்டில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரது பரிசைப் பெற்றது. ★

பொழுது போக்கு

ராதா

மாப்பிள்ளை

'சிங்காரி'யைத் தயாரித்து வெற்றி கண்ட நேஷனல் புரொடக்ஷன் ஸார்தான் இந்த 'மாப்பிள்ளை'யையும் தயாரித்திருக்கிறார்கள். ஆனால் படம் அவர்களுக்கு வெற்றி என்றும் சொல்ல முடியாமல், தோல்வி என்றும் கூறமுடியாமல் அமைந்திருக்கிறது. இடைவேளைவரை ஒரே குழப்பமாக, யார் மாப்பிள்ளை என்பதே தெரியாமல் ஓடுகிறது படம். இடைவேளைக்குப் பின்புதான், பெரியண்ணன் மாப்பிள்ளை என்பது தெளிவாகிறது. படத்தில் அநேக இடங்கள் வீண் வளர்த்தல்களாகக் காணப்படுகின்றன. அவைகளைக் கத்தரிப் பிரயோகம் செய்தால், படத்தின் நீளமும் குறைவதோடன்றி, விறுவிறுப்பும் அதிகமாகும். நளினியும், உஷாவும் ஆடும் நடனம், படத்தின் இடையே வரும் தூக்குத் தூக்கி நாடகம் ஆகியவற்றையும் நீக்கி விடலாம்.

மக்களிடையே பகுத்தறிவு மின்னல் வேகத்தில் பரவிப் படங்களைப் பார்க்கும் ரசனையும் மாறி வரும் இந்த நாளிலே, நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் பயன் விளைவிக்கும் அறிவு விளக்கப் படங்களைஎடுக்காமல் ஜாதகம், ஜோஸ்யம் போன்றவைகளைப் படத்திலே புகுத்தி, அவைகளின் சுற்றுச் சார்பிலேயே படக் கதையை ஓடவிட்டிருப்பதை நாம் வரவேற்க முடியாது.

இப்படத்தில் டி. ஆர். ராமச்சந்திரனின் பெயர் ரசிகர்களின் நினைவில் நிலைத்துநிற்கும் அளவுக்கு அவரது நடிப்பு அமையவில்லை. அவர் தனக்குக் கொடுத்துள்ள பாகத்தை இன்னும் உணர்ச்சிபூர்வமாக்கிக் காட்டியிருக்கலாம் என்பது உண்மை. இப்படம் அவருக்கு வெற்றியைக் காட்டாது; காட்ட முடியாது.

டி. கே. ராமச்சந்திரனிடம் வில்லனுக்கேற்ற நல்ல குணச் சித்திரநடிப்புக் காணப்படுகிறது. நரசிம்ம பாரதியின் நடிப்பு சாதாரணமாகத்தான் இருக்கிறது. ஆர். பாலசுப்ரமண்யம், தந்தை பாகமேற்று முதன் முதலாக இப்படத்தில்தான் நடிக்கிறார். நடிப்பு பரவாயில்லை.

பி. கே. சரஸ்வதியின் நடிப்பு ஆரம்பம் முதல் கடைசிவரைப் போற்றத் தக்க முறையில் அமைந்திருக்கிறது.

கதையின் கருத்து நடைமுறைக்கு ஒவ்வாதது. கணவன் கட்டிய மனைவியைப் பலர் முன் ஏசி, தனக்குப் பிறந்த குழந்தையைவேறுயாருக்கோ பிறந்ததாகக் கூறுவதும், தன் தங்கையையே தமையன் 'வழுக்கி விழுந்தவள்' என்று நிரூபிப்பதும் மிகமிக அர்த்தமற்றது. கதையின் முடிவைக் கண்டு படம் பார்ப்பவர்கள் மலைக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் கதாசிரியர் படத்தில் பொருந்தாத சில சிக்கல்களை நுழைத்திருக்கிறார்.

வசனங்கள் உயிரோட்டம் பெற்றுள்ளன; பாடல்களும் இனிமை பெற்றுள்ளன. ஒளி, ஒலிப்பதிவு கண்டு மகிழ்கிறோம்.

'சிங்காரி' பெற்ற வெற்றியை இந்த 'மாப்பிள்ளை' பெறமுடியாது, புள்ளியான நடிக, நடிகையர் படத்தில் நடித்திருந்தும்கூட, பொழுது போக்குக்காக ஒரு முறை மட்டும் 'மாப்பிள்ளை'யைப் பேட்டி கண்டு வைக்கலாம் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது! ★

திருக்குறள் விளக்கம்

விருந்து

கலைவாணி

வாழ்க்கை மனை விளக்கின் மங்காத ஒளி இல்லறம். கணவன்—மனைவியரின் மனைமாட்சியின் ஒளிச் சுடர் மக்கட் பேறு. இல்வாழ்க்கையில் மனைவி, மக்கள் சுற்றத்தாரோடும் அன்புடையராயிருந்து நடத்திக்காட்டும் நன்னெறியின் பயனும் நோக்கமும் விருந்தோம்பலே ஆகும். அது அன்பின் வழிவந்த பண்புமரபு. முன் பழக்கமுடையவரும், அப் பழக்கமில்லாதவரும் வருவர். பழக்கமுடையவரை ஓம்புதல் பொதுப் பண்பு. பழக்கமில்லாதாரே விருந்தினர். அவருக்கு உணவு முதலியன கொடுத்து உபசரித்தல் பண்டைக்காலந்தொட்டு நம்மிடையே நிலவிவரும் தமிழ்ப்பண்பு ஆகும்.

'மருந்தேயாகினும் விருந்தோடுண்' என்கிறார் தமிழ் மூதாட்டி. தான் உண்ணும் உணவு அமிழ்தமாயிருப்பினும், அதை வந்த விருந்தினரை விட்டுவிட்டுப் புசித்தல் விரும்பத்தக்கதன்று என்கிறார் வள்ளுவர். வந்த நல்விருந்து ஓம்புவான் வீட்டில் திருமகள் வாசம் செய்வாள் என்பது தமிழ்மறை வாக்கு.

தனித்திருந்து உண்பது வானவர் அமுதாயினும் விரும்பத் தக்கதன்று. விருந்தினரைக் காக்க வைத்து உண்பதானல், அது இன்னும் வெறுக்கத் தக்கது. தன்னிடத்து வந்த விருந்தினரை உண்ணச் செய்து, மேலும் வருகின்ற விருந்தினரை எதிர்பார்த்து, அவ்விருந்தினரோடு உடனிருந்து உண்ணும் முறை தான் மிகச் சிறப்பு வாய்ந்தது; வாழ்க்கைத் துணை நலம் வாழ்வுபெறும் வழி வகை அது.

'விருந்து' அந்நாளும் சரி, நடைமுறையிலும் சரி—தொன்றுதொட்டு நம்மிடை நிலவிவரும் இனிய தமிழ்ப் பண்பு. உள்ளங்கள் ஒன்றையொன்று துளாவியறிய, உள்ளங்கள் ஒட்டி இணை சேர, நட்புறவு பண்பட, பண்பட்ட அன்பு வளங்கொண்டு வாழ—ஆகிய இத்தகைய குறிக்கோள்களுக்கெல்லாம் அடித்தளம் பரப்பி நிற்பது விருந்தோம்பல் எனலாம். ஆனல் 'விருந்தும் மருந்தும் மூன்றுநாள்' என்கிற வழக்கு மொழிக்கு இடமே இல்லாமலேயே போகட்டும்......!

விருந்தினருக்கு உணவு கொடுப்பது பெரிதல்ல. இனிய உரை கூறி மகிழ்வித்தல் அதனிலும் பெரிது. விருந்தினர் முன் அறிமுகமற்றவர். வரும் போதே ஐயம், அச்சம் அவர்கள் உள்ளத்தின் ஆழத்தில் குமுறிக் கொண்டிருக்கும், எப்படி வரவேற்பாரோ என்று. விருந்தோம்புபவர் முகத்தைப் பார்த்துக் கொண்டே வருவார்கள். அம்முகமலரின் அக மலர்ச்சி ஒளி கண்ட பின்னே விருந்தினர் விருந்தேற்கும் உள்ளம் உடையவர் ஆவர்.

நுகர்ந்து பார்த்தவிடத்து வாடும்; தூரத்தே கண்ட விடத்து வாடமாட்டாது—இது அனிச்ச மலரின் குணம். முகம் வேறுபட்டுத் தூரத்திலே பார்த்த விடத்தில் விருந்தினர் வாட்டமுறுவர். ஆதலால், விருந்தினர் அனிச்சப் பூவினும் மெல்லியராவர். இதனல், விருந்தினரைக் கண்டவுடனே முகமலர்ச்சியுடன் அவர்களை உபசரிப்பது விருந்து கொடுப்போரின் தலையான கடனாக அமைதல் வேண்டும்.

"மோப்பக் குழையும் அனிச்சம்;
முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து". ★

எஸ். ஆறுமுகம்

ஐந்தாம் அத்தியாயம்

கிரகணம்

விண்ணிடை தேங்கிக் கிடக்கும் ஒற்றைத் தாரகையைப் போல, மேஜை மீது விரித்திருந்த பட்டுத் துணியில் தவழ்ந்து கிடந்தது அந்தப் பாலடை. அது மங்களம், பூமாவுக்கு ஒருநாள நினைவுச் சின்னமாக அளித்த பரிசு. பூமா பெருமூச்சு விட்டாள். வெள்ளிப் பாலடையை விழித்த கண் மூடாமல் நோக்கிக்கொண்டிருந்தாள் அவள்; பாலடை பசலையாக அவள் நேத்திரங்களில் சிலம்பம் ஆடியது.

பார்வையை இரும்பாகக் கொண்டு, காந்தமாகிக் கிடந்த அந்தச் சஞ்சிகையின் விரிந்த ஏடுகளில் அவள் கருத்துப் பதிந்திருந்தது.

'...ஒன்று இரண்டாக மாறிக் கலப்புதில்தான் உவகையும் இன்பமும் விளைகிறது என உலகம் கருதலாம். ஆனால் அந்த இரண்டு தரும் இன்பத்தைவிட, அந்த இரண்டு மூன்றாகும் போதுதான் உடலளவில் உறைந்திருந்த இன்பம், உயிரிலேயும் கலந்து உண்மை இன்பமாக மாறுகிறது. அதுவே மூன்றாவது உருவம்—குழந்தை!...'

கருவைவிட்டு வெளிவந்த குழந்தையின் மலர்ச்சிரிப்புக்கு ஈடேது, இணையேது? அதைப் போல பூமா சிறுநகை இயற்றினள்; அவள் முகத்தில் ஆனந்தம் மடியேந்தியிருந்தது. அந்த இன்பம் இரண்டு, மூன்றுன பின் பிறந்த இன்பம்...!

சென்னைக்கு மங்களத்துக்குத் தபால் ஒன்று எழுதிப்போட்டு விட்டு வந்தாள் பூமா. கடிதத்தில் 'சுபச்செய்தி' ஒன்று பறந்துகொண்டிருந்தது. பூமா, ஐந்துமாதங்களாகக் 'குளிக்காமல்' இருக்கிருள். அவள் 'தாய்மை' எய்தியிருக்கிருள் என்பதே கடிதத்தின் சாரம்.

கடிதத்தைப் பார்த்ததும், அங்கே அக்காளும் மைத்துனரும் கொள்ளைச் சந்தோஷத்தில் மூழ்கிவிடுவார்கள் என்பதாக நினைத்துப் பார்த்தாள் அவள். உண்மை! அவர்கள் கட்டாயம் மகிழ்ச்சி பொங்க நிற்பார்கள்தாம்; அவர்கள் குடும்பத்தின் பெயர் சொல்ல வல்ல ஒரு 'குஞ்சு' இன்னும் அவர்களுக்கு உண்டாகவில்லை. மங்களத்திற்குக் கல்யாணமாகி ஆண்டுகள் பல ஓடிவிட்டது தான் மிச்சம். அவள் கருத்தரிக்கவில்லை. இங்நிலையிலே அவர்கள் குடும்பத்தில் 'குலச்சுடர்' ஒன்று ஒளிகாட்டப் போகிறதென்பது மகிழ்ச்சிக்குரிய செய்திதான்!

தான் கருத்தரித்திருக்கும் செய்தியை எப்படிக் கணவனிடத்தில் சொல்வது என்பதைப்பற்றி வெகுவாகச் சிந்தித்தாள் பூமா. அவளுக்கு அவ்விஷயத்தைப் பேச்செடுப்பதற்கு என்னவோ நாணமாக இருந்தது. அதுபோல மலைப்பாகவும் இருந்தது. காரணம், சிலநாளாக அவள் தன் துணைவரிடம் கண்டதொரு மாற்றமேயாகும்.

அன்றைக்கு பூமா, பக்கத்து வீட்டுப் பெண் விஜயா, அவள் அத்தான் இவர்களுடன் சினிமாவுக்குப் போனதிலிருந்து, அங்கு அவள் வீட்டில்-கொண்ட கணவனிடத்தில் ஏதோ ஓர் பிளவு—மாற்றம்—ஒரு மாயத்திரை படர்ந்திருப்பதாக ஊகித்துக்கொண்டாள். அவள் ஊகம் 'சரி' என்று வலுவுற அத்தாட்சி போல கணவன்—மனைவியரிடையே அந்த ஒரு கிரகணம் முளைத்துவிட்டிருந்தது.

இவ்வளவிற்கும் ராஜேந்திரகுக மனைவியின் முகம் பார்த்து ஒன்றும் கேட்கவில்லை. அது தான் இப்படியென்றால், பூமாவும் தன் குற்றம்பற்றிச் சொல்லி மன்னிப்புக் கோரவுமில்லை. ராஜேந்திரன் அச்சம்பவத்தைத் தவருக எண்ணியதற்கு விளக்கமாக எதுவும் வாய் திறந்து அவள் கூறத் தெம்பு ஊறவில்லை. இருப்பினும், அது அவளுக்கு மனதை உறுத்திய வண்ணமிருந்தது. உள்ளத் தூய்மையுடன் யாருடனும் சகஜமாகப் பழகும் சுபாவம் கொண்டவள் பூமா. ஆனதால், அவளுக்கு தான் அன்னியருடன் படத்திற்குப் போனதற்கு இப்படிப் புருஷன் மாறிவிட்டாரே என்பது விசித்திரமாகப் பட்டதில் அதிசயமில்லை. அவள் மனம் அப்படி; அவள் போக்கு அப்படி; அவள் பூமா!

அன்று சாயந்திரம் காபியை எடுத்துக்கொண்டு கணவனின் அறைக்குள் நுழைந்தாள். காலையில் படித்த விகடத்

துணுக்கைக் கணவனிடம் சொல்லி அச்சிரிப்பிலே தானும் பங்குகொள்ள எண்ணியது அவள் மனம். இப்படிப்பட்ட சம்பவங்கள் பல நடந்திருக்கின்றன. ராஜேந்திரனும் பூமாவும் குலுங்கக் குலுங்கச் சிரித்திருக்கிறார்கள்.

சாய்வு நாற்காலியில் ஏதோ சிந்தித்த வண்ணம், உறக்கமும் விழிப்புமில்லாத நிலையில் சாய்ந்திருந்த ராஜேந்திரன், பூமா வந்து நிற்பதைப் பார்த்தும் பார்க்காததுபோலிருந்தான். இதைக் காணப் பூமாவுக்கு அழவேண்டும் போலாகிவிட்டது. ஏன் இந்தப் பாராமுகம்... அனலைப் போர்த்தும் சாம்பல் போல...!

"காபி ஆறிவிடப் போகிறது. சாப்பிடுகிறீர்களா?"

"ஊம்" என்ற பதிலுடன் காபியை ஏந்திப் பிடித்து வாங்கி வாய்க்குள் ஊற்றிவைத்தான் அவன். ஆம்; ஊற்றித்தான் வைத்தான். ருசிக்கவில்லை. குடித்து முடித்ததும் மறுமுறை ஒரு 'ஊம்' போட்டு, டபராவைத் தரையில் வைத்தான். அடுத்த நிமிஷம் அவன் இமைகள் இணைந்துகொண்டன.

பூமாவிற்குக் கணவனின் செய்கை அழுகையை வரவழைத்தது. சொல்லவேண்டுமென்றிருந்த நகைச் சுவைத் துணுக்கை மனதிற்குள் அழுத்திவிட்டு, 'விடு விடு' வென்று நடந்தாள். அவள் தலையில் பாராங்கல்லை வைத்ததுபோல் இருந்தது; 'விண் விண்' என்று தெறித்தது.

கூடத்திற்குப் போய் ஊஞ்சலில் உட்கார்ந்த பூமாவுக்கு அழுகையை அடக்க முடியவில்லை. கண்ணீர் சுரந்து அழகிய அவள் முகத்தை நனைத்து வருடிக்கொண்டிருந்தது. கடந்த சம்பவங்களை ஏடு ஏடாகப் புரட்டிப் பார்த்தாள். அப்போது அவளுக்கு எதிர்காலம் பயங்கரமாகத் தெரிந்தது. 'உம்,' என்று முகத்தைக் கடுமையாக வைத்திருக்கும் பதியின் விந்தைப் போக்கை மீண்டும் மனத்திற்குக் கொண்டுவரக்கூட அவளுக்குப் பயம் பிடுங்கித் தின்றது. அவள் உடலில்—உள்ளத்தில் அணு அணுவாக ஏதோ ஒன்று அரித்துத் தின்பது போன்ற வேதனை—நடுக்கம் பரவியது. தூண்டில் புழுவாகத் துடித்தாள் அவள்! தூண்டில் புழுவின் துடிப்பு தூண்டிலுக்குத் தெரியமுடியுமா? தூண்டில் பிடிப்போனுக்குத்தான் தெரியுமா? ஆனால் அந்தப் புழுவின் நிலை...... முடிவு...!

பொழுது புலர்ந்தது; வளர்ந்தது; மறைந்தது.

வழக்கம்போல ராஜேந்திரனின் நடவடிக்கைகள் நடந்தேறின. காலையில் படுக்கையை விட்டெழுந்ததும், அங்கே அவனுக்குப் பல் துலக்குவதற்கான சாதனப் பொருள்கள் காத்திருக்கும். அடுக்களையில் வெந்நீர் காய்ந்து கச்சிதமாக இருக்கும். பிறகு சாப்பாடு. மத்தியானத்திற்கு டிபன்; பிளாஸ்கில் காபி. மாலையில் ஆபீஸ் முடிந்து வீட்டுக்கு வந்து உடுப்புக் களைந்தானதும் மீண்டும் காபி. இரவு சாப்பாடு—உறக்கம்—இப்படி ஒவ்வொன்றும் யந்திரம்போல இயங்கின; இயக்கப்பட்டன.



இவற்றையெல்லாம் பூமா கண்ணோட்டமிடும் தருணம், அவளுக்கு உள்ளத்திலே ஆசை இராது; அழுகைதான் மண்டி நிற்கும், ஆதங்கமிராது; ஆத்திரம்தான் அணைத்து நிற்கும்.

'பூமா'—இந்த இரண்டே இரண்டு வார்த்தைகளை அடுக்கி அவளை அவள் கணவன் கூப்பிட்டு எத்தனை நாட்களாகி விட்டன? ராஜேந்திரன் கணக்கெடுத்துப் பார்த்திருப்பானா? ஆனால் பூமா பார்த்தாள். பார்த்து என்ன செய்வது? அவர்களது வாழ்க்கை நிலவிலே ஏனோ இந்த மாற்றக் கிரகணம் கறையாக அமைந்ததோ?

கறை! ஆம்; கறை!

கிரகணம்! ஆம்; கிரகணம்!

நிலா சிரித்துக்கொண்டிருந்தது.

பூமா தலையை நிமிர்த்திப் பார்த்தாள். இயற்கை அழகுடன் இருந்தது. நிலவை

ரசிக்கும் நிலையிலா இருந்தாள் அவள்?

ஆனால் அன்று...!

பூமா மிஸஸ் ராஜேந்திரன் ஆன அன்றைக்கு அவள் எவ்வளவு மனக்கோட்டைகள் நிர்மாணித்திருந்தாள்? அன்றும் இதேபோலத்தான் நிலவு. போதைப் பொருள்களான நிலவு இருந்தது, மங்கையும் இருந்தாள். பூமாவின் புன்னகையில், பஞ்சணையில் தூவப்பட்டிருந்த நறுமலரிதழ்களின் சுகந்தத்தில், பூக்கோலமிட்டுச் சென்ற பால் ஒளியில் தன்னை மறந்திருந்தான் ராஜேந்திரன். தான் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் கணவன் கண் நிறைந்திருப்பதை அறிந்துகொண்டதும், பூமா பூரித்துப் போனாள். ஆக நேசம்—காதல் அவர்களை அன்புக் கயிற்றினால் இறுகப் பிணைத்தது.

'புத்தம் புது முறையில் இரண்டுபேரும் வாழ்க்கைத் தோணியைக் கடக்கவிட வேண்டும். தன்னைப் பரிபூரணமாக அறிந்துகொள்ளப் பூமாவுக்கு—தன் உயிர்த்துணைக்கு நல்லதொரு வாய்ப்பு அளிக்கவேண்டும். மனமொருமித்துப் பழக நேரிட்டால் தான் வாழ்வில் இன்பமும் அமைதியும் காண முடியும். அப்போது தான் வாழ்க்கை கரும்பாக இனிக்கும்.'

அன்று அவன் எண்ணத்தடம் திசை காட்டிய வாழ்க்கை வழியைப்பற்றிப் பூமாவிடம் எவ்வளவு அற்புதமாக எடுத்துச் சொன்னான்?

ஆனால் இன்று...!

அவள் நினைவுத் திரை விலகியது. நிலவு காய்ந்தது அவள் அழகுபோல. அவள் பெருமூச்சு விட்டாள்.

'ஆனால் இன்று...ஆம்; எல்லாம் வாய் வேதாந்தம். தன்னை முழுதும் புரிந்துகொள்ளச் சந்தர்ப்பமா தந்திருக்கிறார் அவர்? அல்ல. தன்னை ஓர்

புதிர்க் கோளமாக்கிவிட்டு, என்னையும் அல்லவா சுற்றிச் சுழற்றிவிட்டு ஆட்டிப் படைக்கின்றார் அவர்? என்மீது ஏன் அவருக்கு அப்படி மனத் தாங்கல்? வெளிவிட்டுச் சொன்னாரானால்...ஐயோ, நான் எவ்வளவு அபாக்கியவதி...'

எண்ணங்கள் மறுபடியும் கிளைத்தெழுந்தன. கண்ணீர்த் திவலைகள் அவளுக்குச் சுரணையை உண்டாக்கிவிட்டன.

விஜயாவும் பூமாவும் என்றும் போலப் பழகினார்கள்; பேசினார்கள். இருந்தும், பூமாவிடம் ஏதோ ஒரு வேறுபாடு ஆக்கிரமித்திருப்பதை விஜயா நன்கு உணர்ந்திருந்தாள். ஒருநாள் விஜயாவே பூமாவிடம் இதைப் பற்றிக் கேட்டும்விட்டாள். சிரித்து மழுப்பிக்கொண்டு பூமா 'ஒன்றுமில்லை' என்று சாதித்துவிட்டாள். பூமாவுக்குப் பிறக்கப் போகும் குழந்தையைப்பற்றிப் பல பல சமயங்களில் விஜயா நினைப்பூட்டுவாள். அப்போதெல்லாம் பூமாவிற்கு ஆனந்தம் ததைத்து நிற்கும். அதே கணம், தன் கணவனைப்பற்றி எண்ணிக்கொள்ளுவாள். அவள் குதூகலம் காற்றாய்ப் பறந்து போகும். துன்பத்தில் இன்பம் காணவிருக்கும் பொன்னான தொரு 'சுபவேளை'யை ஆவலுடன் எதிர்நோக்கிய வண்ணம் பூமாவின் தாய் உள்ளம் தண்மை பெற்றது.

அன்று......

பூமாவுக்கு மனம் நிம்மதி இழந்துபோயிருந்தது. விஜயா வந்தாள். ரேடியோவைத் திருப்பினாள். 'மனவிளக்கு' என்ற நாடகம் ஒலி பரப்பப்பட்டது. ஏறக்குறைய அது தன் நிலையை ஒத்திருப்பதைப் போலவே பூமா உணர்ந்தாள். கட்டிய மனையாளைக் கொண்ட கணவன் பிளவுகாட்டி வெறுக்கிறான் கதையில்.

'...ரோஜாவாக மலர்ந்தும் மதிப்பில்லை யென்றால், முள்ளாகச் சுருக்கென்று தைத்து விடவேண்டு மென்பது தான் என் கொள்கை...'

நாடகத்தில் தோழி ஒருத்தியின் இவ் வார்த்தைகளைக் கேட்ட பூமா ஏனோ நிலை குலைந்தாள்.

'நல்ல பெண் இவள்! பெண் அல்ல; பேய்! கொண்டவர் மனம் வேறுபட்டால் அதற்காக அவ்ரை வெறுக்குமாறு உபதேசம் கூறும் இவளைப் பேய் என்று சொல்லாமல் வேறெப்படி அழைக்க முடியும்?...' என்றாள் பூமா, விஜயாவிடம். ஒன்றும் புரியாதவள்போல பூமாவின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள் விஜயா.

கடைசியில் கதை சுபமாகவே முடிகிறது. கணவன் மனைவியர் ஒன்றுகின்றனர். 'அதைப்போல தன் வாழ்வும் ஒளி பெறுமா? புத்துயிர் பெறுமா?—' என்று நினைப்பதைப்போல அவள் பெருமூச்செறிந்தாள்.

பூமா, அன்றைக்குத் தன் கணவனை இன்னும் காணோமே என்று ஏங்கிக்கொண்டிருந்தாள். அப்பொழுது வாசலில் கார் வந்துநிற்கும் அரவம் கேட்டது. சொல்லிவைத்தாற்போல ராஜேந்திரன் வந்துகொண்டிருந்தான். அவனுடன்கூட ஓர் அழகியும் வந்தாள்.

காபியும் கையுமாக வந்த பூமா, தன் துணைவருடன் தோளோடு தோள் நிற்பவளைப் போல ஒட்டி நின்ற அந்த அழகியைக்கண்டதும் வாயடைத்து மலைத்து நின்றுகொண்டிருந்தாள். யார் இவள்—?

"காபி இருக்கிறது."

ராஜேந்திரனுக்கு பூமாவின் விண்ணப்பம் காதில் விழுந்தது. ஆனால் அவன் போய்விட்டான் அவளுடன்.

பூமாவின் அழுகை வளர்ந்தது. அதே சமயம் அன்று நாடகத்துக்குப் புறப்பட்ட போது, ரிக்ஷாவில் குறுக்கிட்ட பெண்ணைக் கண்டதும் தன் கணவன் மயங்கி விழுந்த சம்பவமும் நினைவு வந்தது. ஆனால் அந்தப் பெண் மல்லிகாவைப் பற்றி பூமா என்ன அறிவாள்?

ராஜேந்திரனுடன் வந்த அழகி யார் தெரியுமா? அவள் தான் பூங்.குழலி—அவன் சிநேகிதி!

ஆறும் அத்தியாயம்

கலைந்த கனவும் சிதைந்த காதலும்

ராஜேந்திரனுக்குக் கழிந்த சில நாட்களாகவே மல்லிகாவைப் பற்றிய ஞாபகங்கள் தாம் அடிக்கடி வளையமிட்டுச் சுற்றின.

அன்று தன் மனைவியுடன் நாடகத்துக்குப் புறப்பட்ட தருணம் ரிக்ஷாவில் குறுக்கிட்ட மல்லிகாவைப் பார்த்ததும், அதே கணம் நினைவிழந்து ராஜேந்திரன் தரையில் விழுந்துவிட்டான். அவளது முகதரிசனம் அவனை அப்படிச் செய்துவிட்டதுபோலும்! மதுரைக்குத் தான் வேலைக்கு வந்ததிலிருந்து அன்று வரை—ஏன், பூமாவுக்கும் அவனுக்கும் திருமணம் நடந்து முடிந்த அத்தனை மாதங்கள்வரை—ஒரு சமயம்கூட அவனுக்கு மல்லிகாவைப் பற்றிய நினைவே பிறக்கவில்லை.

ஆனால் கடந்த சில தினங்களாக அவனது மனக்கண்ணில் அதே மல்லிகா மலராத விநாடி கிடையாது. [illegible] மனக்கண்ணில் எந்நேரமும் எப்பொழுதும் மல்லிகா மலர்ந்து நின்றாள்; எங்கெங்குநோக்கினும் அங்கங்கே மல்லிகாதான் நீக்கமற நிறைந்து காட்சி தந்தாள். அவள் உருவம் அவன் முன் நின்றது; நின்று தன் பேரில் 'குற்றப் பத்திரிகை' படிப்பதுபோலத் தோன்றியது. அத்துடன் விடவில்லை. அவள் நினைவு அவன் மனத்தை ரம்பமிட்டு அறுத்தது. செய்யத்தகாததொன்றினைச் செய்துவிட்டதுபோல, ஆசைகாட்டி மல்லிகாவை மோசம் செய்துவிட்டதுபோன்றதொரு மன மயக்கம் ராஜேந்திரனை வாட்டி வதைத்தது. என்றும் தன்னுள் ஏற்பட்டிராத நரகவேதனையின் நிலையை—உணர்வை அவன் உள்ளுணர்வு எடுத்துக் காட்டியது. உலக்களம்

MADRAS JAN 1953



அணைத்துக்கொண்ட இரும்புத் துண்டென, அவன் இதயம் வெந்தது. அப்பப்பா...!

இரவு நன்ருக அயர்ந்து தூங்க வேண்டிய அசதி உடம்பில் இருந்தும், ராஜேந்திரனுக்கு உறக்கம் கொள்ளவில்லை. பல நினைவுச் சிதறல்கள்—அணைத்தும் மல்லிகாவை மையமிட்டுச் சுழன்றன.

மனத்திற்குச் சற்றேனும் தெளிவு வேண்டியிருந்தது. அன்றைக்கு வந்திருந்த மாதச் சஞ்சிகை ஒன்றை எடுத்துப் பிரித்தான் அவன். அட்டைப் படத்தைப் பார்த்துவிட்டு, அதற்கான கதையைப் பிரித்தான்.

'சிதைந்த காதல்' என்ற மகுடத்தின் கீழ் 'மல்லிகா' என்ற பெயரைக் கண்ட அவனுக்கு ஐம்புலன்களும் புலனடக்கம் செய்து விட்டனவோ என்ற வகையில், சூன்ய வெளி இடைவெளி காட்டமூளை மரத்துவிட்டாற் போலிருந்தது; முகம் குப்பென்று வியர்த்துக் கொட்டியது.

'மல்லிகா! யார் இந்த மல்லிகா? ஒருகால் அதே மல்லிகாவேதானே?'

கதை அவன் கருத்தைக் கயிறு கட்டி இழுத்தது. அவன் உடன்பட்டான்.

கதை முடிந்ததும், 'ஐயோ' என்ற அலறல் வெடித்துக் கிளம்பியது.

ஏறக்குறைய அதே நிகழ்ச்சி. ராஜேந்திரனும் மல்லிகாவும் காதல் கொண்டவிதம், பின் திருமணச் சமயத்தில், மல்லிகாவிற்கு அம்மை பூட்டவே காதலன் மனம் மாறுவது, ராஜேந்திரனுக்கு வேறு இடத்தில் மணம் நடப்பது, இதையறிந்து மல்லிகா ஏங்கித் தவிப்பது, கடைசியில் மனம் விரக்தியடைந்த கதாநாயகி தற்கொலை செய்துகொள்வது...இப்படி முடிந்திருந்தது கதை.

கற்பனைக் கதை என்ருலும், அதே பெயர்களை வைத்து அப்படியே எழுதியிருப்பதைக் கண்ட ராஜேந்திரனுக்கு உடலெங்கணும் ஒருவகைத் திகில் பரவியது. கைதிக்கூண்டில்

நிற்கும் குற்றவாளியைப்போல அவன் குமைந்துவிடலானன், கதையில் குறித்திருந்த கதா நாயகியின் முடிவைப் படித்ததும்.

'உண்மையாகவே மல்லிகா தான் இதை எழுதியிருப்பாளா? தன் இதயக் குமுறலை வெளிக் காட்டி ஆறுதலடையத்தான் இப்படிக் கதையை எழுதினளா? அல்லது நான் அவளை ஏமாற்றியதற்கு எனக்காக எழுதிய பாடமா இக் கதை? ஏமாற்றம் நானு செய்தேன்? விதியின் விளையாட்டல்லவா அது? உண்மையிலேயே அவள் விரக்தியடைந்து வாழ்வைப் போக்கிக்கொள்ளத்தான் முடிவிட்டிருப்பாளோ? அவள் மனதை மாற்றமுடியாதா? எந்த முகத்துடன் அவளைப் பார்க்கமுடியும்? ஐயோ...... மல்லிகா......'

மனதிற்குள் தன்னை மறந்து புலம்பினுன் ராஜேந்திரன்; அவன் உதடுகள் ஒட்டி விலகின.

அச்சமயத்தில்தான் அந்த எதிர்பாராத நிகழ்ச்சி நடந்தது.

"அன்பரே"

ராஜேந்திரன் உயிரைக் கையில் பற்றியவாறு மெல்லத் திரும்பினுன். மல்லிகாவின் குரல் மாதிரி இருக்கிறதே! மல்லிகாதான்...!

"அன்பரே."

"மல்லிகா."

"மல்லிகாதான்; ஆம்; நானேதான். 'அன்பரே' என்று அழைத்ததற்குத்தானு இப்படி அதிசய விழி விழிக்கிறீர்கள். ஐயா, நீங்கள்—நீர் என்னை வஞ்சித்துவிட்டீர். என் மீது காதல்கொண்டது போன்று நீர் நடந்ததெல்லாம் வெறும் நடிப்புத்தான் என்பதை நான் தெளிவாகப் புரிந்துகொண்டேன். எனக்கு அம்மை பூட்டியது; முகம் கெட்டது. அழகில்லை என்று நீங்கள் மாறிவிட்டீர்கள். வேறு பெண் உங்கள் வசம் வந்துவிட்டாள். உங்கள் பூமாவுக்கும் ஒருநாள் என்மாதிரி அம்மை பூட்ட நேர்ந்தால் என்ன செய்வீர்கள்? உடனே அவளையும் விட்டு விட்டு, இன்னொருத்திக்காக வலை வீசி நிற்பீர்கள். இல்லையா?

வெளி அழகு ஒன்றுதான் உங்கள் இலக்கணமா? மது வேண்டி மலருக்கு மலர் தாவித் திரியும் வண்டுதானு நீங்கள்? அது உங்களுக்கென்று எழுதிய வாசகமா? என்னை நீங்கள் மணம் செய்துகொண்ட பிறகு இத்தகைய அம்மை எனக்குப் பூட்டியிருந்தால் என்ன செய்வீர்கள்? என்னை வாழாவெட்டியாக்கியிருப்பீர்கள்? ஆம்; பழைய

நல்லவனும் ஞானியும் சில சமயங்களில் உலகத்தைக் கோபிக்கலாம்; சில சமயங்களில் அதற்காக வருந்தலாம். ஆனல், உலகில் தன் கடமையைச் செய்பவன் எவனும் அதனிடம் ஒருபொழுதும் அதிருப்தி கொள்வதில்லை என்பதுமட்டும் நிச்சயம்.

—கதே.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்

கதை எதற்கு? உங்கட்கு இதயம் என ஒன்று இருக்கு மானல், அது உங்களைச் சும்மா விடாது. அபலை ஒருத்தியின் கண்ணீர்த்துளிகளின் அடிப் படிடையில் எழுந்திருக்கும் உங் கள் வாழ்வுபற்றிய தீர்ப்பை— முடிவை மட்டும் மறந்துவிடா தீர்கள். முடிவு! ஆம்; ஒரு கன்னியின் சாபம் சும்மா போகாது. வருகிறேன்...''

நாடகங்களில் முக்கிய கட்டங் களில் பேசப்படுமே வசனங்கள், அவை போலிருந்தன அவ் வார்த்தைகள். அவை ஒவ் வொன்றும் ராஜேந்திரனின் காதுகளில் ஒலித்தன. அவன் அலறியடித்துக்கொண்டு எழுந் தான். அவன் முகம் அழுது அழுது வீங்கியிருந்தது.

இரவு மணி ஒன்பது.

கலைந்த கனவு!

உடைந்த உள்ளம்!

சிதைந்த காதல்!

அவன் புலம்பினுன் வாய் விட்டு. கைகளால் மேஜைமீது பலங்கொண்டமட்டும் குத்தி ஞன். ஏதோ ஓர் வெறி அவனை ஆட்டிப் படைத்தது.

நிர்மலமாயிருந்த வானம் கணத்திற்குள் இருண்டு, மேகங் கள் சூழ்ந்துகொண்டன. மேகம் கருக்கொண்ட வானம் மழை பொழிந்தது. மழை; இடி; மின் னல்!

ராஜேந்திரன் உணர்வு பெற் ருன். காபியுடன் நின்ருள் பூமா. நிமிர்ந்து பார்த்தான் வேண்டா வெறுப்புடன். கண்ட கனவு நினைவில் காட்சி கொடுத்தது.

'மல்லிகாவின் சாபம் பலித்துவிடுமா? பூமாவிற்கும் ஒருநாளில் அம்மை பூட்டிவிட் டால்... என்ன பயங்கரமான நினைவு? என்ன பயங்கரமான கனவு? கனவு நினைவின் நிழ லாட்டமே யன்ருே! மல்லிகா வின் வாழ்க்கை மாற்றத்துக்கு நானு பொறுப்பு? எய்தவனிருக்க அம்பை நோவதா? படைத்த ஆண்டவனை, தன்மீது வந்து விளையாடிய அம்பிகையை அல் லவா குறை கூறவேண்டும் மல்லிகா...' என்று நினைத்தான் அவன். குழம்பியமனம் பின்னும் குழம்பியது.

"காபி இருக்கிறது."

உள்ளமொடுங்க, கனவுதேய, கருத்துச் சாம்ப நின்றிருந்தாள் பூமா, இன்பச் சுமையைத் தாங் கியவண்ணம்.

"காபி..."

"ஓஹோ..."

தென்றலின் சுவை தோயக் கூறிய மனைவியின் சொல்லுக்கு முகத்தில் அடித்தமாதிரி பதில் வந்தது.

வெயிலில் வாடி வதங்கிய வண்ண மலர்போன்று பூமா சோபை குறைந்து காணப்பட் டாள். அவள் நேத்திரங்கள் நீர் கூட்டின.

ஏந்தி நின்ற காபியை 'லபக்' கென்று பிடுங்கி வாயில் ஒரு மடக்கு ஊற்றினுன் அவன். அவ்வளவுதான்! "சீ, மூதேவி. காபியில் ஜீனி போடக்கூடத் துப்பில்லாமல் அப்படி உன் நினைவு எங்கு சுற்றி அலைகிறது? ...சனியன்! உன் கண்ணில் விழித்தால்கூடச் சோறு கிடைக் காது...'' என்று அலறினுன், ராஜேந்திரன். ராஜேந்திரன் தானு இவன்...? பூமாவின் கணவன் தானு?...

சித்தப்பிரமை கொண்ட வனைப்போல அவன் சிரித் தான். காபி தம்ளரை ஓங்கிப்

பூமா மீது வீசினான். நல்லவேளையாக அவள் மயிரிழை நகர்ந்து கொண்டாள். தம்ளர் தரையில் மோதிக் கிடந்தது. என்றுமில்லாமல் இப்படித் தன் புருஷன் நடப்பது கண்டு பூமா தீயில் மெழுகென உருகினாள்; கண்ணீர் உகுத்தாள்.

"ஞாபகமில்லை; இன்றுமட்டும் தான் இப்படி நேர்ந்திருக்கிறது. இதற்கு இப்படி ஏன் தாறுமாறாக வார்த்தைகளைக் கொட்டுகிறீர்கள்? உங்களுக்கு மனசு சரியில்லை போலிருக்கிறது..."

"நாயே, எதிர்வார்த்தையாட வேறே உனக்குத் துணிச்சல் வந்துவிட்டதா? அன்றைக்கே கண்டவனுடன் சினிமாவுக்குப் போய் வந்ததற்கு உன்னை மண்டையில் அடித்துத் துரத்தியிருக்க வேண்டும். சனியனே, தொலைந்துபோ..." என்று ஆத்திரத்துடன் கூறி, அவன் பூமாவை எட்டி உதைத்தான்.

'ஐயோ'' என்று அலறிய வண்ணம் மூர்ச்சித்து விழுந்தாள் பூமா. பாவம், வேளை தப்பிய நேரமாயிற்றே...!

மழை இன்னும் சரியாக நின்றபாடில்லை. சொட்டுச் சொட்டாகத் தூறிக்கொண்டிருந்தது. என்ன நினைத்தானோ, இருந்திருந்தாற்போல் மழையைக்கூடப் பொருட்படுத்தாமல் கதவைப் 'படீரெ'ன்று சாத்திவிட்டு வெளியேறினான் ராஜேந்திரன்!

ஏதோ சிரிப்புச் சத்தம் கேட்கிறதே...!

யார் சிரிப்பு அது...?

என்ன...விதியின் சிரிப்பல்லவா...! உண்மையாகவா...?

(தொடரும்)

பொன்னி

(மாதமிருமுறை)

உள்நாடு

ஆண்டுச் சந்தா ... ரூ. 6-0-0

வெளிநாடு

ஆண்டுச் சந்தா ... ரூ. 7-0-0

ஓராண்டுக்குக் குறைந்த சந்தா கிடையாது. சிலோனுக்கு மட்டும் வி. பி. பி. மூலமாக அனுப்பப்படும். தனிப்பிரதிக்கு 0-4-9 தபால் தலை அனுப்பவேண்டும்.

உங்கள் சந்தா சம்பந்தமாக அலுவலகத்திற்கு எழுதும் போது, உங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட வேண்டியது அவசியம்.

பொன்னி லிமிடெட்

த. பெ. எண். 1165.

சென்னை — 21

தங்கை

கலைப்பித்தன்

ஆவி அகலும் வரையில் அளவிலாச் சந்தேகம். பிறகு மாருத துக்கம். சந்தேகத்தால் சந்தியில் நின்ற — நிற்கின்ற குடும்பங்களின் எண்ணிக்கை எண்ணத் தொலையா; ஏட்டில் அடங்கா. பாழுஞ் சந்தேகந் தான் என்னைச் சந்தியில் நிற்க வைத்து விட்டது. நண்பன் பகைவன் ஆனான். உயிர்த் தோழனின் உள்ளன்பை இழந்தேன். ஒளி மங்கியது. வளம் நிறைந்த வாழ்வு வறண்டது. அறிவழகன் தான் கெட்டவனா? இல்லை, சஞ்சலாதான் கொடிய உள்ளம் படைத்தவளா? வாழ்க்கையே போராட்டம் தானா? 'உணர்ச்சியின் வழியில் செல்பவர்களுக்கு வாழ்க்கை ஒரு சோக நாடகம்; அறிவின் வழி செல்பவர்களுக்கு அது ஒரு நகைச்சுவை நாடகம்' என்ற 'வால்போலி'ன் மொழிகள் பொய்யா? அறிவின் வழியில்தானே நான் செல்கிறேன். ஆமாம்; அறிவின் வழியில் சென்றவர்களெல்லாம் அடைந்த அல்லல்களை அறிவேன் நான். அவர்கள் சரிதம் — கண்ணீர்க் கதைகள் எனக்கு நன்ருகத் தெரியும்!

அன்பழகனும் நானும் கல்லூரித் தோழர்கள்; உற்ற நேசர்கள். அவன் பணக்கார வீட்டுப் பிள்ளை; இருப்பினும் என்னை நேசித்தான். எப்படியோ, எவ்விதமோ வளர்ந்த எங்கள் நட்பு கால வெள்ளத்தில் கரைந்தது.

மாலை, கல்லூரி விட்டு வரலானேன். அங்குள்ள பங்களாவை என் கண்கள் தேடிச் சென்றன. வடிவழகி சஞ்சலாவின் நயனங்களை என் கண்கள் விழுங்கின. அவள் என் முறைப்பெண். என் அத்தை மகள்! திரும்பினேன். அன்பழகன் நின்றுகொண்டிருந்தான். சஞ்சலா சுவரிலே சாய்ந்து கொண்டிருந்தாள். அன்பழகன் —சஞ்சலா! ஆம்; இந்த இரு பெயர்களையும் இணைத்துப் பார்க்க ஆரம்பித்து விட்டது என் இதயம்.

இருவரையும் குறித்து விபரீதமாக நினைத்துவிட்டேன். அன்றிலிருந்து அன்பழகனைக் கண்டாலே எனக்கு ஆத்திரமாக வந்தது. எனக்குப் போட்டியாக வந்துவிட்டானே என்று எண்ணினேன்.

சஞ்சலாவின் பிறந்த தின விழாவிற்கு எங்கள் குடும்பத்துக்கும் அழைப்பு வந்தது. நானும் புறப்பட்டுப் போனேன். படியைத் தாண்டி உள்ளே அடியெடுத்து வைத்தேன். ஆயிரந் தேள்கள் சேர்ந்து ஏக காலத்தில் கொட்டின போன்ற வேதனையால் துடி

துடித்தேன். அன்பழகனைச் சஞ்சலா அன்போடு உபசரித்தாள். ஊட்டி விடாததுதான் பாக்கி. 'உள்ளே போவதா, வெளியே வருவதா?' என்ற கேள்விக்கு விடை கிடைத்துவிட்டது. நான் வெளியே வந்துவிட்டேன். அன்றோடு அன்பழகன்மீது இருந்த கொஞ்ச அன்பும் குறைந்தது.

"கருணாகரா,—நீ ஏன் விருந்துக்கு வரவில்லை?"—அம்மாவின் அன்பு கனிந்த கேள்வி இது.

"வீடு வரையில் வந்தவன் திரும்பிவிட்டேன். வாந்தி வந்தது; அதனால் தான் நான் விருந்தில் கலந்துகொள்ள முடியவில்லை" என்று அம்மாவை நம்பவைத்தேன்.

"ஏண்டா, கருணாகரா இரவில் கண்விழித்து அதிகநேரம் படிக்காதே என்று நான் சொன்னதைக் கேட்டால்தானே, இப்பொழுது என்ன பாடு படுகிறாய்? படித்துப்படித்து

ஏன் உன் உடம்பை இப்படி அலட்டிக்கொண்டாய்? சோடா வாங்கி வரவா?" என்று என் அம்மா கேட்டாள்.

பாவம், அம்மா சோடா வாங்கி வருகிறாளாம். சோடாவால் நிற்கக்கூடியதா என் வேதனை? பெற்ற மனம் எதைக் கண்டது?

சஞ்சலாவிற்கு இருபத்திரண்டு வயதாகியும் கலியாணமாகவில்லை. அவள் தகப்பனார் என்னை மாப்பிள்ளையாக்கிக் கொள்ள விரும்பினார். நானோ பிடிவாதமாக மறுத்தேன். காரணம் கேட்டார். சொல்ல மறுத்துவிட்டேன்.

எப்படியோ எனக்கும் சஞ்சலாவுக்கும் திருமணம் நிறைவேறியது. மணம் நிகழ்ந்த தினத்திலிருந்து எங்கள் இருவருக்கும் மனப்பிணக்குத்தான். அது இருக்கட்டும்! கலியாண ஊர்வலம் தெருவழியாக வந்தது. அன்பழகன, சஞ்சலாவைப் பார்த்துக்கொண்டே இருந்தான். ரோஜாமலரைப் புழு அரிப்பதுபோல் என் மனத்தைச் சந்தேகம் அரிக்கத் தொடங்கியது.



திருமணமாகிய ஆண்டு உருண்டோடியது.

அன்று வரைநான் சஞ்சலாவோடு பேசவேயில்லை. அவள் ஒருநாள் என் தோளை உலுக்கினாள்.

"அத்தான்"

"என்னை அத்தான் என்று அழைக்காதே. உன் அத்தான் இங்கு இல்லை. மானங்கெட்டவளே, என் தோளை விடு" என்று சீறினேன். அப்போது அவள் தேகம் துவண்டது, புழுவாகத் துடித்தாள். அன்று படுத்தவள்தான். முப்பதாவது நாள் என்னை அன்புடன் அருகில் அழைத்தாள்.

"அத்தான்"

நான் பேசவில்லை. வேறு பக்கம் திரும்பிக்கொண்டேன். அவள் அலமாரியைக் காட்டினாள். அதில் இரு காகிதச் சுருள்கள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்றைப் படிக்கச் சொன்னாள். அந்தக் கடிதம் அன்பழகன் சஞ்சலாவுக்கு வரைந்தது. தூய அன்பு அதில் கலந்திருந்தது.

சஞ்சலா சலனமற்று என்னோடு வாதாடினாள்.

"அத்தான்"

"என்ன, சொல்லித் தொலை"

"இன்னும் சந்தேகம் தீரவில்லையா?"

"யார்மீது, என்ன சந்தேகம்?"

"என்மேல்தான்......"

"விளங்கவில்லையே"

"இன்பம் என்பது இன்னதென்று அறியாது இடர்ப்பட்டது எதனால்? திருமணமானதிலிருந்து என்னைத் திரும்பிப் பார்க்காதது எதனால்? நம் வாழ்க்கை வளம் பெறாததற்குக் காரணம் என்ன? ஏன் நமது வாழ்வில் இன்பம் தவழவில்லை? ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பாழாக்கிவிடாதீர்கள். இன்னொரு கடிதத்தையும் படித்துப் பார்த்தால் அப்பொழுது தெரியும்!"

"அன்புத் தங்கை சஞ்சலாவுக்கு,

ஆயிரமாயிரம் ஆசிகள். துயரத்தின் ரேகைகள்—துன்பத்தின் முத்திரைகள் பொறிக்கப்பட்ட உன் வதனத்தைப் பார்க்கும்போது எனக்கு ஒரே திகிலாக இருக்கிறது. உன் புன்னகை எங்கே போனது? உன் முத்துநகை எங்கே? சஞ்சலா, என் அருமைத் தங்காய், எனக்கு உடன் பிறந்த சோதரி இல்லை. அந்தக் குறையை நீதான் இட்டு நிரம்பினாய். உன் தூய்மையான அன்புதான் என் வாழ்வின் துயரங்களையெல்லாம் சகிக்கச் செய்கிறது.

என் நண்பன் கருணாகரன் என்னைப்பற்றித் தப்பபிப்பிராயங்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. உள்ளமறியச் சொல்கிறேன்! நான் கள்ளமில்லாதவன், குற்றமற்றவன் என்பதை அவன் அறிந்துகொண்டால் என் மனம் எவ்வளவு நிம்மதியடையும். நமது அன்பை—பாசத்தின் பின்னலை—வாஞ்சையின் தீஞ்சுவையை

அவன் விளங்கிக்கொள்ளாதது எனக்குப் பெரிதும் வியப்பை அளிக்கிறது.

சகோதரி சஞ்சலா, நமது சகோதர அன்பை அவன் இன்னமும் சரியாகத் தெரிந்துகொள்ளவில்லையே என்பதை எண்ணினால், கண்ணீர் ஆறாகப் பெருகுகிறது. கருணாகரன் முன்கோபக்காரன்; அதையறிந்து நீ அவனுக்கு நற்பணியாற்று. 'ஒருவர் பொறை இருவர் நட்பு'— எல்லாம் தெரிந்த உனக்கு நான் சொல்ல என்ன இருக்கிறது? விரைவில் எனக்குத் திருமணம் நடைபெறும். அழைப்பிதழ் அனுப்புகிறேன். எவ்விதமோ கருணாகரனைச் சமாதானப்படுத்தி இருவரும் வந்து என் திருமணத்தை நடத்தி வையுங்கள். அண்ணியை நீ பார்க்கவேண்டாமா?

உன் அண்ணா,
அன்பழகன்"

மனக்கலக்கத்தோடு, தடுமாற்றத்துடன் கடிதத்தைப் படித்து முடித்தேன். என் மனம் மாறியது. ஆ! நிரபராதியைக் குற்றவாளியாக்கி விட்டேனே!

நான் கலங்கினேன்; கதறினேன்.

அமைதி அழிந்தது!
சாந்தி சரிந்தது!
நிம்மதி நீங்கியது!

சில விநாடிக்கெல்லாம் கதவு தட்டும் சத்தம் கேட்டது; திறப்பதற்குச்சென்றேன். அன்பழகனின் கையில் கலியாணப் பத்திரிகை காட்சியளித்தது. நடந்த யாவற்றையும் அவன் கேட்டிருப்பவன் போன்று அவன் வதனம் வாடியிருந்தது. அவன் கையிலிருந்த கலியாணப் பத்திரிகை காற்றிலே பறந்தது.

"சகோதரி, சஞ்சலா"—அலறி விழுந்தான் அன்பழகன்.

"என்னாலா, உனக்கு இக்கதி சஞ்சலா?"— கதறினான் அன்பழகன்.

"அருமை அன்பழக அண்ணா" மேலும் பேசமுடியாமல் சஞ்சலாவின் வாய் மூடிக்கொண்டது.

அவள் கைகளை எடுத்துக் கண்ணிலே ஒற்றிக்கொண்டேன். சஞ்சலா, சஞ்சலமில்லா இடத்தில் சஞ்சரிக்கச் சென்றுவிட்டாள். என்னைப்போலவே அன்பழகனும் ஊர் சுற்றுகிறான். சந்தேகச் சூட்டிலே மூன்று மலர்கள் கருகிவிழுந்தன......! ★

சர்ஜீவன் சிலாஜித் லேகியம் எல்லாக் காலங்களிலும் பலத்தை அளிக்கிறது.

இது ஹிமாலய மலைகளிலிருந்து எடுக்கப்பட்ட சிறந்த லேகியம்

இதை உபயோகிப்பதால் தேக புஷ்டியும், தாது விருத்தியும் ஏற்படுவதுடன், வயிற்று வலி, பசியின்மை, க்ஷயம், இருமல், மலச்சிக்கல், வெகு மூத்திரம், வாய்வு, மூலம் முதலிய சகல ரோகங்களும் நிவர்த்தியாகும். மாணவர்கள் ஞாபகசக்தி பெற்று சுறுசுறுப்படைவார்கள். வயோதிகர்கள் பலம் பெறுவார்கள். ஸ்திரீகளுக்கு ஏற்படும் சகல ரோகங்களும் தீரும். குழந்தைகள் ஆரோக்கியமடைவார்கள்.

விலை:- 44 நாட்கள் டப்பி ரூ. 5-4-0 | தபால் செலவு
22 ,, ,, ரூ. 3.4-0 | இனாம்

நீலகிரி டிப்போ, அரிசிப்பேட்டை சவுக், பெங்களூர் சிட்டி.
NILGIRI DEPOT, AKKIPET SQ., BANGALORE CITY.

பெரி. சிவனடியான்

தலைவி :

என்னடி சொன்னவர் இன்னும் வரவில்லை
என்னென்னமோ மனம் செய்யுதடி ;
கன்னல் புளிக்குது, கண்கள் சிவக்குது
காதலினிக்குமிவ் வேளையிலே !

தோழி :

என்னம்மா செய்வது எங்கு நான் தேடுவேன்
எந்தச் சிறுக்கி வளைத்தனளோ ?
மின்னிடும் தங்கத்தை வீதியிற் கண்டவர்
வீணே விடுவதை நானறியேன்!

தலைவி :

என்ன நீ சொல்வது என்னை வதைக்குதே
எட்டைத் துளையிடும் ஆணியென ;
மன்னவர் பின்னே வரட்டுமடி பிற
மாது கை சிக்கா திருந்துவிட்டால் !

தோழி :

காரிருள் போக்கிடும் விண்மதியை வனம்
காய்த்துக் குலுங்கிடும் நற்கனியை
மாரி பொழிந்திடும் தெள்ளமுதைச் சொந்த
மாக்க நினைத்திடல் நீதியில்லை !

தலைவி :

பன்னெடு நாட்கள் புளித்த மதுவுண்டு
பாடிக்களித்திடும் மக்களைப்போல்
பின்னிப் பிணைந்து புரண்டு துவண்டுடன்
பேசப் பிறந்தவள் நானொருத்தி !

தோழி :

இந்த வுறுதியைக் கொண்டவளை இனி
ஏங்கவிடுதலென் வேலையில்லை ;
வந்தவரே ! மலர்க்காட்டில் மறைவோரே !
மங்கை முகம்காண வாருமையா !

"அன்புள்ள நளினா,

கல்லூரி விடுமுறையைக் கொஞ்சம் நிம்மதியாகக் கழிக்கலாம் என்றுதான் நான் ஊருக்குக் கிளம்பினேன். ஆனால் நான் விரும்பிய நிம்மதி இங்கே என் இல்லத்தில் கிடைக்காது போலிருக்கிறது!

அழகான பங்களா. அதிலே ஒரு சிறு தோட்டம். போக வர வாகனங்கள். பொழுது போக்கப் புத்தகங்கள். எல்லாம்தான் இருக்கின்றன. இருந்தும் என்ன? கும்பலும் கூச்சலும் நிறைந்து இருக்கும்போது நான் நிம்மதியாக வீட்டில் எப்படி இருக்க முடியும்?

ஒவ்வொரு ஆண்டு தசரா ஒய்வு நாட்கள் ஒவ்வொரு விதமாகக் கழிந்துபோயின! ஆனால் இவ்வாண்டு தசரா ஓய்வு நாட்கள் தேர்தல் போட்டியிலும் தெருக் கலாட்டாவிலும்தான் முடியும் போலிருக்கிறது! சில சமயங்களில் நினைத்துக் கொண்டால் என் ஊருக்கு வந்தோம் என்று எண்ணத் தோன்றுகிறது. இப்பொழுது இங்கே நகராண்மைக் கழகத் தேர்தல் நடக்கப்போகிறது. எங்கள் வர்ர்டில் என்னுடைய அப்பாவும், என்னுடைய பெரியப்பா மகனும் போட்டி போடுகின்றனர். என்னுடைய அப்பா அநேகமாக வெற்றியடைந்துவிடுவார். அப்பாவுக்கு எங்கள் வார்டிலே அமோகமான ஆதரவு இருக்கிறது. ஏனென்றால் இப்போதைய உறுப்பினர் அவர்தான். அப்படி இருந்தும் அவருடன் போட்டி போட என் அண்ணன்—என்னுடைய பெரியப்பா மகன் கிளம்பிவிட்டார். ஒரே இரத்தமாய் இருந்தும் புத்தி மாத்திரம் கோணலாய்ப் போனால் யார் என்ன செய்யமுடியும்? உள்ளபடியே சொல்கிறேன், நளினா! நான் மட்டும் என் அண்ணனுடன் பேசிப் பழக்கமுள்ளவளாய் இருந்தால், அவரை இந்தப் போட்டியிலிருந்து விலகிக் கொள்ளும்படி செய்து விடுவேன். ஆனால் அண்ணனோடு நான் பேசுவதற்குத்தான் என்னுடைய அப்பாவும் பெரியப்பாவும் பல ஆண்டுகளுக்கு முன் செய்து கொண்ட தகராறு ஒன்று நந்தியாக நிற்கின்றதே! இதைப் பற்றியெல்லாம் சிந்திக்க ஆரம்பித்து விட்டால், எனக்கு ஏன்தான் பணக்கார வீட்டில் பிறந்தோம் என்று எண்ணத் தோன்றுகிறது. என்னுடைய தாத்தா மட்டும் சொத்துச் சேகரித்து வைக்காமல் இருந்தால் என்னுடைய அப்பாவுக்கும் பெரியப்பாவுக்கும் தகராறு வந்திருக்காது. நானும் ஊர் உலகத்

தைப்போல அண்ணனோடு நல்ல விதமாகப் பழகி இருக்கலாம்!

இவர்கள் இரண்டுபேரும் போட்டி போட்டுக் கொள்ளப்போக, நடுவில் இருப்பவர்களுக்கு நல்ல யோகமாகப் போய்விட்டது. எதையாவது அவர்கள் அப்பாவிடம் சொல்லி விட்டுப் பணம் பறித்துக்கொண்டு போகிறார்கள். பணம்தான் தொலைந்து போனாலும் போகட்டும் என்று இருந்தாலும், இவர்கள் வைக்கும் தீ இன்னும் ஒரு நூற்றாண்டுக்கு எங்கள் குடும்பத்திற்கும் அண்ணன் குடும்பத்திற்கும் இடையில் புகைந்து கொண்டேயிருக்கும் போலிருக்கிறது. இதையெல்லாம் பார்த்துக் கொண்டும், கேட்டுக்கொண்டும் இருக்கும்போது நிம்மதி எங்கிருந்துகிடைக்கப்போகிறது, நளினா? ஏதோ காலம் ஒருமாதிரியாக ஓடுகிறது! இதுதான் இப்பொழுது இங்குள்ள நிலைமை.

மற்றப்படி...நீ எப்படி இருக்கிறாய்? ஊரில் இதே போன்று கூத்துகள் நடக்கின்றனவா? அப்படி எதுவும் படிப்பதற்கு எற்றதான செய்திகளை நீ எழுதி அனுப்பினால், அதைப் படித்துக்கொண்டாவது ஒருநாள் பொழுதை ஓட்டிவிடுவேன். மறந்துவிடாமல் பதில் எழுது.

அன்புள்ள உன் தோழி,

மீனு..."

2

"அன்புள்ள நளினா,

ஒலி பெருக்கிகளின் சத்தத்திற்கும், வாக்குச் சேகரிக்கக் கிளம்புவர்களின் சந்தடிக்கும் மத்தியிலே இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். இப்பொழுதுதான் தேர்தல் வேகம் உச்சநிலைக்கு வந்திருக்கிறது. அதோ ...எனது அண்ணன்... இல்லை— இல்லை...எங்கள் குடும்பத்தில் தோன்றிய 'கோடரிக் காம்பு' பொதுக் கூட்டத்திலே பேசிக்கொண்டிருக்கிறது. ஆஹா...மேடைமேலே ஏறிவிட்டால் எவ்வளவு அழகாகப்பேச ஆரம்பித்துவிடுகிறார்கள்! இந்தச் சமயத்தில் நீ இங்கு இல்லையே என்று எனக்கு வருத்தமாக இருக்கிறது.

'...இந்தத் தேர்தலிலே சித்தப்பாவும் மகனும் போட்டி போடுகின்றனர்' என்று பலர் பலவிதமாகப் பேசிக்கொள்கின்றனர். ஆனால் அவர்கள் இதுபோலச்சொல்வதினால் உண்மையை மறந்தோ, அல்லது மறைத்தோ விடுகின்றனர். இங்கே போட்டி போட்டுக்கொள்வது கோபாலனும் சதாசிவ முதலியாருமல்ல—பழமையும் புதுமையும். இங்கே போட்டி போட்டுக்கொள்கிறது சித்தப்பாவும், மகனுமல்ல...! முன்னால் இருந்த லஞ்ச ஊழல் நிர்வாகத்தின் பிரதிநிதியும், மாறுதல் விரும்பும் கூட்டத்தின் பிரதிநிதியும் ஆகும்...! ஆகவே உங்களிடம் நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், நீங்கள் வாக்களிக்க வரும்போது இன்றைய நிர்வாகம் மாற வேண்டுமா, அல்லது வேண்டாமா என்பதை ஆராய்ந்து உங்கள் இஷ்டம்போலச் செய்யுங்கள்...'

பேச்சு எவ்வளவு அழகாக இருக்கிறது, பார்த்தாயா? இதில் ஒரு வார்த்தைகூட என்னுடைய கைச்சரக்கு இல்லை. அவ்வளவும் அண்ணா கோபாலனின் திருவாயினின்றும் உதிர்ந்தவை. ஆனால் இதில் எவ்வளவு உண்மை இருக்கும் என்று நீ எதிர்பார்க்கிறாயோ, அதுதான் உண்மையில் இல்லை! என்னுடைய அப்பாவுக்கும், பெரியப்பாவுக்கும் இடையில் இருந்த பழைய விரோதத்தையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டுதான் இப்போது அண்ணா போட்டி போடக் கிளம்பியிருக்கிறார். இந்த உண்மையை அவர் வாயாலேயே பலரிடம் சொல்லிக்கூட இருக்கிறார். ஆனால் ஊரை ஏமாற்றவேண்டுமல்லவா? அதற்காகத்தான் இவ்வளவு வார்த்தை ஜாலங்கள்! அண்ணா இதுபோலப் பேசுவதில் எனக்கு ஒன்றுமில்லை. ஆனால் இந்தப் பாடத்தைச் சராசரியாக எல்லோரிடத்திலேயும் பாட ஆரம்பித்து

விட்டாரே என்று எண்ணும்போது தான் எனக்கு வேகம் வருகிறது.

நேற்று ஒரு சம்பவம் நடந்தது. நான் என்னுடைய அப்பாவுக்கு வாக்குகள் சேகரம் செய்யச் சென்றிருந்தேன். போன கடிதத்தில் தேர்தல் போட்டியைப்பற்றி வருத்தத்தோடு எழுதியிருந்த நானே இப்பொழுது என் வாக்கு சேகரம் செய்யச் சென்றேன் என்று யோசிக்கிறாயா? எல்லாம் என் அண்ணனுடைய திருவிளையாடல்கள் தான்! அவர் எங்கள் பகுதி மக்களிடத்திலே என் அப்பாவைப்பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்லி வாக்குச் சேகரம் செய்கிறார் என்று கேள்விப்பட்ட பிறகு என்னால் எப்படிப் பொறுத்துக்கொண்டிருக்க முடியும்?

ஒரு வீட்டில், நான் என்னுடைய அப்பாவுக்கு ஓட்டளிக்கும்படி அவ்விடத்திலுள்ள வாக்காளர்களை வேண்டிக்கொண்டிருக்கும்போது அண்ணனும் வந்துவிட்டார். அந்த வீட்டுக்காரர் எங்கள் இருவருக்கும் ஆசனமளித்து அமரச் செய்தார். எனக்கு என்னமோ அண்ணாவுக்கு எதிரில் உட்காருவது அவ்வளவு பிடித்தமானதாய் இல்லை. இருந்தாலும் நான் எடுத்துக்கொண்டிருக்கும் வேலைக்கு அதையெல்லாம் பார்த்தால் முடியுமா? பல்லைக் கடித்துக் கொண்டு உட்கார்ந்து இருந்தேன்.

அந்த வீட்டுக்காரர் எங்கள் இருவரையும் பார்த்து "வந்த காரியம் என்ன?" என்று வினவினார். நாங்கள் இரண்டுபேரும் வாக்குக் கேட்க வந்திருப்பதாகச் சொன்னோம்.

அவர் சற்று நேரம் யோசனை செய்து விட்டு, "நீங்கள் இருவரும் ஓட்டுக் கேட்கிறீர்கள். நான் யாருக்கு ஓட்டுப் போடுவதென்று எனக்குப் புரியவில்லை. உங்களுடைய தாத்தா என்னுடைய குடும்ப நண்பர். நீங்கள் இரண்டுபேருமே போட்டி போட்டுக்கொண்டால் என்னைப் போன்றவர்கள் எல்லாம் எந்த முடிவுக்கு வருகிறது என்று புரியவில்லை..." என்று சொன்னார்.

இதைக் கேட்டதும் கோபால் அண்ணா, "தனிப்பட்ட என்னையும், என்னுடைய சித்தப்பாவையும் பார்த்துவிட்டு நீங்கள் குழப்பமடைய வேண்டாம். எங்கள் இரண்டு பேருக்குள்ளே தனிப்பட்ட முறையிலே ஒரு போட்டியும் கிடையாது. உண்மையிலேயே சொல்லுகிறேன். என்வரைக்கும், சித்தப்பாவிடத்திலே இன்னும் மரியாதை காட்டிக் கொண்டுதான் வருகிறேன். ஆனால் போட்டி எங்களுடைய கொள்கைக்குள்ளேதான்! எங்கள் இரண்டு பேர் கொள்கையிலே எது உங்களுக்கு பிடித்தமாய் இருக்கிறதோ அதற்கு ஓட் போடுங்கள்" என்றார்.

அவருடைய பேச்சைக் கேட்டதும் எனக்குக் கோபம் வந்துவிட்டது. "இவர் மகா கொள்கை பேரிலேயே நிற்கிற அபேட்சகர்! அப்படிக் கொள்கைகளை மோதவிடவேண்டுமானால் நீங்கள் ஏன் நிற்கவேண்டும்?" என்று படபடப்போடு கேட்டேன்.

"அது என்னுடைய கட்சியின் கட்டளை."—அவர் அமைதியாகப் பதில் சொன்னார்.

"ஒரே குடும்பத்தைச் சேர்ந்த—ஒரே இரத்தம் ஓடுகின்ற இரண்டு பேரை மோதவிடுவதுதான் கட்சியின் கட்டளையோ? தேவலையே! பழைய விரோதத்தைத் தீர்த்துக் கொள்வதற்கு இது ஒரு புதுச் சாக்கு. ஆனால் இதை நம்புவதற்கு இப்போது யாரும் தயாராய் இல்லை" என்று சொல்லி நான கிளம்பிவிட்டேன். யாரோ சிரிப்பது போன்று கேட்டது. யார் சிரித்திருப்பார்கள்? எல்லாம்......!

அதிலிருந்து நான் தேர்தல் வேலையிலேயே மும்முரமாக இருக்கிறேன். நான் ஆரம்பத்தில் எண்ணியதுபோல் அவ்வளவு சுலபமாக அப்பா வெற்றி பெற்று விடமுடியாது என்று எண்ணுகிறேன். போட்டி மிகவும் கடுமையாக இருக்கிறது! நாங்கள் மிகவும் நன்றாக வேலை செய்வதால் 'வெற்றி



யடைந்துவிடுவோம்' என்ற நம்பிக்கை இருக்கிறது. அப்பா வெற்றியடைந்த பிறகு கோபாலிடம் நல்ல முறையில் பேச வேண்டும் என்று நாத் துடிக்கிறது!

இன்னும் சற்று நேரத்தில் நான் வெளியே செல்லவேண்டும். வேலைகள் நிறைய இருக்கிறது. இந்த நேரத்தில் உனக்கு அதிகமாக எழுதுவதற்கு என்னால் முடியவில்லை. ஆகையால் இத்துடன் இக்கடிதத்தை நிறுத்திக்கொள்கிறேன். அடுத்த கடிதம் நான் எழுதும்போது, 'அப்பா வெற்றியடைந்துவிட்டார்; என் உழைப்பு பலன் அளித்தது' என்ற நல்ல செய்தியை எழுதுவேன் என்று எதிர்பார்க்கிறேன். இடையிலே உள்ள இரண்டு நாட்களில் இன்னும் என்னென்ன நிகழப்போகிறதோ?

அடுத்த கடிதம் விரைவில் எழுதுகிறேன்.

அன்புள்ள உன் தோழி,
மீனா."

3

"அன்புள்ள நளினா,

இன்றுதான் தேர்தல் முடிவு தெரிந்தது. நான் எதிர்பார்த்தது நடைபெறவில்லை. எனது தகப்பனார் தோற்றுவிட்டார். நான்கு வாக்குகள்தான் வித்தியாசம்! இருந்தாலும் தோல்வி, தோல்விதானே! ஆனாலும் இதை நான் தோல்வியாகக் கருதவே இல்லை. இப்படி நான் எழுதுவதைப் பார்த்து உனக்கு ஆச்சரியம் உண்டாகலாம்! எனக்குக் கூட இதுபோல எழுதும்படி சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டதுபற்றி ஆச்சரியமாக இருக்கிறது!

இன்று காலையில் தெருப் பையன்கள் 'கோபாலனுக்கு ஜே!' என்று கோஷமிட்டுக்கொண்டு சென்ற போது எனக்கு மனம் வேதனையாக இருந்தது. மனவேதனையைப் போக்கிக்கொள்ள நான் புத்தகங்களிடம் சரணடைந்தேன்.

'மீனா...மீனா' என்று என் பாட்டி கூப்பிடும் குரல் கேட்டது. வெளியில் வந்து பார்த்தேன். அங்கே என் பாட்டியின் பக்கத்தில் கோபாலன் உட்கார்ந்திருந்தார். நான் திகைப்பினால் ஊமையானேன். எனக்கு வினைத் தெரிந்ததிலிருந்து கோபாலனை எங்கள் வீட்டிற்கு வந்து பார்த்ததே இல்லை! எதற்கு வந்தார் என்று என் மண்டையை உடைத்துக் கொண்டேன். என் மூளைக்குக் காரணங்கள் பலப்பலவாகத் தோன்றின. ஆனாலும் என்னால் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை!

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

அரசியல் என்பது வெறும் பொம்மை விளையாட்டல்ல; தேர்தல் காலங்களிலே எதிர்கட்சிகளைச் சார்ந்தவர்களை இழிவாக ஏசிப் பேச ஏற்பட்ட ஓர் வசதியுமல்ல. சமூக சக்திகள் ஒன்றோடொன்று மோதுதலின் விளைவுதான் அரசியல்!

—எஸ். சதாசிவம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

"யாரது!" என்று கேட்டுக் கொண்டு அதற்குள் அப்பாவே வந்துவிட்டார். அப்பாவைப் பார்த்ததும் அண்ணு திடீரென்று அவரது கால்களில் விழுந்து வணங்கினர். அப்பாவின் முகம் மாறியது.

"நீ ஜெயித்ததைப்பற்றி ரொம்ப சந்தோஷம். கடவுள் கிருபையாலே உனக்கு எல்லாச் சௌகரியங்களும் கிடைக்கட்டும்." என்று ஆசீர்வாதம் செய்து கோபால் அண்ணுவைத் தூக்கி நிறுத்தினர். கோபால் அண்ணுவின் கண்களில் நீர் துளிர்த்தது. அப்பாவுக்கு என்ன தோன்றியதோ என்னவோ, அண்ணனை அப்படியே அணைத்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டார். எனக்கு இதைப் பார்த்ததும் மயிர் கூச்செறிய ஆரம்பித்துவிட்டது.

"என் தம்பி அழுகிறே? கண்ணைத் துடைத்துக்கோ!" என்று சொல்லி, பாட்டி அப்பாவின் கண்களை துடைத்துவிட்டாள். ஆனல் சமாதானம் சொல்ல வந்த பாட்டியும் அழுதுகொண்டுதான் நின்ருள்.

இன்று மத்தியானம் 'வெற்றி விழா' விருந்து எங்கள் வீட்டில்தான் நடந்தது. என் அப்பாவைப் பார்த்தாலும் தேர்தலில் நின்று தோற்றவர் மாதிரியும் தெரியவில்லை! அவர் பாடுதான் இங்கே கொண்டாட்டமாக இருக்கிறது. அவருக்கே அப்படி என்ருல் என்னைப்பற்றிச் சொல்லவா வேண்டும்? இதுவரையில் தனியாக எங்கள் வீட்டில் காலம் கழித்த எனக்கு ஒரு அண்ணு கிடைத்த நாளைக்கொண்டாடாமல் விடுவேனு?

இந்தச் சந்தடியின் மத்தியிலே அப்பா என் பாட்டியிடம் பேசிக் கொண்டிருந்ததை என் காதுகளால் கேட்க நேரிட்டு விட்டது. அதைக் கேட்டதும்தான் அப்பாவின் திடீர் மாறுதலுக்குக் காரணம் தெரிந்தது.

கோபால் அண்ணு, காலம் சென்ற என் தாத்தாபோல இருக்கிருராம்! அதனல் தான் அப்பாவுக்குப் பழைய நினைவுகள் வந்து, கண்களிலே நீர் வடிய ஆரம்பித்து விட்டதாம்! எப்படி இருக்கிறது, நளினு? என்ன இருந்தாலும் இரத்த பாசம் விட்டு விடுமா? என்னமோ நளினு, சற்றி வளைத்துச் சுபமாக முடிந்துவிட்டது.

ஆனலும், எனக்குள்ளே இன்னும் ஒரே ஒரு சந்தேகம் மட்டும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அது என்ன தெரியுமா? எங்கள் இரத்தத்திற்கே ஒரு தனிக் குணம் உண்டு. எங்கள் குடும்பத்திலே இருக்கிற எல்லோருக்கும் ஒரு பிடிவாதக் குணம் உண்டு. ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுப்பது என்பதே கிடையாது! அப்படி இருக்கிறபோது எங்கள் கோபால் அண்ணு மட்டும் இப்படி விட்டுக் கொடுத்து, ஒற்றுமைக்கு வழிகோலி விட்டாரே என்பதற்கு காரணம் மட்டும் புரியவில்லை. ஒருவேளை அவர் யாரிடமிருந்தாவது பயிற்சி பெற்றிருப்பாரா? இல்லாவிட்டால் எப்படி அவர் இவ்வளவு தூரம் மாற்றமடைந்து விட முடியும்?

எனக்கு எதிரில் மாட்டியிருக்கும் படத்திலிருக்கும் ஒருவர் என்னை நோக்கிச் சிரிக்கிருர்! எல்லாம் அவர் போதித்த பாடமாய்த்தான் இருக்கும்! அவரைக் கூட நான் உனக்குச் சொல்ல வேண்டுமா? அவர்தான் நம் காந்தித் தாத்தா!

மற்றச் செய்திகள் நேரில் சொல்லுகிறேன். ஓய்வு நாட்களும்தான் ஒரு வழியாக முடிந்து விட்டனவே! வணக்கம்.

உன் அன்புள்ள தோழி,

மீனு" ★

தாபம்

தமிழ்த்தும்பி

உயர்ந்த தேக்கு மரத்தில் அழகிய வேலைப்பாடோடு செய்யப்பட்ட அந்த மரக் கட்டிலில் விரிக்கப்பட்டிருந்த மென்மையான பஞ்சு மெத்தையில் கிடத்தப்பட்டிருந்தாள் நவரத்தின மாலை. அவளைச் சுற்றி அவளுடைய தாயும் தோழிகளான குணமாலா, அமுதவல்லி, காமவல்லி ஆகியோரும் கவலையோடு அவளை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர். நவரத்தினத்தின் உடல் அனல் பிழம்பெனக் கொதித்தது. உச்சந்தலையிலிருந்து உள்ளங் கால் வரை ஒரே சூடு மயமாக வியாபித்திருந்தது. வியர்வை மணிகள் முத்து முத்தாக அவள் உடலெங்கும் அரும்பியிருந்தன. நோய்வேகம் தாங்காது அவள் துடித்து அரற்றிக் கொண்டிருந்தாள். அவ்வப்போது இமைகளைத் திறந்து மூடினாள் நவரத்தினம்.

அவள் உடல் வெப்பத்தைத் தணிக்கக் குணமாலையும், காமவல்லியும் அவளுக்கு வீசினர். படுக்கையின் இரு பக்கமும் வீசினால் வெம்மை குறையுமென அவர்கள் நம்பி, விசிறியைக் கொண்டு வீசினர். தகிப்பின் கொடுமையைத் தாளாத நவரத்தினம், விழிகளை அகல விரித்து முகத்தைச் சுளித்துத் தன் வெறுப்பைக் காட்டினாள். அவள் விழிகளுக்கு எதுவும் தெளிவாகப் புலப்படவில்லை. யாரோ தன்னைச் சுற்றி அமர்ந்துள்ளனர் என்பது மட்டும் தெரிந்தது. தன் உடலை நோக்கி ஏதோ அசைகிறது, அது தன் உடல் வெப்ப வேகத்தை அதிகப் படுத்துகிறது போல இருப்பதை உணர்ந்தாள். அதாவது, விசிறிகள் வீசப்படுவது அவ்வாறு அவளுக்குத் தெரிந்தது.

நவரத்தினம் முகம் சுளிப்பதைப் பார்த்த அமுதவல்லி 'காற்றுப் போதவில்லை போலும்' என நினைத்துச் சாளரப் பக்கம் சென்றாள். பல்வகை நிறங்களில் ஆக்கப்பட்ட திரைச் சீலையை விலக்கினாள். தென்றல் வேகமாக அறைக்குள்ளே நுழைந்தது. சாளரம் வழியே அமுதவல்லி தூரத்தே தெரியும் நீண்ட மலைத் தொடரை நோக்கினாள். 'ஏ, நீளும் மலையே! எங்கள் நவரத்தினத்துக்காக இன்னும் கொஞ்சம் குளுமைத் தென்றலை அனுப்புவாயாக!' என்று அவள் வாய் பிதற்றியது.

கோடை வெம்மையைக் குறைப்பதற்கென்றே சிலவகை மலர்க் கும்பல்கள் உள்ளன. அவை எப்போதும் தம்மகத்தே தண்ணீரையும், அதனால் ஏற்படும் ஈரப்பசையையும் அடக்கிக் கொண்டிருக்கும். இந்த மலர்களின் தன்மை தெரியாது, இவற்றைச் சிலர் குளிர் மிக்க மழைக்காலத்தில் அணிவர். இவற்றைப் பற்றின குறிப்புக்கள் தமிழ் இலக்கியத்தில் ஆங்காங்கு வருகின்றன. அமுதவல்லி, சாளரத்தைத் திறந்தாள். வெளியில் சென்று இக் குளிர் மலர்களைத் திரட்டச் சென்றாள். நவரத்தினத்தின் அன்னையும், மகளுக்கு உணவு ஏதாவது ஏற்பாடு செய்யலாமெனச் சமைக்கும் அறைக்குச் சென்றாள். குணமாலாவும், காமவல்லியும் இன்னும் வீசினர்.

சிறிது நேரம் சென்ற பின், அமுதவல்லி மலர்க்கும்பலோடு திரும்பினாள். வந்ததும் வாராததுமாக, மலர்களின் குளுமைப் பகுதிகளை மட்டும் ஒன்று சேர்த்தாள். நவரத்தினத்தை மஞ்சத்திலிருந்து அப்புறப்படுத்தி மலர் வகைகளை மஞ்சமெங்கும் பரப்பினாள். ''பூமலர் மெத்தையில் பரப்பியிருக்கிறேன். இனி, கொஞ்சம் வெப்பம் குறையும்'' என்று அமுதவல்லி நவரத்தினத்திடம் சொன்னாள்.

சமையல்கட்டுக்குச் சென்ற அன்னை வேறொன்றும் தயாரிக்க முடியாததால், ஒரு கிண்ணம் நிறையப் பசும் பாலைக் கொண்டு வந்தாள். சூடாக்கப் பட்ட பால் மணம் 'கம்' மென்றிருந்தது. நவரத்தினத்தை எழுப்பி அன்னை 'பால் அருந்து' என்று சொல்லிப் புதல்வியின் தலையைத் தன் மார்பின் மேல் தாங்கிக் கொண்டாள். பால் கிண்ணத்தை மகளின் வாயருகே கொண்டு சென்றாள்.

நவரத்தினத்துக்கு எரிகிற கொள்ளிகள்மேல் சாய்க்கப்பட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது; இவ்வளவுக்கும் அவள் உடல் முழுதும் குங்குமமும், சாந்தும் பனிநீரும் தெளிக்கப்பட்டிருந்தது. விழிகளை மெல்லத் திறந்து அவள் பால் கிண்ணத்தை நோக்கினாள். வெண்மையான பால் அவள் கண்ணுக்கு மஞ்சளாகப்பட்டது. தன்னை ஏன் எல்லோரும் சேர்ந்து சித்திரவதை செய்து ஏமாற்றுகின்றனர் என அவளுக்குப் புரியவில்லை.

காரணம் இதுதான். பசலை படர்ந்துவிட்ட அவள் உடம்பு காமாலை கண்டது போலக் காணப்பட்டது. இரத்த அளவும், இரத்த வேகமும் குறைந்து, இரத்தம் அளவுக்கு மீறி அழிக்கப்பட்டதால், அவள் கண் மஞ்சள் நிறம் பெற்றது. மஞ்சள் கண்ணாடி போட்டால் உலகம் மஞ்சளாகத் தானே தெரியும்? அவளுக்குப் பால் நிறம் மஞ்சளாகத் தெரிந்தது.

'மன்மதன் கொடி, மீனும்; அவன் மாலை, மஞ்சளாம்' என யாரோ நவரத்தினத்துக்குச் சொல்லியிருந்தனர். அந்த மன்மதனுடைய மாலையைப் பிழிந்து, அதன் சாற்றை ஒரு கிண்ணத்தில் பிடித்து அதைப் பால் என்று தன் தாய் சொல்லுகிறாளே என்று அவள் மனம் புண்பட்டாள்.

மன்மதன் என்றதுமே, அவளுக்கு இரண்டு நாள் முன் பார்த்த மன்னன் கூளப்ப நாயக்கன் நினைவு வந்தது. அடடா, அதுவல்லவா குளிர் முகம்! மழைபோல அருள் புரியும் அந்த முகம், தனக்கும் கருணை காட்டியிருந்தால்...? இப்படித் தன் சுற்றமே தன்னை எய்க்குமா? கூளப்பன் மனதைவிட்டு அகன்ற பின் தன் தோழிகளும் தாயும்தன்னை வருத்துவதை அவள் கண்டாள்.

நவரத்தினமாலை சொல்லலானாள்:

"வெம்மையை ஒடுக்க எனக்கு வீசுபவர் போல வெயில் கொடுமையை யெல்லாம் என்மேல் ஏவுகிறீர்களே, தோழிகளே! சாளரத் திரைச் சீலையை நீக்கி, பசி மிக்க ஒரு கொடும் புலியைப் பாயவிட்டு மலைத் தென்றல் என்று சரடு விடுகிறீர்களே? காதல் உத்வேகத்தை மிகுதிப்படுத்தும் மல்லிகை, மகிழம்போன்ற பூக்களைப் படுக்கையில் விரித்து, குளிர் மலர்கள், வெம்மையைக் குறைக்கும் பூக்கள் என்று பொய் சொல்கிறீர்களே? அன்னையே, மஞ்சள் மாலையின் சாற்றைக் கிண்ணத்தில் பிடித்துப் பால் என்று சொல்லி என்னை ஏமாற்றப் பார்க்கிறீர்களே? தேடும் விலைப்பெண்ணிடம் கணவனை அனுப்பிவிட்டு, வாடும் மனைவியிடம் வந்து ஏன் வருந்துகிறாய் என்று துக்கம் விசாரிப்பதுபோலல்லவா எனக்குக் குங்குமமும், சந்தனமும், பனிநீரும் தெளிக்கிறீர்கள்? என்னே உங்கள் கொடுமை!"

தோழிகளும், தாயும் ஒருவரையொருவர் ஒன்றும் புரியாது விழித்து வாயைப் பிதுக்கினர்.

சுப்ரதீபக் கவிராயர் இயற்றிய 'கூளப்ப நாயக்கன் காதல்' என்ற நூலில் வரும் நாயகியான நவரத்தினமாலை தாபரஸத்துக்கு ஒரு இலக்கியமாகிவிட்டவள். எவ்வளவு சிக்கலான தாபநிலையை எவ்வளவு எளிய மொழியில் கவிஞர் வெளியிடுகிறார்? கூளப்ப நாயக்கன்பால் காதல் கொண்ட நவரத்தின மாலை

தாப வெறியில் இவை யாவையும் சொல்கிறாள்.

இதே நிலையை நந்திக் கலம்பக ஆசிரியரும் எவ்வளவு நயமாக, இலகுவாகச் சொல்கிறார்!

செந்தழலின் சாற்றைப் பிழிந்து
செழுஞ்சிதச்
சந்தனமென்று ஆரோ தடவினார்.

—நந்திக்கலம்பகம்

[தழல்-நெருப்பு, சிதம்-குளிர், ஆரோ-யாரோ]

நந்திக்கலம்பக ஆசிரியர் சொல்வதைச் சுப்ரதீபக் கவிராயர் எப்படிச் சொல்கிறார், பாருங்கள்!

வேடையெலாந்திர் என்மேல்
வீசுவார் போல, வெயிற்
கோடையெல்லாம் என் மீதிற்கொண்டு
வந்துவிட்டீரே!

சாளரத்தை நீக்கித் தனிப் புலியைப்
பாயவிட்டு
நீளுமலைத் தென்றலென்றீர், நிட்டூரஞ்
செய்தீரே!
காமரசமெல்லாங் கனக மஞ்சமேற்
பரப்பிப்
பூமலர் என்றீர், பொய்யும் படித்தீரே!
சேலென்ற கேதனத்தோன் தேமாலை
யைப் பிழிந்து
பாலென்று தந்தீர், பழிகாரர் ஆனீரே!
மங்கை நல்லீர்! என்றன் வனமுலைக்கு
நீர் அணிந்த
குங்குமமுஞ் சாந்தும் குளிர்ந்த
பனிநீரும்
தேடும் பரத்தையர் பாற் காதலனைச்
செல்லவிட்டு
வாடும் மனையாள் மனம் போற்
கொதிக்குது!

—கூளப்ப நாயக்கன் காதல்

[வேடை—வெப்பம்; சாளரம்—ஜன்னல்; சேலென்ற கேதனத்தோன்-மீனக்கொடியுடைய மன்மதன்.]

★

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் சிலவு தனி)

கர்ப்பதடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)
Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பாவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் சிலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, (   ) MADRAS-1.
கிளை 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.
சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 62 MAIN ST. கொழும்பு-11.

சிறுவர் தொடர் கதை

காகிதப் படகு

"எல்லார்வி"

'கீரன்' என்ற புனைப் பெயரில் 'எல்லார்வி' எழுதிய குழந்தைக் கதைகள் எண்ணிலடங்காதவை. 'காகிதப் படகு' கதையின் ஒவ்வொரு அத்தியாயமும் உயிரும் உணர்ச்சியும் செறிந்திருக்கும்; குழந்தைகள் தெரிந்துகொள்ளத்தக்க, தெரிந்துகொள்ளவேண்டிய புத்திமதிகள் நிறைந்திருக்கும். சுவைமிக்க தொடர் கதை!

1. விளையாட்டின் விபரீதம்

அன்று விடியற்காலையிலிருந்தே மழை விடாமல் கொட்டிக்கொண்டிருந்தது. நாலைந்து நாட்களாகவே இடைவிடாத மழைதான் என்றாலும், அன்று அதன் ஆதிக்கம் மிக்கக்கடுமை. வேலை, வெட்டி என்று நடமாடுகிற மனிதர்களெல்லாம் குளிர் தாளாமல் வீட்டிற்குள் இழுத்துப் போர்த்துப் படுத்துக்கொண்டிருந்தனர். மாடு, கன்றுகள் எல்லாம் தொழுவத்திலே வைக்கோலை அரணாக்கிக்கொண்டு ஒண்டிக் கிடந்தன. சுயேச்சையாகப் பறந்து திரியும் பறவைகள் கூட்டுக்குள் செயலற்று அடைந்து கிடந்தன. சூரிய ஒளியை மீண்டும் நாம் பார்ப்போமோ என்ற ஏக்கம் ஒவ்வொரு உயிரின் உள்ளத்திலும் நிறைந்து கிடந்தது.

ஆனால் இந்த நிலை, மற்ற எல்லா இனங்களுக்கும் எத்தனை துன்பமாக இருந்ததோ, அத்தனைக்கு அத்தனை ஒரே ஒரு இனத்திற்கு மட்டும் அள

வற்ற இன்பத்தைப் பயப்ப தாக இருந்தது. அது எந்த இனம் தெரியுமா? சிறுவர் சிறுமியர் இனந்தான். ஆம், அவர்களுக்கு மழை என்ருலே ஆசை; அளவற்ற ஆசை. கனமழை அடைமழை, விடாமழை என்ருல் அவர்கள் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. பள்ளிக்கூடம் போகவேண்டாம், பாட்டியின் தொண தொணப்புக்கு அஞ்சி எண்ணெய் தேய்த்துக் கொள்ள உட்காரவேண்டாம்; பெரியோர் கட்டளைக்கு இணங்கிக் கடைக்கு ஓட வேண்டாம். இத்தனையையும் விட்டு ஆனந்தமாக, குதூகலமாக, சுதந்தரத்தோடு நாலைந்து சிறுவர் சிறுமியர் கூடி வசதியுற்ற ஒருவர் வீட்டிலே குதித்துக் கும்மாளமிட்டு விளையாடலாம் அல்லவா? தெருவிலே இறங்கி மழையிலே நனைந்தால்தான் பெரியோர் வைவர். வீட்டின் உட்புறத்தில் கூடத்திலோ, தாழ்வாரத்திலோ, நடையிலோ அறையிலோ, தெருத் திண்ணையிலோ உட்கார்ந்து இஷ்டப்பட்ட விளையாட்டுக்களை விளையாடுவதை யார் தடுக்கப் போகிருர்கள்? அதனல் தான் குழந்தைகளுக்கு மழை என்ருல் அத்தனை ஆனந்தம்!

மாலை ஐந்து மணி இருக்கும். மழை 'ஜோ' என்று கொட்டிக் கொண்டிருந்தது. சாலைகளிலும் தெருக்களிலும் மழைத் தண்ணீர் ஆருய்ப் பெருகி ஓடிக் கொண்டிருந்தது. கீரனூர்க் கிராமத்துத் தெருக்களில் உள்ள சில வீடுகளில் மேற்சொன்னவாறு சிறுவர் கூடி வெகு உற்சாகமாக விளையாடிக் கொண்டிருந்தனர். தெற்குத் தெருவிலே முனையில் உள்ள உயர்ந்த வீடு சபாபதி முதலியாருடையது. அந்த வீட்டுத் திண்ணையிலும் நாலைந்து சிறுவர்களும் இரண்டு மூன்று சிறுமிகளும் கூடிப் பகல் பன்னிரண்டு மணி முதல் தலைகால் புரியாத உற்சாகத்துடன் விளையாடிக் கொண்டிருந்தனர். கண்ணுமூச்சி, அம்மையார் சிட்டு, தாயக்கட்டம், ஓடிப்பிடித்தல்—இப்படி எத்தனை எத்தனையோ வித விளையாட்டுக்கள் ஆகிவிட்டன. இனிமேல் என்ன விளையாடுவது என்கிற நிலையில் அவர்களுக்குச் சற்றே அலுப்புத் தட்டிவிட்டது. அப்போது கோவிந்தன் என்ற சிறுவன் அபூர்வமான யோசனை ஒன்று சொன்ஞன். காகிதத்தால் படகு செய்து தெருவிலே ஓடும் மழைத் தண்ணீரில் மிதக்க விட்டு அதை வேடிக்கை பார்த்து மகிழலாம் என்பது தான் அவனது சிறந்த யோசனை. கோவிந்தன் சொல்லி முடித்ததும், எல்லோரும் மகிழ்ச்சி தாளாமல் 'ஆ, ஊ' என்று குறுக்கிட்டு ஆர்ப்பாட்டம் செய்து குதித்தனர். அவர்களால் அது தான் செய்ய முடிந்ததே தவிர, வேறு எதுவும் செய்ய முடியவில்லை. கொட்டுகிற மழையிலே வேறு என்ன தான் செய்ய இயலும்?

முதலில் காகிதம் வேண்டும். எங்கே கிடைக்கும் என்று யோசனை செய்தனர். 'என் வீட்டிலே நிறைய இருக்கிறதடா' என்று ஒருவன் முதலில் சொன்ஞன். அதைத் தொடர்ந்து ஒவ்வொருவரும் அதே பல்லவியைத் திருப்பிப் பாடினர். ஒரு சுற்று எல்லோ

ரும், 'என் வீட்டிலே நிறைய இருக்கிறதடா' என்று சொல்லி முடித்ததும், முதலில் சொன்னவனைப் பார்த்து இன்னொருவன் "சரி, நீயே போய்க் காகிதம் எடுத்துவாடா" என்றான். ஆனால் அவன் தயங்கினான். "மழை கொட்டுகிறதேடா! எப்படியடா வீட்டுக்குப் போகிறது? அம்மா திட்டுவாளே!" என்றான். அவ்வளவு தான்; மற்றவர்களும் இதே முறையில் ஒவ்வொரு காரணத்தைச் சொல்லித் தட்டிக் கழிக்கலாயினர். பரபரப்புடன் பேச்செடுத்த விஷயம் காற்றுவாக்கிலே மறையலாயிற்று.

இது அச்சுதனின் மனத்திற்குத் திருப்தி தரவில்லை. அவன் படிப்பிலே பூஜ்யம். விளையாட்டிலே— விஷமத்திலே— தீரன். அதிலும் 'நமிட்டுவிஷமம்' என்பார்களே, அதிலே மிகமிகக் கைதேர்ந்தவன். புரட்சிகரமாக ஏதாவது செய்வான். விஷமம் அம்பலமாகிப் பெரியோர் செவிக்கு எட்டிக் கெடுபிடிகள் ஏற்பட்டுத் தண்டனை பெறும் சந்தர்ப்பம் வரும்போது 'இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா!' என்று எல்லோரும் நினைக்கக் கூடிய வகையில் பரம சாது போல வேஷம் போட்டுப் பழியை வெகு நாசூக்காக, குந்தினாற் போல யார் தலையிலாவது சுமத்திவிட்டு அவர்கள் தண்டனை பெறும் போது கேலி செய்து சிரிப்பதில் வல்லவன். இத்தகைய உத்தம குணங்கள் படைத்த அச்சுதன் யார் தெரியுமா? அந்த வீட்டிற்கு உரியவரான சபாபதி முதலியாரின் திருக் குமாரன் தான் அவன்.

முதலியாருக்கு வெகு நாள் வரையில் குழந்தையே பிறக்கவில்லை. அவர்கள் குழந்தையை வேண்டி எவ்வளவோ தான தருமம் செய்தார்கள்; பயனில்லை. 'சரி, நமக்கு இந்தப்

பிறவியிலே குழந்தையை அடையும் பாக்கியம் இல்லை போல் இருக்கிறது' என்று முதலியார் வெகு ஆயாசத்தோடு இருக்கிற சமயத்திலே அவருடைய அருமைச் சகோதரி ஒரு குழந்தையைப் பெற்று விட்டுக் காலமானாள். அவள் காலமான சிறிது காலத்திற்கெல்லாம் அவள் கணவனும் காலமாகி விடவே, அந்தக் குழந்தை அநாதையாகி விட்டது. பிள்ளைக்கு ஏங்கி நின்ற முதலியார் அந்தக் குழந்தையை எடுத்து வந்து தம் சொந்தக் குழந்தையாகவே எண்ணி வளர்த்து வரலானார்.

கோபாலன் என்ற பெயருடைய அந்தக் குழந்தை வெகு அழகாக இருந்தது. ஊரில் உள்ள எல்லோருமே அதன் அழகைக் கண்டு மயங்கினர். முதலியார் அந்தக் குழந்தைக்கு ஒரு பங்கு செல்லங் கொடுத்தார் என்றால் ஊரார் ஒன்பது பங்கு செல்லங் கொடுத்தனர். ஆனால் முதலியார் மனைவி கோமளம் மட்டும் இதற்கு விலக்காக இருந்தாள். என்ன காரணத்தாலோ அவளுக்குக் கோபாலனிடம் துளியும் பிரியமே ஏற்படவில்லை. 'என்ன தான் இருந்தாலும் இது இரவல் குழந்தை தானே? நாம் மலடி தானே?' என்பன போன்ற எண்ணங்கள் அவள் மனதிலே தோன்றி வளர்ந்து கொண்டே போயின. அவள் எண்ணங்களுக்கேற்ப விரைவில் அந்த வீட்டிலேயே ஒரு பெரிய மாறுதல் நிகழ்ந்தது.

கோபாலன் முதலியார் வீட்டிற்கு வந்து சேர்ந்த மறு ஆண்டில் கோமளம் ஓர் ஆண் குழந்தைக்குத் தாயானாள். கோமளத்திற்கு இதில் முழு ஆனந்தம். முதலியாருக்கு மட்டும் இல்லாமலா இருக்கும்? ஆனால் அவர் கோபாலனைத் தம் முதற் குழந்தையாகவும், அச்சுதனை இரண்டாவது குழந்தையாகவுமே பாவித்தார். எந்தக் காரியத்திலும் கோபாலனுக்கே முதல் சலுகை காட்டினார். இது கோமளத்திற்கு உள்ளூர எரிச்சலை விளைவித்தது. காலம் செல்லச் செல்ல, அவள் தன் மன உணர்ச்சிகளை வெளிப்படையாகக் காண்பித்துக் கொள்ளவும் ஆரம்பித்தாள். அதனாலேயே, கோபாலனுக்கு கோமளத்தின் ஆதரவு குறைவு என்பதனாலேயே, கோமளம் கோபாலனைக் கரிக்கிறாள் என்பதாலேயே—முதலியாருக்கு அவன் மீது உள்ள ஆசையும் பாசமும் பன்மடங்காகப் பெருகலாயின. கணவன் மனைவியருக்குள் கோபாலன் சம்பந்தமாக இப்படி ஒரு போராட்டம் மறைமுகமாக நடந்து கொண்டிருக்கையில், கோமளம் மீண்டும் ஒரு பெண் குழந்தைக்குத் தாயானாள்.

அந்தப் பெண் குழந்தையின் பெயர் ராதை. அச்சுதன் அழகு முதலிய எல்லா அம்சங்களிலும் எத்தனைக்கு எத்தனை குறைவுடையவனாக இருந்தானோ, அத்தனைக்கு அத்தனை ராதா சகல அம்சங்களிலும் மேம்பட்டவளாக விளங்கினாள். கண்டோர் வியந்து மகிழத்தக்க லட்சணங்களுடனும் புத்தி சக்திகளுடனும் விளங்கிய கோபாலன், ராதா இருவர் நடுவே குரங்குக் குட்டிபோல வளர்ந்து

வந்தான் அச்சுதன். முதலியார் மூன்று குழந்தைகளையும் சமநோக்கில் நடத்தினர். கோமளம் வஞ்சக மனே பாவத்துடன் தன் குழந்தைகளை ஒருவிதமாகவும், நாத்தியின் மகனை ஒருவிதமாகவுந் தான் நடத்திவந்தாள். இந்த நிலையில் குழந்தைகள் மூவரும் வளர்ந்து வந்தனர்.

கோபாலனும் ராதையும் படிப்பிலும் நற்குண நல்லொழுக்கங்களிலும் மேம்பட்டு விளங்கினர். அச்சுதன் படிப்பிலே சூனியனுகவும், தீய குணங்களிலும் கெட்ட செயல்களிலும் மேம்பட்டவனுகவும் விளங்கினன். அவன் செய்யும் விஷமங்களுக்கெல்லாம் கோபு கோமளத்தினிடம் அடியும் திட்டும் பெற்று வந்தான். இருந்தும் பொறுமையுடன், எதிர்த்துப் பேசாமல் 'இது நம் தலைவிதி' என்று இருந்துவந்தான். குழந்தை ராதை கோபுவுக்காக இரங்கினள். அந்த இரக்கத்தினலேயே அவளிடம் அவனுக்கு இயற்கையாக உள்ள அன்பும் மதிப்பும் அதிகரித்துக் கொண்டே போயின.

★

அன்று அந்தத் திண்ணை விளையாட்டுக் குழுவிலே அச்சுதனேடு கோபு,ராதை இருவரும் இருந்தனர். காகிதப் படகு விளையாட்டில் அவர்களுக்கும் ஆசைதான். ஆனல் படகு செய்யக் காகிதத்திற்கு எங்கே போவது என்கிற பிரச்சினை எழுந்ததும் மற்றவர்களைப் போலவே அவர்களும் ஆசையை அடக்கிக்கொண்டு, அதை மறந்து வேறு காரியங்களிலே மனதைச் செலுத்தினர். ஆனல் அச்சுதன் மனம் அத்தனை சுலபத்திலே அடங்கிவிடுமா? 'சே! கேவலம்; காகிதம் கிடைக்கவில்லை என்பதற்காக ஒரு நல்ல விளையாட்டை இழந்து விடுவதா? அதிலும் இப்படிப்பட்ட ஜோரான மழை இனி எப்பொழுதோ!' என்றெல்லாம் எண்ணினவன், சட்டென்று திண்ணையை விட்டுக் கீழே குதித்ததையோ, உள்ளே சென்றதையோ மற்றவர்கள் கவனிக்கவில்லை. அவர்கள் காகிதப் படகையே மறந்து, வேறு பேச்சிலும் விளையாட்டிலும் மனதைச் செலுத்தியிருந்தனர்.

உள்ளே சென்ற அச்சுதன் வெகு நேரத்திற்குப் பிறகு வெளியே வந்தான். அவன் கையிலே அழகான காகிதப் படகு ஒன்று இருந்தது. அதைக் கண்ட மற்ற சிறுவர்களும், சிறுமிகளும் கூச்சலிட்

டுக்கொண்டு தாவிச் சென்று அச்சுதனைச் சூழ்ந்தனர். மழை ஓய்ந்து சிறு தூறலாக இருந்தது. அச்சுதன் தெருவில் இறங்கினான். தெரு நடுவிலே ஓடிக்கொண்டிருந்த மழைத் தண்ணீரிலே தன் கையில் இருந்த படகை மெல்ல வைத்தான். அது அழகாக மிதந்து நீரோட்டத்தின் வழியே செல்ல ஆரம்பித்தது. பையன்கள் கைகொட்டி ஆர்ப்பரித்தனர்.

"டேடே! படகுக்குள்ளே அது என்னடா அச்சுதா?" என்றான் கோவிந்தன் ஆச்சரியத்துடன். அவன் அப்படிச் சொன்ன பிறகுதான் மற்றவர்கள் அதைக் கவனித்தார்கள். அதனுள் இரு சிறு அட்டைத் துண்டுகள் இருந்தன. இரண்டிலும் பென்சிலால் வரைந்த இரு உருவங்கள் காணப்பெற்றன. வெறும் கிறுக்கல்தான்—! அச்சுதன் வரைந்ததுதான். ஒன்று, சட்டை நிஜாருடன் கூடிய சிறுவனின் உருவம்; மற்றொன்று பாவாடை, ஜாக்கட்டுடன்கூடிய சிறுமியின் உருவம். அதைக் கண்டதும் சட்டென்று கோபுவும் ராதையும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர். அதை அச்சுதன் கவனித்தான். உடனே மற்றவர்களும், "படங்களின் அடியிலே என்ன எழுதியிருக்கிறதென்று பாருங்கள்" என்றான். எல்லோரும் குனிந்து, ஓடிக்கொண்டிருக்கும் படகைப் பார்த்தார்கள். படங்களின் அடியில், 'கோபு—ராதை' என்று எழுதியிருந்தது. அதைப்படித்ததும் எல்லோரும் 'கொல்லெ'ன்று சிரித்தார்கள். சிரித்துக்கொண்டே கோபு, ராதை இருவர் முகங்களையும் பார்த்தனர். அவர்கள் வெட்கத்துடன் தலை கவிழ்ந்தனர். ராதை மட்டும், "வா வா, அப்பாகிட்டேயே சொல்றேன்" என்று அச்சுதனைப் பார்த்துக் கறுவினாள். கோபு அதுகூடச் செய்யவில்லை.

நாலுநாள் முன்பு ஒரு சிறிய சண்டை நிகழ்ந்தபோது, அச்சுதன் அட்டைத் துண்டுகளில் விகாரமான உருவங்களை வரைந்து அதனடியில் கோபு என்றும் ராதை என்றும் எழுதினான். கோபுவிடம் சண்டை; ராதை அவனுக்குப் பரிந்து பேசினாள் என்று அவள்மீது கோபம். அதன் விளைவாக அந்தச் செயல். அந்தப் படங்களை இப்போது காகிதப் படகிலே வைத்துப் பலர் முன்னிலையிலேயே பவனிவிட்டு இப்படித் தங்களை அவன் அவமானப் படுத்துவான் என்று அவர்கள் எதிர்பார்க்கவேயில்லை. அதனால் வருத்தமுற்று, விளையாட்டிலே கலக்காமல் பின்தங்கி நின்றனர்.

மறுபடியும் மழை வலுக்கத் தொடங்கிற்று. தெருப் பக்கம் வந்த பெரியவர்கள் சிறுவர்களை அதட்டினார்கள். கூட்டம் கலைந்தது. அவரவர்கள் வீட்டை நோக்கி அவரவர்கள் சென்றார்கள். "மழை வலுக்கிறது. வாடா கோபு" என்று சொல்லிக் கொண்டே ராதை வீட்டை நோக்கி ஓடினாள். இடையில் அவள் தோழி பத்மா வீடு. அவள், "இங்கே வா ராதை" என்று அழைக்கவே ராதை அங்கே ஓடினாள். அச்சுதன் தன்மேல் தண்ணீரை வாரி இறைத்து விட்டு ஓடிய

கோவிந்தனைத் துரத்திக் கொண்டு ஓடினான். எஞ்சியது கோபு ஒருவன் தான். மழை வலுத்துவிடவே அவனும் வீட்டை நோக்கிக் கிளம்பினான். அந்தக் காகிதப்பட்டை நடுத் தெருவிலே விட்டுச் செல்ல மனமின்றி அதை எடுத்து உள்ளங் கையிலே வைத்துக் கொண்டு ஓடினான். அப்படி ஓடினபோது அதிலிருந்த அட்டைத் துண்டுகள் எங்கோ விழுந்து விட்டன.

முதலியார் வீட்டிலே ஒரே ரகளை. 'மேஜை மேல் வைத்திருந்த சர்டிபிகேட் எங்கே?' என்று இரைச்சல் போட்டார் முதலியார். தமிழ்ச் சங்கத்திலே அவருக்குஅளித்திருந்த சர்டிபிகேட்டில் உள்ள வாசகங்களை நகல் எடுத்து வேறொரு இடத்திற்கு அனுப்புவதற்காக அவர் மேஜை மேல் வைத்திருந்த சர்டிபிகேட்டைக் காணவில்லை. வீட்டிலே எதைக் காண விட்டாலும், எது உடைந்தாலும், எது கிழிந்தாலும் அனைத்திற்கும் கோபுவைத் தான் சுட்டுவது கோமளத்தின் வழக்கம். இப்பொழுதும் அதே ரீதியில், "சற்று முன்பு கோபு இங்கே வந்து மேஜை அருகில் நின்றிருந்தான். எடுத்துப் போயிருப்பான்" என்றாள்.

"சீ, சீ! எதற்கெடுத்தாலும் உனக்குக் கோபுதானா?" என்று சீறி விழுந்தார் முதலியார். அவர் மீண்டும் அந்தச் சர்டிபிகேட்டைத் தேடினார். அது அகப்படவே இல்லை. ஆத்திரத்துடன் ஒன்றுந் தோன்றாமல் வெளிப்புறம் வந்தார். அப்போது மழையிலே நனைந்து வேகமாக ஓடிவந்த கோபு கண் மண் தெரியாமல் வாசல்படியிலே ஏறி அங்கே நின்றிருந்த முதலியார்மீது மோதிக்கொண்டான். அவன் மழையிலே நனைந்த ஆத்திரம், தம் மேலே வேகமாக முட்டிக்கொண்ட ஆத்திரம், இவற்றோடு அவனை நோக்கிய அவர் கண்களில் அவன் கையிலே இருந்த காகிதப் பட்டு தென்பட்டது. அந்தக் காகிதந்தான் அவர் தேடிய சர்டிபிகேட். அவருக்கு எப்படித்தான் இருக்கும்?

'பளார்!' என்று கோபுவின் கன்னத்திலே ஓங்கி அறைந்தார் முதலியார்.

'அம்மா!' என்று வீறிட்டுக் கொண்டு வாசற் படியிலே உட்கார்ந்து விட்டான் கோபு.

'பளார்!...... பளார்!... ...... பளார்!...... பளார்!......'

அவன் முதுகு அறைகளைத் தாளாமல் தத்தளித்தது. கை வலி எடுக்கும் வரையில் அறைந்த முதலியார், பிறகு காகிதப் பட்டைக் கையிலே எடுத்துக் கொண்டு அவனை எட்டி உதைத்து விட்டு வேகமாக உள்ளே போனார். அவர் கொடுத்த உதையிலே அவன் தெருவிலே போய் விழுந்தான். நாலு வீடுகளுக் கப்பாலுள்ள பத்மாவின் வீட்டுத் திண்ணையிலிருந்து கோபு தெருவிலே அலங்கோலமாக விழுந்த காட்சியைக் கண்ணுற்ற ராதை பதறிப் போய், "கோபு! கோபு! ஐயோ கோபு!........." என்று அலறியபடி ஓட்டமாக ஓடி வந்தாள்.

(தொடரும்)

சிறுகதைத் தொடர்ச் சித்திரம்

தாம்பத்தியம்

எழுதியவர் : ‘சித்தார்த்தன்’

இரவின் கருக்கலில், கைப்பிடியில்லாத வெள்ளி அரிவாளைச் சாய்த்து வைத்ததைப்போல, விசும்பில் பிறை நிலா நின்று நிலைத்து ஊர்ந்த நிலையில், சீதன ஒளி மென்சரமாய் இருட் படலத்துள் இறங்கியது.

கட்டிலிலிருந்து புரண்டு படுத்தாள் கனகம். அலையலையாய், அடுக்கடுக்காய் நினைவுகள் நெளிந்தும் சுருண்டும் போட்டியிட்டுப் புரண்டதில் இதயம் வெம்மையேற, கபாலக் குழி கணப்புச் சட்டியாய்த் தகிக்க, நீண்டதொரு பெரு மூச்சை நெட்டுயிர்த்து விட்டாள் அவள்.

நெஞ்ச முகட்டில் துளி தெறிக்கப் பாயும் நினைவு அருவியின் நீர் வெள்ளமெல்லாம் அவளாய் — தவிப் புணர்ச்சியைச் சுண்டிவிடும் இரவின் மோனச் சூழலில் சுழலிட்டெழும் கனவுப் படலமாய்–தெளிவற்ற வகையில் உருப்பெறாது மங்கியழிவதின் சாயல் ரேகையாய்–அனல் சூட்டில் கொப்பளித்துப் பொங்கும் சுடு நீராய்–நினைவுகள் அலைமோதும் நெஞ்சம் கனக்க—நினைவெல்லாம் அவளாய்— அவளே நினைவாய்த் துடித்துப் புரண்டாள் கனகம்.

பிறை நிலா வான முகட்டில் மேலேறிக் கொண்டிருந்தது.

பனி மூட்டத்துள் பாய்ந்து வந்ததைப் போலக் குளிர்ப்புணர்ச்சியைக் கொட்டிக்கொண்டு அறைச் சாளரத்தின் வழியாக இழைந்து வந்து கொண்டிருந்தது தென்றல்.

கனகம்–அவள் கணவன் இருவர் தம் தாம்பத்தியம் புத்துயிர் பெற்றது. புயல் வீசிய அவர்களது நெஞ்சங்களில் அமைதித் தென்றல் இதமாகப் பண்ணிசைக்கத் தொடங்கியது. ஆனால் தென்றலுக்கு முன் வீசிய அந்தப் புயல்......! கதைக்கரு அதுதான்!

உடலைப் போர்த்தியிருந்த போர்வையை வழித்தெறிந்துவிட்டு சாளரத்தின் அருகே வந்து நின்றாள் கனகம்.

வான மங்கையின் கறுத்துப் படர்ந்த கூந்தலிலே ஆயிரமாயிரம் மல்லிகைப் பூக்கள் சரமாக்கி இணைக்கப்படாது சிதறிக்கிடந்த நிலையில், ஒளியை உமிழும் ‘தலைச் சுட்டி’யாய் வான மங்கையின் கூந்தலில் வனப்பைச் சிந்திக்கொண்டிருந்தது முழு நிலா!

கனகத்தின் மார்புக்கூடு உயர்ந்து தாழ்ந்தது; அவள் நீண்ட பெரு மூச்சு விட்டாள்.

விண்ணில்படர்ந்திருந்த விழிப்பார்வையை விலக்கி, தெருப் பக்கம் பார்வையைத் திருப்பினாள் கனகம்.

தெருவோரத்தில் சப்பும் கிளையுமாய் அடர்ந்து பம்மிப் படர்ந்து நேரிலக்காய்த் நிலைத்து வளர்ந்திருந்த மரங்களின் இலைகளினூடே பிறை நிலவின் மங்கிய ஒளி இறங்கி, இருளும் ஒளியும் கலந்த கூட்டுச் சேர்க்கையாய், கருமையில் பதிந்த வெண்மையைத் தெருவெல்லாம் இழைத்துக் கோலமிட்டதைப்போன்று ஊறிய கசிவில் இயற்கை நியதி மூட்டமிட்டிருந்தது.

அறைச் சாளரத்தின் நேரெதிராய் நின்று தன் கிளைகளைப் பரப்பி வளர்ந்து நின்ற மரத்தடியில் இலேசான கருமை தட்டிப் படர்ந்திருந்தது; அந்தக் கருமைப் படர்ச்சியை துணைச் சூழ்நிலையாக்கிக்கொண்டு

சுகப் பறவையின் வெதுவெதுப்பான அரவணைப்பில் புதையுண்டு போய், இன்ப லயிப்பில் நினை விழந்துகிடந்தது ஒரு 'விசித்திர ஜோடி!'

கனகத்தின் பார்வை நிலைத்து நின்றது; நெஞ்சு ஆழத்திலே ஒரு சிறு பொறி தட்டியது. அவள் அவர்களைப் புரிந்துகொண்டாள்.

காலையில், கவளச் சோற்றுக்குக் கையேந்தி நின்ருளே அதே பிச்சைக்காரிதான்— அவளோடு இணைந்து அவள் தரும் மென்சுகத்திலே நெஞ்சம் இறங்கிக் கிடக்கிருனே அவன், அவன் ஆவியில் அரைப் பங்கான குருட்டுப் பிச்சைக்காரன்—அவள் கணவன் தான்!

கனகத்தின் நெஞ்சும் குலுங்கியது. கொதிக்கும் கும்பியைக் குளிர்விக்க அடுத்தவேளை சோற்றுக்கு நிச்சயமில்லாவிட்டாலும், உலகத்துக் கவலைகள் அத்தனையையும் உதறிவிட்டு ஒரு கண நேரமாவது இன்ப மயக்கத்துள் ஆழ்ந்து கிடக்க அந்த நாதியற்ற 'பிச்சைக்காரப் பிணங்'களுக்கும் வழி இருக்கிறது.

கனகத்தின் நினைவு துடித்தது. விரல் பட்டுத் துடிக்கும் வீணைத் தந்திகளாய் கனகத்தின் நரம்புகள் தெறித்துத் துடித்தன. இரத்த நாளங்களில் கணப்பேறிய குருதிப் பெருக்கின் வேகப் பாய்ச்சல்—கனகத்தின் இதயம் ஓலமிட்டது, பேரிரைச்சலோடு.

அவள் கட்டிலில் கிடந்து விம்மினுள்!

*
* *

துன்பச் சகதியில் புதைந்துவிட்ட மனத்துள் பழமை நினைவுகள் சில வண்டுகளாய் ரீங்காரமிட்டன!

......இளமையின் சுண்டிழுப்பில், எழில் மெருகிட தகத்தகாயமாய்ப் பொன்னொளி வீசிக்கொண்டிருந்த மென்னுடலில் அழுத்தமாகப் பதிந்துவிட்ட காயாம் பூவின் நிறச் சிதறல், தேய்ந்து உயிரோட்டம் மங்கி, ஒடுங்கி, இழைந்து மறைந்துவரும் உடற் கூட்டிற்குச் சேர்க்கும் பயங்கரத்திற்கு......பயங்கரத்தைப் பல மடங்காக்கி நெஞ்சை இறுக்கிப் பிழியும் அமைதிச் சூழலில்......வாழ்வின் ஆசையெல்லாம் உதறிவிட்டு அனல் மூட்டத்திற்கு வேகும் துண்டமாய்த் தன்னை அர்ப்பணிக்க, சாவுப் படுக்கையில் சாய்ந்துவிட்ட தன் அக்காவின் அவல நிலையைக் கண்டு விழி வட்டத்தைக் கண்ணீர்க் குளமாக்கிக்கொண்டு நின்றுகொண்டிருந்தாள் கனகம்.

"கனகம்!"

"அக்கா...!"

நெருங்கிப் போனுள் கனகம். பிரேதக் களை மின்னும் பானுவின் முகத்தைத் தன் பூங்கரங்களில் ஏந்தியவாறு ஆதுரத்தோடு அவளைப் பார்த்தாள் கனகம். விழிக்கோடியில் சரம் கோர்த்த கண்ணீர்த் துளிகள் பானுவின் நெற்றிப் பொட்டில் தெறித்து விழுந்தன.

பானு – கனகம்...!

இரண்டும் ஒரே செடியில் பூத்த இரு மலர்கள். இதழ் விரித்து மலர்ந்து மகரந்தத்தின் சுக ஜீவியத்தைத் தாங்குவதற்குள், நிற மிழந்து சாம்பி ஒரு மலர் கருகிக் கொண்டிருந்த நேரத்தில் — இளமைப் பனி மூட்டத்தின் செழுமையில் குளித்து மூழ்கி, வசந்தத் தென்றலின் அரவணைப்பில் ஆடி அசைந்துகொண்டு இருந்தது, அதனுடன் மொட்டாகி வெடித்த மலர்.

"கனகம்!"

"அக்கா...!"

கனகத்தின் மென் கரங்களைத் தன் சூம்பிப் போன கரங்களால் தூக்கித் தன் மார்புக் கூட்டோடு இறுக அணைத்துக்கொண்டாள் பானு.

விழிக்கடையில் தேங்கிய கண்ணீர்த் துளிகளைத் தன் சேலைத் தலைப்பால் துடைத்துவிட்டு நிமிர்ந்தாள் கனகம்.

"என் அழுகிருய், கனகம்...?"

"..............."

"நீ சொல்ல மாட்டாய்—எப்படித்தான் உன்னுல் சொல்ல முடியும்? நான் இனிப் பிழைக்கமாட்டேன்

4

என்ற உண்மை உனக்கும் தெரிந்துவிட்டது!''

"அக்கா!''—கனகம் அலறியேவிட்டாள்.

"என் துடித்துப் போகிருய் கனகம்? சாவு வருகிறதே என்பதற்காக நான் சஞ்சலப் படவில்லை. ஆனல்......மரணத்தின் மடியில், சாவின் விளிம்பில் சாய்ந்து கொண்டிருக்கும் என் நெஞ்சில் இறுதியாக ஒரே ஒரு ஆசை. அதை நீதான் நிறைவேற்றி வைக்க வேண்டும்...''—பானுவின் குரல் தழதழத்தது.

"அக்கா, நீ இறக்க மாட்டாய்; இறக்கவும் கூடாது...''— காய்ந்து உலர்ந்துபோன பானுவின் அதரங்களிலே இளநகையொன்று பொங்கிக் குமிழிட்டு மறைந்தது. கனகத்தைத் தன்மார்போடு இழுத்து அணைத்துக் கொண்டாள் பானு.

"சாகாவரம் தரும் அமுத சஞ்சீவி எதாவதுவைத்திருக்கிருயா, கனகம்? மரணப் பறவை தன் அகலச் சிறகால் என்னைப் போர்த்திக் கொள்ளும் முன்பு என் அந்திய ஆசையை நிறைவேற்றுவாயா, கனகம்? வேதனைத் தீயில் வெந்திருகும் உன் அத்தானை மகிழ்விக்கும் குளிர் ஓடையாக நீ மாறுவாயா, கனகம்? என் இதயத்து ஆசையை நிறைவேற்றி வைப்பாயா? உன் அத்தானை—என் கணவரை மணந்து கொள்வாயா...நீ...?''

பயங்கரமானதொரு இருமல் பானுவின் உடலைக் குலுக்கி எடுத்தது. அரை நிமிடப் போராட்டம்; பின் அமைதி...மயானத்தின் மௌனம்...

பானுவின் விழிகள் இறுக மூடிக் கொண்டன.

***

நினைவுகளோடு நினைவாய், நினைவலைகளோடு அலையாய், சிந்தனைலயிப்பில், உயிர்ப் பிண்டமாய் உருவான உயிரணுக்களின் சேர்க்கையிலிருந்து ஓரணுவாய்ப் பிரிந்து கழன்று விதி முறையின் நியதியிலிருந்து தடம் புரண்ட அவள் நினைவின் விகசிப்பில் அமுழ்ந்திக் கொண்டிருந்தாள்!

நினைவலைகள் பயங்கரமாகக் கொந்தளித்துக் குமுறி நெஞ்சக் கரையை இடித்தன.

...பருவத்தின் மென்கதவைத் திறந்துகொண்டு, சுகத் தேனை மாந்திப் பறக்கப் பூஞ்சிட்டாய்-வாழ்வுச் சோலைக்குள் இதயத்தில் மலர்ந்த எண்ணற்ற கனவுகளுடன் இளமை நிர்மாணித்துத் தந்த சுக நினைவு வேகத்துடன், கிட்டிப் படரும் கங்குலைப் பிளக்கும் வெள்ளிக் கீற்ருய், இன்பத் தீக்கோடாய் படர்ந்தோடும் நினைவுகளுடன்தான் தாம்பத்திய வாழ்வுக்குள் நெஞ்சூன்றி நிலைக்கப் பார்த்தாள் கனகம்.

குளிர்ப்புணர்ச்சியைத் தூவும் பனித்துளியின் உயிரூட்டத்தில் முகையவிழ்க்கத் துடிக்கும் மலராக, இன்பத் தேன் முகத்தோடு சுக மகரந்தத்தின் உயிர்ச்சேர்க்கையில், எழில் சேர்த்துக் கொழிக்க, இன்பக் கதிர் அவிழ்க்கும் விழிப்புத் துடிப்போடு தாம்பத்திய வாழ்வின் பற்றுக்கோட்டில் கிடந்து புரள, துடித்து நின்ருள் கனகம். அவள் தமக்கைக்கு இன்பத்தை அள்ளிச் சொரிந்த 'அமுதசுரபி' அவள் கையிலேதான் இப்பொழுது கிடந்து தவழ்ந்தது. அதை எடுத்தாளும் உரிமையும் கனகத்திற்கு இருந்தது!

ஆனல்...?

ஒட்டும் இரண்டு உள்ளத்தின் தட்டில்...அவள் நெஞ்சைக் குளிர்வித்து, அவள் இதயத்தில் இன்பத் தேனைக் கசியவிடும் பொறுப்புச் சுமையேற்றிருந்த அவன்—அவள் கணவன், அவளுக்குப் புரியாத புதிராக இருந்தான். உலகத்து அறிவுக் கருவூலங்களையெல்லாம் தன் பேனு முனையில் தேக்கிடும் அவன்தான் அவளைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டானு? அல்லது அவளைப் புரிந்துகொள்ளும் திராணியைக் கனகத்தின் பிஞ்சு நெஞ்சம்தான் இழந்துவிட்டிருந்ததா?......

அவளுக்குப் புரியவில்லை; புரிந்து கொள்ள முடியவில்லை!

அறைச் சாளரத்தை ஒட்டி இழுத்துப் போட்டிருந்த சாய்வு நாற்காலியில் உடலைக் கிடத்திக்கொண்டு, உலக நினைவுகள் ஒட்டியும், ஒட்டாத நிலையில், நினைப்புக்களை வலம் வரவிட்டு, தென்றலின் இதமான சுக மயக்கத்தில் ரசனை கண்டுகொண்டிருந்த தன் கணவனை, இதபத்துள் இன்ப நினைவுகள் கும்மாளியிட நெருங்கிப் போனாள் கனகம்.

பொன்னிற உடலை அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்த கரு நிற ஜாக்கெட்டில் கை சதைபுள் புதைந்து விடுவதைப்போல கருநிறத்தோடு ஒட்டிய தங்கப் பட்டயம் போன்ற சரிகைக் கரை; தழையத் தழைய உடலோடு இழைந்து கொண்டிருந்த சேலையில் விழிகளை வெட்டியிழுக்கும் புள்ளிக்கோலம்.

கனகத்தின் அலங்காரத்திலே அன்று தனிக் கவர்ச்சி மிதந்தது.

கவர்ச்சி— உள்ளத்தைக் கிள்ளி உயிரில் இன்பத்தைத் தூவும் மன மோகனக் கவர்ச்சிகரம்!

நெஞ்ச முகட்டில் தேய்ந்தூறும் உணர்வுப் பெருக்கோடு அவனை— அவள் கணவனை நெருங்கிக் கொண்டிருந்தாள் அவள்.

"அத்தான்!"

அவன் திரும்பினான். கருமையில் பதித்த செம்பவளமாக அடர்ந்து படர்ந்திருந்த அவள் கூந்தலில் செடியோடு ஒட்டிப் பிறந்த இலைகளின் துணையோடு தன் செவ்வதரங்களை விரித்துச் சிரித்துக்கொண்டிருந்த ரோஜா மலர் விழிப் பார்வையில் பட்டுத் தெறித்தது.

"கனகம், உனக்கேது இந்த மலர்...?"—குரலில் வெறுப்பின் ஆழம் தெரிந்தது.

"தோட்டத்துக் கொல்லையில் வளர்ந்திருந்த செடியிலிருந்துதான் இதைக் கொய்தேன், அத்தான். அது அக்கா வளர்த்த செடியாமே? வேலைக்காரிதான் சொன்னாள்."

முயற்சிக்குத் தூண்டுகோல் ஆசை; இன்பத்துக்கு ஆதாரம் திருப்தி; அமைந்த மனத்துக்கு வேகமில்லை; சலித்த மனத்துக்கு இன்பமில்லை.

—தி. ஜ. ர.

கனகத்தின் குரலில் வலுவில்லை.

"இதோபார், கனகம்—தன் செவ்வதரங்களை விரித்து வேசிச் சிரிப்புச் சிரிக்கும் இந்த ரோஜாவை நான் விரும்புவதேயில்லை. பானுவை இந்த ரோஜா மலரைச் சூட்டிக் கொள்ள நான் என்றுமே அனுமதித்ததில்லை. உன் கூந்தலில் அது இடம்பெறுவதையும் நான் விரும்ப மாட்டேன்..."

"அத்தான்!"

"இந்த ரோஜாவோடு வளர்ந்து நிற்கும் செவ்வரளியைப் பார் கனகம். அழகும் மணமும் கொழிக்கும் ரோஜாவைப்போல மனிதக் கரங்களின் திருகலிலே தன் உயிரைச் சாய்த்துக்கொள்வதில்லை செவ்வரளி. ரோஜாவிற்குத்தான் அந்த வேதனையும், உயிர் வாதனையும்! காரணம் என்ன தெரியுமா, கனகம்?..."

"அத்தான்...!"

"செவ்வரளியைவிட ரோஜாவிற்கு மேனிப் பளபளப்பும், சுகந்த மணமும் அதிகம்—அதனால்தான்! மனித மனத்தைக் கவர்ந்திழுக்கும் கள்ளச் சிந்தை ரோஜாவிற்கு இருக்கிறது. அதனால்தான் அதை நான் விரும்புவதில்லை. இதெல்லாம் உனக்குப் புரியாது, கனகம்—உனக்குப் புரியாது...!"

"அத்தான்!"

எழிலையும் அழகையும் சிந்தும் ரோஜாவைப் போலத்தான் உணர்வைக் கட்டியிழுக்கும் சாந்தக் கவர்ச்சி கனகத்திடம் இருந்தது. ரோஜாவை வெறுத்தொதுக்கும் அவன், அவளையும்...?

கனகத்திற்குப் புரியத்தான் இல்லை! கனகத்தின் அலைப்புண்டிருந்த மனத்தில் மற்றுமொரு நினைவுக் கதிர் சுடர் விட்டது.

கரங்களை மேஜையின் விளிம்பில் ஊன்றியவாறு சிந்தனை லயிப்பில் மூழ்கிக் கிடந்த அவனை, இதயத்தை நெருக்கும் ஆர்வத்துள்ளவில் நெருங்கிப் போனாள் கனகம்.

அவன் விழிப் பார்வை மேஜை மீது படர்ந்து கிடந்தது. விழிப் பார்வையை மேஜைமீது மேய விட்டாள் கனகம். அங்கு...?

மென் இதயத்தில் அச்சச் சரங்களை ஏற்றும் அருவருப்புச் சின்னமாய், தன்னைப் போர்த்தியிருந்த தசைத் திரளையெல்லாம் மூடிக்கிடந்த மண்ணின் பசி உணர்வுக்குத் தின்னக் கொடுத்து விட்டு, பயங்கரத்தைத் தெறிக்க விட்டுக்கொண்டிருந்த மனித கபாலம் ஒன்று அவளைப் பார்த்துக் கொண்டிருந்தது.

"அத்தான்!" – இதயத்தைக் குத்திப் பாயும் அச்ச வேகத்தில் கனகம் அலறியே விட்டாள்.

சுய நினைவு ஒட்டிக்கொள்ள அவன் திரும்பினான்.

"என் கனகம், பேனு பிடிப்பவன் மயானத்தில் மண்டை ஓடு பொறுக்கும் மந்திரவாதியாக மாறிவிட்டானே என்ற திகைப்பா உனக்கு?"— அவன் அமைதியாய் சாவதானமாகத்தான் பேசினான்.

"இதைப் பார் கனகம், வாழ்வுக் கப்பலை நாகரிகக் கடலில் நிறுத்தி நங்கூரம் பாய்ச்சி இருக்கும் இந்த மனித சமுதாயத்தைக் கண்டு இந்தக் கபாலம் கேலிச் சிரிப்பை இழை இழையாய் ஓட விடுவதைப் பார், கனகம்...!"

தன்னழகு விழிகளை அகல விரித்து வைத்துக்கொண்டு அவனைப் பார்த்துக்கொண்டிருந்தாள் கனகம்.

"ஆர்தர் கீத் என்ற விஞ்ஞானி சொல்கிறான்: வருங்கால மனித சந்ததிக்குத் தலையில் அணுவளவு கூடக்கூந்தல் முளைத்துப் படராதாம்; ஆமாம், கனகம் பெண்களுக்குக் கூடத்தான். அந்தப் பயங்கர நிலையைப் படம் பிடித்துக் காட்டுவதைப் போல, தலைப்புறத்தில் கூந்தல் தொடர்பற்றுக்கிடக்கும் இந்தக் கபாலத்தைப் பார், கனகம்!"

கனகம் பேசவில்லை. பேச முடியவில்லை அவளால். இதழ்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு நெஞ்சில் படரும் நினைவுகளை வெளிக்கொணர முடியாது அவள் துடித்த நிலை...

"இதெல்லாம் உனக்குப் புரியாது கனகம்—உனக்குப் புரியாது தான்!"

கனகத்திற்குப் புரியத்தான் இல்லை! கனகத்தின் இதயத்தினது அடித்தளத்தைப் பிடித்தசைத்த—பெண்மையை எற்றி மிதித்துவிட்ட இறுதியாக கடந்த அந்தச் சம்பவம்...

இரவு. நெஞ்சில் கிறக்கத்தை வார்க்கும் முழு நிலா விண் முகட்டில் மேலேறிக் கொண்டிருந்தது.

அரைக் கண் மூடிய நிலையில், கட்டிலில் நெளிந்து கொடுக்கும் தன் கணவனின் கரத்தைத் தன் பூங்கரத்தால் தொட்டுத் தூக்கினுள் கனகம். 'தாய்மை'யின் பொலிவு தங்கத்தின் பொன்னொளியை அவள் உடலில் வார்த்துவிட்டிருந்தது. அவன் 'வித்தை'த் தாங்கும் பெருமிதத்தைச் சொல்லிலே வடித்தெடுத்து அவனுக்கு இதய நிறைவை வழங்கத் துடிக்கும் உணர்வு அவளுள் குதுகுதுப்பைப் பரப்பிக்கொண்டிருந்தது!

"அத்தான்!"

"என் கனகம்?"—விழிகளைப் பிரித்துப் பார்க்காது உணர்வற்ற குரலில் அவன் கேட்டான்.

அவன் காதோடு தன் குமிழ் வாயை இணைத்து அவள் சொல்ல நினைத்த—சொல்ல வந்த 'ரகசியத்தை' எப்படியோ சொல்லி முடித்துவிட்டாள். அப்பப்பா! அவன் முகத்தில் சுழியிட்டோடிய நெளிவு வளைவுகள்—அத்தனைக்கும் மேலாக அவனின் நெஞ்சக் கண்டத்திலிருந்து வெடித்துச் சிதறிய சொற்கள்...

"வாழத்தெரியாது வாழ்ந்துவிட்டுச் சாகும் இந்த மனிதக் கூட்டத்திற்கு மத்தியில் புதியதொரு ஜீவனைப் பெற்றுக் கிடத்துவதும் பாபம் தான், கனகம்"

துடிக்கும் மார்பைத் தன் பிஞ்சுக் கரங்களால் சேர்த்து இறுக்கிக் கொண்டாள் கனகம். கருப்பையின் அடித்தளத்திலிருந்து "அம்மா!" என்று உயிர்மொட்டுக் குரல் கொடுப்பதைப்போன்ற உயிர் வலிப்பு—கருப்பிண்டம் தன் சின்னஞ்சிறு கால்களால் மணி வயிற்றின் வெளி



உலகம் மாறிக்கொண்டிருக்கிறது; ஆனால், மற்ற எல்லாவற்றையும் விட வேகமாக மாற வேண்டிய மனிதனது உள்ளமோ எப்படியோ மாறாமல் ஒரே நிலையில் நிற்கிறது. துன்பம் நேரும் வரையில் அது போதுமான வேகத்தோடு சமாளித்துக் கொள்வதில்லை.

—நேரு.

முகட்டை எற்றுவதைப்போன்ற உயிர் வேதனை.

"இதெல்லாம் உனக்குப் புரியாது கனகம்—உனக்குப் புரியாது!" அவள் கணவனின் குரல்.

வேல்பட்ட வேங்கையாகச் சீறினாள் கனகம். "பாச பந்த உணர்வற்ற—இரக்கமற்ற—இதயமில்லாத உங்களை மணந்துகொண்டதைவிட மயானத்துப் பேயொன்றை மணந்து கொண்டிருக்கலாம் நான். என் அக்காவின் வாழ்வில் இப்படித்தான் துன்பத்தைத் தூவி, அணுவணுவாக அவள் வாழ்வைச் சிதைத்து மரணக் குழியில் அவளை உருட்டித் தள்ளி விட்டீர்கள்—என் உடலில் ஆவியின் அணுப் பாகமாவது இழையோடும் வரை உங்கள் முகத்தில் நான் விழிக்கப் போவதில்லை, இனி...!"

பாச பந்தங்களை உதறிவிட்டு, விரக்தி படிந்த நெஞ்சோடு பிறந்த வீட்டைத்தைத் தேடி அன்றிரவே புறப்பட்டு விட்டாள் கனகம்.

* * *

நினைவலைகளின் எற்றத் தாழ்வில் உருண்டு புரண்டு கொண்டிருந்த கனகம், உடலுக்கு இதமாகத் தலையணையைத் தூக்கிச் சாய்த்து நிமிர்ந்து படுத்தாள். விழி வட்டத்திலிருந்து வடிந்த கண்ணீர் அவள் மார்புச் சேலையை ஈரமாக்கி விட்டிருந்தது. கொடுக்சரிவாளின் வீச்சுப் பட்டதைப்போல நெஞ்சில் இரத்தம் கசிய விடும் நினைவுகளை உதறி விட, பார்வையைக் கட்டிலின் எதிர்ப்புறம் திருப்பினாள் கனகம்.

அங்கு, ஒழுங்காய், அழகழகாய் இழைத்து உருவாக்கி இருந்த கண்ணாடிச் சட்டத்துள்ளிருந்து கொண்டு அசையாது அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள் பானு.

கருணையைச் சிந்தும் கருநீல விழிகள். மென்மை படர்ந்த அவளின் அதரங்களில், அவள் செத்தும் சாகாத இளநகையொன்று அலையலையாய்க் கோடிட்டு மிதந்து கொண்டிருந்தது.

"அக்கா-அக்கா!"—கனகத்தின் இதயம் அலறித் துடித்தது.

உடலை, உள்ளத்தைக் கனமாக்கிச் சாய்த்த நினைவின் தனித்த கிறுகிறுப்பில்......உயிரணுக்களின் மொத்தச் சேர்க்கையாகச் சங்கமித்த 'அவளிட'மிருந்து 'அவளே' பிரிந்து ஓடுவதைப் போன்ற மயக்கச் சுழற்சி!

"கனகம்—கனகம்!"

"........."

கனகத்தை யாரோ பெயரிட்டு அழைத்தார்கள். சதுரங்கமாடிய நினைவுகளைச் சரிப்படுத்த முடியாத நிலையில், அந்தக் குரலைப் புரிந்து கொள்ளும் சக்தியற்று சவமாய்க் கிடந்தாள் கனகம்.

"கனகம்—கனகம்!"

".........."

மீண்டும் அதே குரல்.

"உன்னை—உன் அக்காவை உன்னால் புரிந்துகொள்ள முடியவில்லையா, கனகம்?"

"அக்கா!"

"அழாதே கனகம்...உன் விழிகளிலிருந்து கசியும் கண்ணீர் உன் இதயத்தின் கனத்தைக் குறைக்கலாம். ஆனால் உன் இழந்த வாழ்வை மீட்டுத் தருமா அது...?"—பானு சொல்லி முடிக்கு முன்பு இடைமறித்தாள் கனகம்.

"இழந்த வாழ்வா? நான் எப்பொழுது அக்கா வாழ்ந்தேன்? நான் வாழவுமில்லை—வாழ்வை இழக்கவும் இல்லை. என்று 'அவரோடு' என்னை இணைத்துக் கொண்டேனோ அன்றே

என் வாழ்வு பட்டுப்போய் விட்டது..."—கனகத்தின் குரலில் ஏக்கம் சுருதி கூட்டியது.

கலகலவெனச் சிரித்தாள் பானு.

"கனகம், பைத்தியக்காரப் பெண்ணே. நீ வாழவேயில்லையா? அவருடன் இணைந்து வாழாமல் தான் நீ உன் வயிற்றில் குலவிளக்கின் பொறிச் சுடரை ஏற்றி வைத்துக் கொண்டாயா?"

கனகம் சிலையாய்ச் சமைந்து கிடந்தாள்......

"தாம்பத்திய வாழ்க்கை வெறும் உடற்சேர்க்கையில் மூகிழ்க்கும் நரம்புப் பிணிப்பல்ல, கனகம்..."

"அக்கா!"

"தாம்பத்தியத்தை நீ புரிந்து கொள்ளவில்லை, கனகம்—புரிந்து கொள்ளவும் முயலவில்லை நீ. செம்மணலில் ஊறிக் கசிந்த மழைத்துளி அதன் சேர்க்கையில் செந்நிறமேறி விடுகிறதே அதைப்போல, கணவனின் நினைவுகளோடு உணர்வுகளோடு ஒன்றிக் கலக்கும்போது தான்...கலந்தால்தான் 'தாம்பத்திய'த்தின் முழுச் சுவையையும் ஒரு பெண் அறிய முடியும். விழியற்றவன் வெண்ணிலவைக் காணத் துடிப்பதைப்போலத்தான் 'தாம்பத்திய' வாழ்வின் சுகத்தைப் பருகத் துடித்தாய் நீ. இதோ மூடியிருந்த உன் விழிகளை அகலத் திறந்துவிட்டேன்...இனியாவது அதன் சுடரொளியை ரசித்து மகிழேன், கனகம்!"

கட்டிலிலிருந்து துடித்தெழுந்தாள் கனகம். உடலில் ஊறிக் கசிந்த வியர்வை வெள்ளம், உடலை ஒடையில் அமுக்கி நனைத்தெடுத்ததைப் போல ஈரமாக்கிவிட்டிருந்தது.

கனகத்தின் இதயம் குலுங்கியது!

எல்லாம் மன மயக்கம்—நினைவுகள் கற்பித்து நிறுத்திய எண்ண நிழலாட்டம்!

* * *

அறைச் சுவரின் பக்கம் பார்வையைத் திருப்பினாள். நெஞ்சை

நான் பிறரைப் பற்றிப் பேசுவதென்றால், அவர்களின் நல்ல குணங்களை எடுத்துரைப்பேனேயன்றி, குறைகளை ஒருபோதும் கூறுவதில்லை.

—பிராங்க்லின்.

யள்ளும் அதே சிரிப்போடு கண்ணாடிச் சட்டத்திற்குள்ளிருந்து கொண்டு கனிவோடு கனகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள் பானு.

தன் பூங்கரங்களை உயர்த்தி, பானுவுக்கு அஞ்சலி செய்துவிட்டு, கட்டிலின் எதிர்ப்புறம் கிடந்த மேஜையை நோக்கி ஓடினாள் கனகம்.

மறுகணம்...

கனகத்தின் பிஞ்சுக் கரத்தில் வேக வேகமாகச் சுழன்ற பேனா, முத்து முத்தான எழுத்துக்களில் அவளின் இதய ஒலியை விரிந்து கிடந்த வெள்ளைத்தாளில் எதிரொலிக்க விட்டு, தன் வேகச்சுழலை நிறுத்தியது. பேனா தீட்டி முடித்த அந்தக் கடிதம்...!

" ஆவித் துணைவரே,

நடந்ததையெல்லாம் கனவாக மதித்து மறந்துவிட்டு என்னை மன்னித்துவிடுங்கள். நாளைப் புறப்பட்டு வருகிறேன்—உலகத்துச் சிறுமைகளுக்குச் சலனமடையும் பழைய கனகமாகவல்ல—உங்கள் நினைவுகளோடு ஒட்டிப் பழகத் தெரிந்துகொண்ட புதிய கனகமாக!

தங்கள்,

கனகம்."

நீண்டதொரு பெருமூச்சை நெட்டுயிர்த்துவிட்டாள் கனகம். புயல் வீசிய நெஞ்சில் அமைதித் தென்றல் இதமாகப் பண்ணிசைக்கத் தொடங்கியது! ★

இலக்கிய விமரிசனம்.

எச். ஜி. வெல்ஸ்

கா. அப்பாத்துரை

4

"காலப்பொறி"

இல் பொருள்களைக் கற்பனை செய்வதிலும் இயற்கையைத் திரித்துக் கற்பனை செய்வதிலும் தமிழில் கம்பரும் இத்தாலிய மொழியில் தாந்தேயும் ஆங்கிலத்தில் மில்ட்டனும் வல்லவர்கள். வெல்ஸ் கவிஞரல்லவாயினும் இக்கலையில் அவர்களை வென்றுவிட்டார் ஆனல் அவர் வெற்றி கலைவெற்றி மட்டுமன்று. கலையோடு கலந்த அறிவு வெற்றி எனெனில் அவர் இத்துறையில் தற்கால அறிவு நூல் முடிவுகளைப் பயன் படுத்திக் கொண்டார். நிலத்திலிருந்து எழுந்து பறவை வான் முகிலை அளாவுவது போல, அவர் கற்பனை அறிவு நூலாராய்ச்சி முடிவுகளை நிலமாகக் கொண்டு, அதனின்று எழுந்து வெறுங் கற்பனைப் புலவர்கள் கனவு காணுத உயரத்திலும் அகல நிகளத்திலும் மிதந்து அலையாடுகின்றது.

தற்கால அறிவு நூல் இயற்கையின் இட எல்லையைத்தான் வென்றுள்ளது. காலத்தை இன்னும் வெல்லவில்லை. வெல்வின் முதற் புனைகதையாகிய 'காலப்பொறி'யில் ஒரு அறிவுநூலறிஞன் காலத்தை வெல்லும் பொறியைக் கண்டு பிடிக்கிறான். வான ஊர்தியிலேறி நாம் நம் தமிழ் நாட்டிலிருந்து சீனுவுக்குப் பறந்து செல்வது போல, அந்தக் காலப் பொறியிலேறி நாம் நம் இருபதாம் நூற்றூண்டிலிருந்து புறப்பட்டுப் பின்னேக்கி இரண்டாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட சங்க காலத்துக்கோ அல்லது முன்னேக்கி இருபத்தெட்டாம் நூற்றூண் க்கோ செல்லலாம். முன்னேக்கி இருபத்தெட்டாம் நூற்றூண்டு செல்வதாக வெல்ஸ் கற்பனை செய்கிறார் இங்கே என்ன காண்கிறான் அறிவுநூலான்?

வருங்கால உலகம்

வெல்வின் கற்பனையுடன் அவர் அறிவியல்—சமூக—வரலாற்று அறிவாராய்ச்சி கலக்கிறது. பதினூரும் நூற்றூண்டின் எளிய வாழ்விலிருந்து இருபதாம் நூற்றூண்டின் பலதிறச் சிக்கல் வாய்ந்த வாழ்வுக்கு முன்னேறிய நாம், இருபத்தெட்டாம் நூறரூண்டு இதனினும் சிக்கல் வாய்ந்ததாக இருக்கும் என்றுதான் பொதுவாகக் கருதுவோம். வெல்ஸ் கூறுகிறார், நாம் மீண்டும் பதினூரும் நூற்றூண்டின் எளிய வாழ்வுக்குச் செல்லுவோம் என்று. இயற்கையை நாம் பேரளவில் வென்று விடுவதால், மீண்டும் இயற்கை வாழ்வு வாழத் தொடங்கி விடுவோம்.

"முழுதும் அமைதி நிலவுகிறது. முழுநிறை வாழ்க்கை வசதி ஏற்பட்டு விட்டது. இருபதாம் நூற்றூண்டில் இருந்த வாழ்க்கைப் பரபரப்பு, போட்டி இங்கே இல்லை. போட்டி காரணமாக முன்பு ஆதிக்கவாதிகள் அறிவு மேம்பட்டவர்கள், சூழ்ச்சியில் வல்லவர்கள், பலமுள்ளவர்கள் ஆண்டார்கள். இப்போது எவரும் ஆளவில்லை. ஆனல் நல்லவர் வாழ்கிறார்கள். உடல் வீரமும், போரார்வமும் முன் நாகரிகத்துக்கு முட்டுக்கட்டையாயிருந்தது. இப்போது சமத்துவம் நிலவுகிறது. போர் எழக்காரணமும் தூண்டுதலும் இல்லை. அதற்குத் தேவையும் கிடையாது. போர் இல்லாததால் உடல் வலுத் தேவைப்படவில்லை. வீரம் தேவைப் படவில்லை. போட்டி இல்லாததால் சூழ்ச்சியும் மூளைத்திறமும் தேவையில்லை. நோய் நீக்கும் முறைகள் நோயை அழித்து விட்டன. மருத்துவரும் தேவையில்லை. காற்று, நீர் போல உணவு எளிதாய்

விட்டது. தொழிலாளியும் இல்லை. முதலாளியும் இல்லை. உடல் நலமும் உளநலமும் அமைதியும் மனித வாழ்வில் நிலவுகின்றன.''

தலையால் நடக்கிறார்கள்; காலால் சிந்திக்கிறார்கள்

இங்கே கற்பனை அறிவின் கற்பனை. ஆனால் அது அறிவையும் தூண்டுகிறது. நம்மைச் சிந்திக்க வைக்கிறது. அச்சிந்தனை வெல்லை ஒரு அறிவுரையாளராக மட்டும் ஆக்கவில்லை. அவர் கோட்பாட்டை நாம் ஏற்கலாம், எதிர்க்கலாம். போர் மனித நாகரிக வளர்ச்சிக்குத் தேவையற்றது, தீங்கானது என்கிறார் அவர். அதே சமயம் வீரம், உடல் வலு, மூளைத்திறம் ஆகியவை அதன் விளைவுகள் மட்டுமே என்கிறார். மனித நாகரிகத்திற்கு இவை வேண்டாம். இவை இல்லாமல் இன்பம் மிகுதியாகும் என்று சிந்திக்கிறார் அவர்.

''மக்கள் இன்று காலால் நடக்கிறார்கள்; தலையால் சிந்திக்கிறார்கள். இருபத்தெட்டாம் நூற்றாண்டில் அவர்கள் தலையால் நடப்பார்கள். காலால் சிந்திப்பார்கள்'' என்கிறார் வெல்ஸ். இது அவர் நகைச்சுவை வாய்ந்த கற்பனை. இன்று மனிதனுக்குக் கைகால் உழைப்பு உதவுகிறது; மூளை உதவவில்லை. நிறை நாகரிகத்தில் மனிதன் மூளையே வாழ்க்கை வாய்ப்புக்களை உண்டு பண்ணிவிடும். இதனைத் தலையால் நடப்பது என்று அவர் கூறுகிறார். வாழ்க்கையில் கடும் பிரச்சினைகள் இன்று இருக்கிறது. ஆட்சிக்கு, முதலாளித்துவத்துக்கு இப்பிரச்சினைகளைத் தீர்க்க மூளை தேவைப்படுகிறது. நிறை நாகரிகத்தில் இப்பிரச்சினைகள் இராது. ஆட்சி மிக எளிதாகிவிடும். இதைத்தான் வெல்ஸ் காலால் சிந்திப்பது என்கிறார்.

'ஆளாத ஆட்சி உண்டானால், அதுவே மிகச் சிறந்த ஆட்சி' (*That Government is best that governs the least*) என்று 'இந்திய சுயராஜ்ய'த்தில் காந்தியடிகள் கூறிய ஆட்சி இலக்கணம் இங்கே ஒப்பிட்டு நோக்கத் தக்கது.

''குருடர் நாடு''

'குருடர் நாடு' கண்ணும், கண்பார்வையும் கற்பனைக் கதையாய் விட்ட, அல்லது மறக்கப்பட்டுவிட்ட ஒரு சிறிய உலகத்தைக் கற்பனை செய்கிறது. கண்ணுடைய உலகினின்று ஒருவன் தற்செயலாய் இச்சிறு உலகில் சென்றுவிடுகிறான். 'கண்ணில்லா உலகில் கண்ணுடையவன் மன்னன்' என்ற பழமொழி கதைத் தலைவன் அனுபவத்தால் பொய்யாகிவிடுகிறது. 'கண்ணில்லாதார் நாட்டில் கண்ணுடையவன்தான் குருடன்' என்ற விசித்திர உண்மை புலனாகிறது. அந்த உலக மக்களுக்கு இருக்கும் மெய், வாய், மூக்கு, செவி என்ற நான்கு புலன்களோடு ஐந்தாவது புதுப்புலனாகக் கண் என்ற ஒன்று இருப்பது சிறப்பு என்றுகூட அந்த உலகின் மக்கள் கருதவில்லை. அது கதிரவனொளியை, மலர்களின் நிறத்தை, வானின் செந்நிறத்தைக் காண உதவும் என்றுகூட அவர்கள் கருதவில்லை. அவற்றின் அழகைக் காணக் கண் ஒரு தடை என்று மட்டும்தான் அவர்கள் கருதினார்கள்! கண் இருக்கும் அவனை எண்ணிக் கண்ணற்ற அந்தக் குருடர்கள் இரக்கப்பட்டார்கள்!

கண்ணுடைய நம் உலகக் 'குருடன்' ஓர் அரைப்பார்வைக் கிறுக்கியைக் காதலிக்கிறான். அந்த உலகத் தாய் தந்தையர், உறவினர், அவன் பொல்லாத கண்களைக் குத்தி அறுவை செய்தபின்தான் திருமணம் செய்யமுடியும் என்கின்றனர். நோயாகிய கண்ணை அறுவை செய்யாமல் வைத்துக்கொண்டு எப்படிக் கண்ணனை பெண்ணை அவனுக்குக் கொடுப்பார்கள்?

(மேலும் கட்டுரைகள் வரும்)

முனி வீடு

சிறுகதை : **கோமதி சுப்பிரமணியம்**

அழகிய பங்களா—'முனி வீடு' என்று கதை சொல்லப் பட்டதற்கும், காரணம் இருந்தது. அதுதான் இந்தக் கதை!

டாக்டர் வீட்டிலிருந்து எடுத்து வந்த ரோஜாவைப் பதியம் செய்யும் வேலையில் மும்முரமாய் ஈடுபட்டிருந்தேன். வியர்க்க விறுவிறுக்க மண்ணைக் கிளறிக்கொண்டிருந்த என் நிலை எப்படி இருந்ததோ? அங்கே வந்த முனிசாமி "நீங்க எழுந்திருங்க, சின்னம்மா! நான் பாத்துக்கறேன். ஒரு வார்த்தை சொல்லுவதை விட்டுப் போட்டு நீங்க எதுக்காகச் சிரமப் படவேண்டும்" என்று பரிவோடு கூறிய மொழிகளில் அன்பு தொனித்து நின்றது.

ஆனாலும் அபூர்வமாய்க் கிடைத்த அந்தப் பதியத்தை என் கைப்படவே நட்டு வைப்பதிலுள்ள திருப்தியை அனுபவிக்கவே அந்த வேலையில் முனைந்தேன். ஆனால் அவன் அத்தனை இலகுவில் விட்டுவிடவில்லை.

"ஐயா வருகிற நேரமாச்சு. அவர் வருகிற நேரத்திலே நீங்க மண்ணும் கையுமா நின்னீங்கன்னா எனக்குத் தான் வசவு. குழந்தையை எண்டா மண்ணுலே வேலை செய்யவிட்டேன்னு ஐயா கோபிப்பாரு..."

அவன் கூறியது உண்மை. அப்பா வரும் சமயம் நான் மண்ணோடு நின்று கொண்டிருந்தால், வசவு முனியனுக்கு மட்டுமல்ல; எனக்கும் தப்பாது. வேலைக்காரர்கள் செய்ய வேண்டிய வேலையில் நாம் குறுக்கிடக் கூடாதென்கிற கொள்கையுடையவர் அப்பா.

சிறிது நேரத்தில் அப்பாவின் வருகையை அறிவித்து, காரின் ஹாரன் சத்தம் கேட்டது. முனியன் வேலையாக இருந்தபடியால் நானே சென்று 'கேட்'டைத் திறந்துவிட்டுத் திரும்பினேன்.

"இருந்திருந்து இந்த வீட்டைத் தானா தேடிப் பிடித்தாய்? நீ வீடு மாற்றியிருக்கிறேன் என்றதும் வேறு நல்ல இடமாக்கும் என்றல்லவா நினைத்தேன்" என்ற குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

அப்பாவின் நண்பர் சந்தானம் காரிலிருந்து இறங்கிக்கொண்டிருந்தார்.

இந்த ஜில்லா முழுவதும் சுற்றினாலும் இதைப்போல் சௌகரியமான வீடு தேடுவது வெகு சிரமம். அதோடுகூட வாடகையும் கொள்ளை மலிவு. அந்த வீட்டின் வசதியைப் பற்றிப் பேசாதவர்களே கிடையாது. அப்படியிருக்க அவர் கூறியதும் எனக்குச் சுருக்கென்று தைத்தது.

"என் மாமா, வீட்டுக்கென்ன? இந்த வீடு உங்களுக்குப் பிடிக்க வில்லையா?" என்று நான் கேட்டு விட்டேன்.



வீட்டினுள் போவதா வேண்டாமா எனத் தயங்கியவரைப் போல் விழித்தார் சந்

தானம். "மேலே வாருங்கள்," என்று கூறிவிட்டு அப்பா மாடிக்குப் போய்விடவே வேறு வழியின்றி மாடிக்குச் சென்றார் சந்தானம்.

இதுவரை பல இடங்களையும் சுற்றி வந்துவிட்டோம். திருச்சியிலேயே பல இடங்களிலும் குடியிருந்து பார்த்துவிட்டோம். இதற்கு முன் குடியிருந்த இடங்களிலெல்லாம் ஒரு வசதியிருந்ததால் மற்ற வசதி இருக்காது. இடம் காற்றோட்டமாக இருந்தால் தண்ணீர் சரியாக வராது. தண்ணீர் தட்டில்லாமல் கிடைக்கிற இடமாக இருந்தால் வீட்டின் அமைப்போ அல்லது சுற்றுப்புற வசதியோ இராது. இதெல்லாம் ஒன்றாய் அமைந்தால் சூழ்நிலை சரியாக அமையாது. இப்படி எத்தனையோ அனுபவங்களில் அடிபட்டிருந்த எங்களுக்கு அந்த வீடு சகல விதத்திலும் பொருத்தமாக அமைந்து, எங்கள் எல்லோர் மனதிற்கும் திருப்தியளித்து வந்தது. அப்படிப்பட்ட வீட்டைச் சந்தானம் துச்சமாகப் பேசக் காரணம் என்ன? இதுவரை எங்களுக்குத் தோன்றாத எந்தக் குறையைக் கண்டுவிட்டார்? இதைக் கேட்டறியத் துடித்தது என் மனம். முனியனை இரண்டு கிரஷ் வாங்கி வரச் சொல்லி எடுத்துக்கொண்டு மாடிக்கு விரைந்தேன்.

நான் போன சமயம் எதையோ பேசிச் சிரித்துக்கொண்டிருந்தனர் இருவரும். கிரஷ்ஷை மேஜை மேல் வைத்துவிட்டு அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்துகொண்டேன். எனக்கு நன்றி தெரிவித்தபடியே பானத்தைப் பருகினார் சந்தானம்.

"மிஸ்டர் சந்தானம், உம்முடைய நன்றி அவளைச் சாராது. அவளது தேவையைப் பூர்த்தி செய்ய கிரஷ்ஷை ஒரு கருவியாகக் கொண்டு வந்தாள், அவ்வளவுதான்" என்று கூறிவிட்டு என்னைக் குறும்பாக நோக்கினார் என் தந்தை. "ஆமாம்!" என்பதற்கொப்பாகத் தலையைத் தாழ்த்திக்கொண்டேன்.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் கருதி "ஆமாம், மாமா. நீங்கள் இந்த வீட்டைப்பற்றிக் கூறினீர்களல்லவா! அதைத் தெரிந்து போகவே வந்தேன்" என்று கூறி முடித்தேன்.

"ஆறு மாதத்திற்கு முன் நான் வீட்டுக்காக அலைந்தபோது இந்த வீடு என் பார்வைக்கு வந்தது. வந்து பார்த்தவுடன் வீடு பிடித்துவிட்டதால், மறுவாரத்தில் வருவதெனத் தீர்மானமாகி, அட்வான்ஸெல்லாம் கொடுத்துவிட்டேன்."

"அதன் பிறகு என் வராமலிருந்துவிட்டீர்கள்" என்று இடைமறித்தேன்.

"வீட்டில் முனி நடமாடியிருக்கும். அதனால் வராமலிருந்திருப்பார். என்ன, அப்படித்தானே?" என்று அப்பா கூறவும் ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்து நின்றோம், நானும் சந்தானமும்.

"உங்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கிறது போலிருக்கே. அப்படியிருந்துமா நீங்கள் குடிவரத் துணிந்தீர்கள்..." என்றார் சந்தானம்.,

"ஒரு பைத்தியம் கிளப்பிவிட்ட புரளியைக் கேட்டு ஊரெல்லாம் பைத்தியமாக வேண்டுமா? முனியாவது ஒன்றாவது? சுத்தப் பயந்தாங்கொள்ளி...!" என்று கூறிவிட்டு விழுந்து விழுந்து சிரித்தார் அப்பா.

"இப்போ சிரிக்க மாட்டீங்க, பின்னே. நீங்க மட்டும் நேரிலே பார்த்திருந்தாலல்லவா தெரியும், அந்த வேடிக்கை..."

"அப்போ! நீங்க நேரிலேயே பார்த்திருக்கிறீர்கள் இல்லையா? அப்படீன்னா அந்த முனி எப்படியிருந்தது...?"

"அடேயப்பா! நெடிய பெரிய உருவமாய்க் கன்னங்கரேலென்று..." என்று கூறியவர் பயத்தால் உடல் நடுங்க ஒரு தரம் என்னைச் சுற்றிப் பார்த்துக் கொண்டார்.

"நேரில் பார்த்த சந்தர்ப்பத்தை விவரமாகக்கூறுகிறேன், கேளுங்கள். அப்பொழுதுதான் புரியும்" என்று கூறிவிட்டுத் தொடங்கினார் சந்தானம்.

"நானும் முதலில் உம்மைப் போலத்தான் பிறர் சொல்லில் அலட்சியமாக இருந்தேன். வாடகையெல்லாம் பேசி முடித்து அட்வான்ஸ் கொடுத்து முடித்த பிறகு இந்தச் சேதி என் காதில் விழுந்தது. இந்த வீட்டில் முனி நடமாடுகிறது என்பது ஒன்று. அதோடு இந்த வீட்டில் குடியிருந்த யாரோ ஒருத்தி தூக்குப் போட்டுக் கொண்டு செத்தாளாம். அவளது ஆவியும் இந்த வீட்டைச் சுற்றிச் சுற்றி வருவதாகவும் இன்னும் பலபலவும் பேசிக்கொண்டார்கள். அதனாலேயே இந்த வீட்டிற்கு வந்த யாருமே நிலைப்பதில்லையென்றும் கூறிக்கொண்டார்கள். இதையெல்லாம் கேட்கவும் பயம் ஒருபுறமிருந்தாலும், வசதியாகக் கிடைத்த வீட்டை விட்டு விடவும் மனமில்லை. எதையும் நேரில் ஆராய்ந்து விடலாமென்கிற ஓர் எண்ணமும் தோன்றவே வீட்டுக்காரனிடம் சாவியை வாங்கிக்கொண்டு ஒரே ஒரு நாள் மட்டும் தங்கிச் சோதிக்க விரும்பினேன். அதன்படி மறுநாள் மாலை ஆபீஸ் பியூனை மட்டும் எனக்குத் துணையாக அழைத்துக்கொண்டு வந்து இந்த வீட்டு முன் பக்கத்து அறையில் தங்கியிருந்தேன். தூங்கிவிடக் கூடாதென்பதற்காக ஒன்றுக்கு இரண்டாக நாலு 'கப்' காப்பியை வாங்கி அவனுக்கும் கொடுத்து நானும் குடித்துக் கொண்டதோடு, கைநிறையப் புத்தகங்களையும் வாரி வந்திருந்தேன்.

நான் வரும்போது இந்த வீட்டுக் காவற்காரன் மட்டும் திண்ணையில் படுத்திருந்தான். என்னைக் கண்டதும் மரியாதையாக எழுந்து நின்றவன் "நீங்கதான் இந்த வீட்டுக்குக் குடிவரப் போகிற எசமானுங்களா?" என்று கேட்டு விட்டு, போகக் கிளம்பினான். அவனுக்கு அந்த வீட்டைப் பற்றிய விவரங்கள் தெரிந்துதானேயிருக்கும்; அவனிடம் விவரமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமென்கிற எண்ணத்துடன் அவனை அழைத்தேன்.

"இன்றிரவு நாங்கள் இங்கே தங்கப்போகிறோம்" என்று கூறினேன்.

நான் அப்படிக் கூறவும் திடுக்கிட்டவனைப்போல் விழித்த அவன் "அம்மாடி...ராவுலே இங்கே படுக்கவா...இந்த வீட்டுச் சங்கதியொன்னும் எசமானுக்குத் தெரியாதா..." என்று கண்களை அகல விரித்தான்.

"இந்த வீட்டைப்பற்றிக் கூறுவதெல்லாம் உண்மைதானா...?"

"உண்மையில்லாமே பின்னே பொய்யா...வதந்தி இல்லாமக் கிளம்புமா சாமி...அனுபவத்திலே பாத்தவங்க சொல்லுவதுதானே..."

"நாங்க ரெண்டு பேர் இருக்கோம். நீயும் இருந்தாயானா மூணு பேராச்சு. ஒரு கை பார்த்துவிடலாமே. இத்தனை அழகான வீட்டிற்கு ஏன் இந்த அவப் பெயர் வழங்கவேண்டும்? அதைப் போக்க நாம் முயற்சி செய்து பார்க்கலாமே. உன் எஜமானனின் நலத்தில் உனக்கும் பங்கில்லையா?" என்று கூறினேன்.

"அப்பப்பா, அந்த வம்பு மட்டும் நமக்கு வேண்டாம், கடவுளே! நான் புள்ளை குட்டிக்காரன்" என்று கூறிவிட்டு அவன் நிற்காமல் ஓடிவிட்டான். வந்தது வரட்டுமென்று நானும் பியூனுமாகத் தனித்திருந்தோம். எத்தனை நேரம்தான் கொட்டக் கொட்ட விழித்துக்கொண்டிருக்க முடியும்? இரவின் போதையில் மெள்ள மெள்ள ஆடி வழிந்தான் சேவகன்.

'டிக் டிக்' என்ற கடிகாரத்தின் ஓசையைத் தவிர எவ்வித சந்தடியுமின்றி நிசப்தம் நிறைந்துபோயிருந்தது. மணி பனிரெண்டாகி அரைமணியும் ஆகியிருந்தது. நிசிவேளை தாண்டிவிட்டதால் இனிப் பயமில்லை

என்கிற தெம்பில் தலை நிமிர்ந்தபோது எதிரே நின்ற உருவத்தைக் கண்டு திடுக்கிட்டுப் போனேன்!

நெடிய பெரிய உருவம் ஒன்று ஜன்னலுக்கப்பால் என்னைத் தாண்டி அங்குமிங்கும் உலவிக்கொண்டிருந்தது. என் எண்சாண் உடம்பும் ஒரு சாணாகக் குறுகி நாற்காலிக்குள் ஒட்டிக்கொள்ள முடிந்தாலும் ஒட்டியிருக்கும். உடம்பெல்லாம் கிடு கிடுவென நடுங்கியதோடு, பயத்தால் உடல் பதற ஒரே வியர்வை வெள்ளமாகக் கொட்டிவிட்டது. தொண்டை கிழியக் கத்தினாலும் யாருமே உதவிக்கு வர முடியாத நேரம்! பியூனை எழுப்பலாமென்றாலோ அதற்கும் நா எழவில்லை. கண்களை இறுக மூடிக்கொண்டு மேஜையின் மீது முகத்தை கவிழ்த்துக்கொண்டபோது மேஜையின்மீதிருந்த கொத்துச்சாவி கரங்களில் தட்டுப்பட்டது. நல்ல வேளையாகக் கொத்துச் சாவி இருந்தது, நான் பிழைத்தேன்...!

பியூன் சொல்லியிருந்தான், கையில் இரும்பிருந்தால் எதுவுமே நம்மை நெருங்க அஞ்சுமென்று. தக்க சமயத்தில் அது நினைவிற்கு வரவே, கொத்துச் சாவியைக் கையிலெடுத்துக்கொண்டு பலம் கொண்ட மட்டும் குலுக்கினேன். என்ன ஆச்சரியம்! எதிரே நின்ற உருவம் ஓட்டத்தில் ஓடி மறைந்துவிட்டது."

"அன்று கண்ட உருவத்தை இன்று நேரில் கண்டால்கூட அப்படித்தான் பதறிப்போவீர், இல்லையா?" என்று கேட்டுவிட்டுச் சிரித்தார் அப்பா.

"இப்போ இப்படித்தான் சிரிப்பீர்கள். நீங்கள் மட்டும் ஒருதடவை அந்த உருவத்தை நேரில் பார்த்துவிட்டீர்களானால்..."

"ஒரு தடவையென்ன? ஒரு நாளைக்குப் பல தடவையும் கண்ணால் பார்த்துக்கொண்டுதானிருக்கிறேன்..." என்று அப்பா கூறியதும் தூக்கி வாரிப்போட்டது எனக்கு.

"எனக்குச் சொல்லவேயில்லையே, அப்பா...?" என்று ஆச்சரியத்தோடும் ஆத்திரத்தோடும் கேட்டேன்.

"தினமும் அந்த முனியனோடு பழகிக்கொண்டிருக்கிறீயே, அம்மா. அப்புறம் தனியாக வேறு சொல்ல வேண்டுமா...?"

"என்ன நான் பழகுகிறேனா... எனக்குப் புரியவில்லையே..."

"எப்பொழுது வேண்டுமானாலும் காண்பிக்க முடியும். ஏன், இப்பொழுதே வேண்டுமானாலும் கூப்பிடுகிறேன்" என்று தோட்டத்துப் பக்கம் எட்டிப் பார்த்தார்.

அதே சமயம் தோட்டப் பக்கமிருந்து இதுவரை கேட்டறியாத புதிய ஒலி ஒன்று எழுந்தது. 'ஜல் ஜல்' என்ற சதங்கையொலியைக் கேட்கவும், பதறியவராய் எழுந்து நின்ற சந்தானம் சுற்றுமுற்றும் நோக்கினார்.

"ஸார்...ஸார்...இதே ஒலிதான்...இதுதான் தூக்குப் போட்டுக்கொண்டவளின் ஆவி நடந்து வரும் சத்தம்...எனக்குப் பயமாகவே இருக்கிறது. நான்... வருகிறேன் ஸார்......" என்று பீதியுடன் புறப்பட்டார் சந்தானம்.

"இருங்கள் ஸார், மிஸ்டர் சந்தானம்! அன்று இரவோடு இரவாக முனியை நன்றாகப் பார்த்திருக்கமாட்டீர்கள். இன்று பகலில் கவனித்துப் பார்த்துவிட்டுப் போங்கள்" என்று கூறியவர் என்னையும் சந்தானத்தையும் அழைத்துத் தோட்டத்தைப் பார்த்து நின்ற ஜன்னல்புறம் கூப்பிட்டு நிறுத்திக்கொண்டார்.

"அடடே முனியா! நீ பதியம் வைத்த ரோஜாவையெல்லாம் மாடு தின்கிறதடா" என்று தோட்டத்தைப் பார்த்து அப்பா கத்தவும் நான் கீழே இறங்கி ஓடினேன். பாடுபட்டுப் பதியம்வைத்த ரோஜாவை மாடுதின்பதானால் மனம் சகிக்குமா?

"நின்ற இடத்திலேயே ஒரு வேடிக்கையைப் பார், விமலி!" என்று கூறிவிட்டு மீண்டும் மீண்டும் கத்தினார் அப்பா. மறுகணம் தோட்டத்துக் குடிசையிலிருந்து ஓடி வந்தது ஒரு உருவம்.

கன்னங்கரிய போர்வை உடல் முழுவதும் முக்காடிட்டுக்கொண்டிருந்ததை அகற்ற முடியாமல் சிரமப்பட்டுச் சுமந்து வந்து தோட்டத்தை நெருங்கிய அந்த உருவத்தைக் கண்டு திடுக்கிட்டு நின்றேன் நான். எங்கள் தோட்டக்கார முனியன்தான், சந்தானம் வர்ணித்த உருவத்தில் ஓடி வந்துகொண்டிருந்தான்.

வெளியே ஓடிவந்த அவன், எஜமான் தன்னை ஏமாற்றிவிட்டார் என்பதைத் தெரிந்துகொண்டு நாணித் தலைகுனிந்து உள்ளே ஓடிவிட்டான்.

"இதெல்லாம் என்ன, அப்பா!" என்றேன்.

"எல்லாம் நம்ம தோட்டக்கார முனியனோட வேலைதான், அம்மா. தானும் தன் குடும்பமும் பங்களாவில் வாழும் சுக வாழ்வை இழந்துவிட மனமில்லாமல் அவன் செய்த சூழ்ச்சிதானம்மா இந்த வேடிக்கையெல்லாம்" என்று கூறிவிட்டுச் சந்தானத்தை நோக்கினார்.

"இன்னும் நம்பிக்கையில்லை உங்களுக்கு. முதலிலே காரியத்திற்காக முனிவேஷம் போட்டுப் பழகியிருந்தான் முனிசாமி. இப்பொழுதும் சில சமயம் அந்த நினைவு வந்துவிடுவதுண்டு. அவனுக்காகக் குஷி கிளம்பிவிட்டால், எப்பொழுதாவது அந்தச் வேஷத்தைப் போட்டு மனைவியிடம் வேடிக்கை காண்பிப்பான். அந்தச் சந்தர்ப்பம் இப்பொழுது கிடைத்ததால் உங்களுக்கு உண்மையை விளக்க முடிந்தது.

சலங்கையொலி காதில் படவே அவன் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்பதை ஒருவாறு ஊகிக்க முடிந்தது. வழக்கம்போல் என் குரல் இருந்தால், அவன் வேஷத்

தைக் கலைத்து விட்டுத்தான் வெளியே வருவான். அதற்காகத் தான் விமலாவின் அருமையான ரோஜாப் பதியத்தை மாட்டுக்கு இரையாக்கினேன். எப்படி என் யோசனை...!" என்று பெருமிதத் தோடு கூறி முடித்தார் அப்பா.

"ஆமாம்; இதையெல்லாம் எப்ப டிக் கண்டு பிடித்தீர்கள்?"

"சர்க்காரில் எனக்கெனக் கொடுத்திருந்த பகுதி வசதியாக இல்லாததால் வேறு இடம் தேடி னேன். அப்பொழுதுதான் இந்த வீட்டைக் கண்டுபிடித்துக்கொண்டு வந்தார், குமாஸ்தா பூரணலிங்கம். இடத்தைப் பார்த்ததும் பிடித்து விடவேஅதையே முடித்து விடுவ தென்ற தீர்மான த்துடன் ஆபீசிற் குக் கிளம்பி னேன். வீட்டின் காவற்காரன் வெளிக்கதவுப்பக் கம் வந்ததும், ஏதோ கூறத் தயங்கு பவனைப் போல் விழித் தான்.

"என்னப்பா விஷயம்? என்ன வேண்டும்?" என்று கேட்டபோது சிறிது நேரம் சொல்லுவதா, வேண்டாமா என் பதைப்போல் தயங்கினான்.

"எசமானைப் பார்த்தால் ரொம்ப நல்லவங்களைபோலத் தோணுது."

"முதல்லே யாரைப் பார்த்தாலும் அப்படித்தானப்பா தோன்றும். நெருங்கிப் பார்த்தால்தான் அவரவர் கள் குணத்தை அறியமுடியும். அதிருக்கட்டும், எதற்காக என்னைப் புகழ்கிறாய்?"

"எசமானைப் பார்த்தால் புள்ளே குட்டிக்காரங்கபோலத் தோணுது! இருந்திருந்து இந்த வீட்டுக்குக் குடி வரப்போகிறீங்களேன்னுதான்..."

"என், இந்த வீட்டுக்கு என்னப்பா. நல்ல காற்றோட்டம் நிறைந்து வசதி யாகத்தானே யிருக்கு..."

"அதெல்லாம் மெய்தானுங்க..."

"அப்புறம்...?"

"இந்த வீட்டிலே ரொம்ப கால மாக ஒரு முனி நடமாடுகிறதாகக் கேள்வி...?"

"கேள்விதானே...நீ பார்த்ததில் லையே..." என்றேன்.

"நல்லாச் சொன்னீங்க போங்க. இந்தக் கண்ணாலே எத்தனையோ தடவை பார்த்ததினாலேதான் சொல்ல வந்தேனுங்க; அதோடுகூட இந்த வீட்டிலே குடியிருந்த பொம் பளை ஒருத்தி தூக்குப் போட்டுக் கிட்டு செத்துப்போனாளாம்."

"அவ ஆவி யும் சுற்றிச் சுற்றி வருது. அவ்வ ளவுதானா, இன் னும் ஏதாவது இருக்கா...அப் படி ஏதாவது இருந்தாலும் நான் இந்த வீட் டிற்கு நாளன் றைக்கு வரப் போகிறேன். அதற்கப்புறம் எனக்குக் காண் பிப்பாயல்லவா?" என்று குறும் பாகக் கேட்டுவிட்டுக் காரிலேறிக் கொண்டேன். அவனிடம் விளை யாட்டாகப் பேசிச் சமாளித்து விட் டேன். ஆனால் அவன் கூறியவார்த் தைகள் என் மனதில் குழப்பத்தை உண்டுபண்ணிவிட்டிருந்ததால், ஆபீஸ் சாவியை எங்கேயோ தொலைத்துவிட்டேன். ஆபீஸ் வாச லில் போய் நின்றதும்தான் அதை உணர முடிந்தது. அதை எடுத்து வருவதற்காக மீண்டும் காரை எடுத்துக்கொண்டு அந்தப் பங்களா வுக்குப் போனேன். காரை வெளி யிலேயே நிறுத்திவிட்டு நான்மட்டும் இறங்கிப் போய் சாவியை வைத்த இடந் தெரியாமல் தேடினேன்.

இயற்கை மனிதனுக்கு இரண்டு காது களும், இரண்டு கண்களும் கொடுத் திருக்கிறது. ஆனால், நாக்குமட்டும் ஒன்றுதான். பேசுவதைக் காட்டிலும் பார்ப்பதும், கேட்பதும்தான் அதிகம் இருக்கவேண்டும் என்பதே அதன் அர்த்தம்.

—சாக்ரடீஸ்

பக்கத்து அறையில் முனியன்—அவன் மனைவி இருவரின் பேச்சுக் குரலும் கேட்டது.

“மச்சான், கடைசியிலே நீ தோத்துத்தான் போனே. அந்த ஆளு என்ன அழுத்தமா பேசுறாரு, பாரேன். அவரு கிட்ட உன் ஜம்பம் பலிக்காதுபோலிருக்கே...!”

“அப்படியா நினைச்சுப் போட்டே. இந்த முனியனை யாருன்னு நினைச்சே. ஐயா வந்த நாலாவது நாளிலே அலறிப் போட்டுக்கிட்டு ஓடிப் போகாட்டா, நான் முனியனில்லே...”

“மச்சான், நீ முனி வேஷம் போட்டியானு எனக்கும்கூடப் பயமாயிருக்கு...”

“என், நீமட்டுமென்ன, தூக்குப் போட்டுக்கிட்ட பொம்பளை ஆவிரூபத்திலே வந்தியானு எப்பேர்ப்பட்ட முனியும் அலறியடிச்சுகிட்டு ஓடிப் போகவேண்டாமா...”

“ஆமாம், இனிமே நீங்க இருவரும்தான் ஒருவரைப் பார்த்து ஒருவர் அலறி அடிச்சுகிட்டு ஓடணும். ஆனல் நான் அதுக்குப் பயந்து ஓடப்போவதில்லை” என்று கூறிக்கொண்டு அவர்கள் முன் நான் சென்றபோது தூக்கி வாரிப் போட்டுக்கொண்டு நின்றனர் இருவரும்.

“எசமான்......எசமான்......இந்த ஏழைகளை நீங்கதான் காப்பாத்தணும். இவரு எதையோ மனசிலே வச்சிக்கிட்டு இப்படியெல்லாம் புத்தி கெட்டதனமா நடந்துட்டாரு நீங்க பெரிய மனசு பண்ணி விசயத்தை வெளியிடாம இந்த ஏழைகளைக் காப்பாத்தணும்” என்று முனியனின் மனைவி என்னிடம் மன்றாடினள்

“ஆமாம், எசமான் இந்த வீட்டுக்கு யாராவது குடிவந்தா எங்களை வீட்டைவிட்டுத் துரத்திவிடுவாங்க. அதோடுகூட தோட்டத்திலே விளைகிற காய் கறிகளை விற்றுச சீவனம் செய்கிற பொழைப்பும் கெட்டுப் போகும்னு நாங்களாகக் கிளப்பி விட்ட புரளிதானுங்க இது தெரியாத்தனமாச் செய்துட்ட குற்றத்தை மன்னிச்சு எசமான் எங்களைக் காட்டிக் கொடுக்காமக் காப்பாத்தணும்” என்று கெஞ்சினன் முனியன்.

“உன் சுய நலத்திற்காக, உன் எஜமானனுக்கு எத்தகைய துரோகம் இழைத்துவிட்டாய்...?”

“ஆமாம் எசமான், அதை இப்பத்தான் உணர்ந்தேனுங்க. நாலு எழுத்துப் படிக்காத குற்றந்தானுங்க அதுக்கெல்லாம் காரணம். எசமான், இந்த வீட்டுக்கே குடிவந்து இந்த ஏழையை உங்கள் வீட்டுத் தோட்டக்காரனுக ஏற்றுக் கொள்ளவேணுங்க” என்று கூறிக் கண்ணும் கண்ணீருமாகக் காலடியில் விழுந்து கிடந்த முனியனை மன்னிக்காமல் என்ன செய்யமுடியும்...?” என்று கூறி முடித்தார் என் தந்தை.

****

முல்லையிலே சிரித்தபடி
தென்றலிலே சொக்கி,
முன்னடியும் பெயர்க்காமல்
இன்னும் இருக்கின்ற
பொல்லாத மாலைக்குப்
போக்கிடமோ இல்லை!

—பாரதிதாசன்

****

அதேசமயம் அவ்விடம் வந்த முனியனை ஏற இறங்க நோக்கிய சந்தானம் “ஆம், அதே உருவம். நான் தங்கியிருந்த இரவு என்னுடன் தங்க மறுத்துவிட்ட அதே ஆசாமிதான்” என்றார்.

“அவன் உங்கள் சொல்லைத் தட்டாமல் உங்களுடன் தங்கியிருப்பான். ஆனல் இந்த வீட்டிலுள்ள முனி அவனைத் தங்கவொட்டாமல் பயமுறுத்தி அனுப்பியிருக்கும்......” என்று அப்பா கூறியபோது, தலையைத் தாழ்த்திய வண்ணம் சிரித்தவாறே அவ்விடம் விட்டகன்றான் முனிசாமி. ★

Printed and Published by PR. AL. M. N. Narayanan for Ponni Ltd., at Ponni Achakam, 16, Seni Amman Koil Street, Tondiarpet, Madras-21.
Editor: K. Appadurai M. A.

208417

ரசிகர்களுக்கு ஓர் நல்வாய்ப்பு!

கீழ்க்கண்ட ஆறு இலக்கியப் படைப்புகள் உங்கள் இலக்கிய ஆர்வத்துக்குப் பாத்திரமாக வேண்டுமேனில், இன்றே ரூ. 3 அனுப்பி வைக்கவும்.

உலக அரங்கில்
(சிறுகதைகள் — டி. கே. சீனிவாசன்)

கடல் முத்து
(சிறுகதைகள் — எஸ். ஆறுமுகம்)

நினைவுச் சின்னம்
(சிறுகதைகள் — இளமைப்பித்தன்)

தபாலாபீஸ் விநோதங்கள்
(நகைச்சுவைக் கட்டுரைகள் — க. சண்முகசுந்தரம்)

கம்பன் கெடுத்த காவியம்
(விமர்சன நூல் — மு. அண்ணாமலை)

இலக்கியச் சந்தையில்
(ஆராய்ச்சித் தொகுப்பு — மு. அண்ணாமலை)

விவரங்கட்கு :

பொன்னி லிமிடெட்,

த. பெ. எண். 1165 சென்னை — 21

பொன்னி

பொங்கல் மலர் – 1953

'பொன்னி' பொங்கல் மலர் என்ருல் அதன் இலக்கியத் தரமே தனி. பல்வேறு திசைகளினின்றும் குரல் தரும் இலக்கியக் குரல் இது!

இதுவரை இலக்கியச் சந்தையில் வெளிவந்திருக்கும் பலதிறப்பட்ட மலர்களைவிட 'பொன்னி' பொங்கல் மலர் இவ்வாண்டு பல வகையிலும் சிறப்புற்றிருக்கும்! பொன்னியின் இதயக் குரல் இது!